# அது வேறு மழைக் காலம்

CONNEMARA PUBLIC LIBRARY
4 - FEB 1999
MADRAS-600 008.

ஸ்டெல்லா புரூஸ்

கலைஞன் பதிப்பகம்
10 கண்ணதாசன் சாலை
தியாகராயநகர்
சென்னை 600 017

# அது வேறு மழைக் காலம்

## 1

திரைப்படவுலகில் நுழைய வேண்டும். நல்ல புகழ் பெறவேண்டும் என்கிற ஆர்வத்தில் தமிழ்நாட்டின் சிறு சிறு நகரங்களிலும் கிராமங்களிலும் இருந்து சென்னையை நோக்கி நிறைய இளைஞர்கள் கிளம்பி ஓடிப்போவது சமீபத்தில்தான் ஏற்பட்டிருக்கிற வாழ்வுமுறை என்பதில்லை. 1962-ம் வருடம் என்னுடைய பதினெட்டாவது வயதில் சினிமா ஆர்வத்துடன் நானும்தான் எங்கள் மதுரை மாவட்டம் பட்டிவீரன்பட்டி என்ற விவசாயக் குடும்பத்திலிருந்து ஓடிப்போயிருக்கிறேன். ஆனால், நான் ஓடியது சென்னைக்கு அல்ல... பம்பாய்க்கு...!

சின்ன வயதிலிருந்தே பம்பாய் என்னுடைய மனவெளியில் ஒரு மாயாபஜார் போல அழகுடன் பதிந்து கிடந்தது. அந்தப் பதிவுக்கு மிக முக்கியமான காரணம் காதல் தூவப்பட்ட இனிமையான இந்தி சினிமாக்கள்தான்! அதிலும் குறிப்பாக, ராஜ்கபூர் நடித்த படங்களின் காதல் பாடல் காட்சிகள் விசேஷமாகப் பதிந்து போயிருந்தன. திரைப் படங்களில் ராஜ்கபூர் தாங்கிய கதாபாத்திரங்கள், என்னுடைய மனோவடிவங்களின் நிஜமான பிரதிபலிப்புகளாகவே எனக்குத் தெரிந்தன. உண்மையில் நான் ஒரு பெண்ணாகப் பிறந்திருந்தால் ராஜ்கபூரைத்தான் காதலித்திருப்பேன். அப்படிப்பட்ட மென்மையான கதாநாயகன்

அவர். அவருடைய காதல், அவரின் சோகம், அவருக்கே உரித்தான அப்பாவித்தனம் போன்ற எல்லாமே என் மனத்தை மிகவும் தொட்டு விட்டிருந்தன.

ஆரம்பப் பள்ளி வாழ்க்கையே எனக்கு மதுரையில் தான் என்பதால், இந்தி சினிமா பார்ப்பதற்கு மிகவும் வசதியாக இருந்தது. ராஜ்கபூர் படங்களை எல்லாம் பள்ளிப் பருவத்திலேயே பார்த்துப் பார்த்துப் பிரமித்துப் போயிருந்தேன். ராஜ்கபூர் படங்களில் என்னை மிகவும் ஈர்த்த விஷயம் வேறொன்றும் இருக்கிறது. சோகக் காட்சிகளில் சில சமயங்களில் ராஜ்கபூர், அவர் காதலிக்கும் கதாநாயகிகளிடம் போய் அவர்களின் பெரிய பெரிய மார்பகங்களின் மேல் சாதுவாக முகத்தைப் புதைத்துக் கொள்வார். அந்தக் காட்சியைப் பார்க்கப் பார்க்க எனக்கும்கூட அதேபோல முகத்தைப் புதைத்துக் கொள்ள வேண்டும் போலிருக்கும்.

அமெரிக்கன் காலேஜில் பி. ஏ. முதலாண்டு நான் சேர்ந்தவுடன், எனக்குப் பெரிய தகுதி வந்துவிட்டாற் போல் இருந்தது. நடிகைகள் நர்கிஸுக்கும், மதுபாலாவுக்கும் என்னைப் பற்றி எக்கச்சக்கமாக எழுதி, நிறைய காதல் கடிதங்களை போஸ்ட் செய்ய ஆரம்பித்து விட்டேன். நான் எழுதிய கடிதங்களுக்கு அவர்களில் யாரிடமிருந்தாவது பதில் வருகிறதா என்று இரண்டு, மூன்று வாரங்கள் காத்திருந்து பார்ப்பேன். ஒரு பதிலும் வராது. ஆனால், அதற்கெல்லாம் கவலைப்பட மாட்டேன். என் காதலை அவர்களுக்கெல்லாம் தெரிவித்துவிட்டதே பெரிய மனநிறைவைத் தரும் எனக்கு. அவர்களுடைய காதல் கிடைக்க வேண்டுமே... எத்தனை பேருக்குக் கிடைக்கும் அது?

ஆனால், யாருக்குக் கிடைத்தாலும் எனக்குக் கிடைக்காது என்பது என் வகுப்புத் தோழர்களுடைய அபிப்பிராயம். அவர்களுடைய அபிப்பிராயத்துக்குக்



காரணம் என்னவென்றால், அப்போதெல்லாம் நான் ஆள் கொஞ்சம் குள்ளமாக இருந்தேன். பதினெட்டு வயது வரை என் முகத்தில் மீசை வளர்வதற்கான அறிகுறி கொஞ்சம் கூடக் கிடையாது. அது இருக்கட்டும். ஆள் கொஞ்சம் குள்ளமாக இருந்தால் எவளும் காதலிக்க மாட்டாள் என்று எந்த சாஸ்திரத்தில் எழுதி வைத்திருக்கிறதோ இவர்களுக்கு? ஆனால், ஒரு விஷயம்— கொஞ்சம் கறுப்பாக இருந்தாலும், நான் அழகான பையன்!

''ஹரி, நீ ஆள் கொஞ்சம் அழகுதான்... ஆனா, குள்ளமா இருக்கியேடா...''

''நெப்போலியன் கூடக் குள்ளம் தானாம்!''

''நீ கறுப்பா வேற இருக்கியே...''

''ஏன், கிளியோபாட்ராவே கறுப்புனுதான் சொல்லிக்கிறாங்க!''

''அதென்னமோ... நீ கொம்புத்தேனுக்கு ஆசைப் படறே... அவ்வளவுதான் சொல்லுவோம்...''

''எதுடா கொம்புத்தேன்?''

''அதான் நம்ம வடநாட்டு சினிமா நடிகைங்க...''

''சீ! அது ஒரு அபிமானத்ல சொல்ற வார்த்தைடா... இந்திப் பட நடிகைங்க மேல எனக்கு ஒரு பயங்கரமான லவ்வே உண்டு! என்னையும் ஒரு வடநாட்டு நடிகை, அதே மாதிரி பயங்கரமான லவ் பண்ணணுங்கிற ஆசையும் உண்டு. ஆனா, அதுக்காக லவ் பண்ணினா ஒரு இந்தி நடிகையைத் தான் லவ் பண்ணணுங்கிற கண்டிஷனும் கிடையாது. இந்தி நடிகை மாதிரியே இருக்கிற ஒரு டாப்க்ளாஸ் வடநாட்டுக் காரியோட காதல் கிடைச்சாக் கூட, அதுவே போதும் எனக்கு!''

''வடநாட்டுக்காரியைப் போய் லவ் பண்ணணும்னு ஆசைப்படறதெல்லாம் நடக்கிற காரியம் கிடையாது

தெரியுமா... அவளுங்க எல்லாம் செம கலர்ல இருக்கிறவளுங்க! ஆனா நாமோ செம கறுப்பு!''

''டேய், சும்மா உங்க இஷ்டத்துக்குப் பேசாதீங்கடா, நான் ஒண்ணும் செம கறுப்பு இல்லை!''

''சரி, செம கறுப்பு இல்லை... ஆனா, நீ கறுப்பா... இல்லையா? அதைச் சொல்!''

அதை ஏன் நான் அவர்களிடம் சொல்ல வேண்டும்? அதனால் பேசாமல் இருந்து விடுவேன். ஆனால், நண்பர்கள் அப்படியிருக்க மாட்டார்கள். தொடர்ந்து பேசுவார்கள்.

''அதனாலதான் சொல்றோம். அவளுங்கள்லே எவளும் வந்து உன்னை லவ் பண்ணப் போறதே கிடையாது. கறுப்பா இருக்கிற பயல்களைக் கண்டாலே, அவளுங்களுக்குக் கடுப்படிக்கும்டா ஹரி! மதிக்கவே மாட்டாளுங்க நம்மையெல்லாம்...''

''நீ போய் வடநாட்டுக் குட்டிங்களை லவ் பண்ணணும்னு நெனைச்சா எப்படிடா ஹரி? பேசாம நம்ம லோக்கல்லயே ஒருத்தியைப் பாரு... ட்ரை பண்ணு. அதுக்கு வேணும்னா நாங்களும் உனக்கு ஹெல்ப் பண்றோம்...''

''லோக்கல்னா, சொக்கிக்குளம் மாதிரியான பெரிய பணக்கார ஏரியாவிலும் நீ ஜோரா ட்ரை பண்ணலாம்! ஏன்னா, நீயும் வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பையன். உங்க அப்பாவுக்கும் காபி எஸ்டேட், அது இதுன்னு நிறைய இருக்கு...''

''சரி, அதெல்லாம் கிடக்கட்டும்... வடநாட்டுக்காரி வடநாட்டுக்காரினு கெடந்து பெரிசா நீ அடிச்சுக்கிறியே தவிர, இன்னிக்கு வரைக்கும் எந்த வடநாட்டுப் பக்கமும் நீ உன் காலை ஒரு அடிகூட எடுத்து வெச்சது கிடையாது...''



''வடநாடா...?! இவன் இந்தத் திண்டுக்கல் தாண்டினது கிடையாது!''

''அதானே...''

என் நண்பர்கள் சுட்டிக்காட்டிய உண்மை புரிந்தது எனக்கு. திண்டுக்கல்லைக்கூடத் தாண்டாத பையனென்று என்னைச் சொன்னார்களே, அது எத்தனை சத்தியமான வார்த்தை! இப்படி திண்டுக்கல்லைக்கூடத் தாண்டாமல் இருப்பதாலேயே, குறைந்தபட்சம் ஒரு வடநாட்டுப் பெண்ணின் காதலைப் பெறுவதும் நண்பர்கள் சொன்னது போல் சாத்தியமில்லாத விஷயம்தானா? யோசித்து யோசித்துப் பார்த்தேன். சாத்தியம் இல்லாதது போலத்தான் தெரிந்தது உடனே எனக்கு மிகவும் ஏமாற்றமாகவும் திகைப்பாகவும். இருந்தது. பிடித்தமான அந்த நடிகைகளையும், அவர்களெல்லாம் வாழ்கிற பம்பாய் நகரையும் வருத்தத்தோடும், ஏக்கத்தோடும் நினைத்துப் பார்த்தேன்.

பம்பாய் வீதிகளில் ராஜ்கபூர் முழங்கால்களுக்கு உயர்த்திவிட்ட பாண்ட்டுடன் நர்கீஸுடன் பாடித் திரிவது போன்ற பிரமை என்னுள் ஒரு காதல் வரைபடம் போலவே வரையப்பட்டிருந்தது. பம்பாய் நகரத்தின் வானத்தில்கூட மதுமதி பாடல்களும், சாந்தாராமின் 'ஜனக் ஜனக் பாயல் பாஜே' படப்பாடல்களும் தான் ஒலித்துக் கொண்டிருக்கும் என்றெல்லாம் நான் நம்பிக் கொண்டிருந்தேன்.

இதற்கெல்லாம் சம்பந்தமே இல்லாத சூழலின் வேறோர் உலகில்தான் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். தொடர்ந்து இந்த வேறோர் உலகத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக்கவும் போகிறேனா?

இந்தக் கேள்வியை ஒரு வாரத்துக்கும் மேலாக என்னைக் கேட்டுக்கொண்டே இருந்தேன். இல்லை என்ற பதில் கிடைத்தது. நான் பம்பாய் மண்ணை மிதித்தாக வேண்டும். அதற்கு நான் உடனே செய்யவேண்டியது...

என்னுடைய வகுப்புத் தோழர்களுக்கு முதலில் நான் இந்தச் சுண்டைக்காய் திண்டுக்கல்லைத் தாண்டிக் காட்டுவது தான்!

இந்த இந்தி சினிமா ஆசை மட்டுமல்ல... மற்ற சில ஆசைகளும்கூட என்னுள் எப்படித் தோன்றின? எவரால் தோன்றின? யோசித்து யோசித்துப் பார்த்தேன். நதிகள் தானாகத்தான் தோன்றுகின்றன. யாராலும் உருவாக்கப் படுவதில்லை. அதுபோல, ஆசைகளும் தானாகவேதான் உதயமாகின்றன. என் ஆசைகள் நான் உருவாக்கிய தில்லை.

அப்பா என் விருப்பத்துக்கு மாறாகப் பேசுவார் என்பது நான் எதிர்பார்த்த சமாசாரம்தான்.

“பைத்தியம்தாண்டா பிடிச்சிருக்கு உனக்கு... ஏண்டா நம்ம குலம் என்ன... கோத்திரம் என்ன... குடும்ப அந்தஸ்து என்ன... பேசாம உன்னோட படிப்பைப் படிச்சு முடிச்சுப் பெரிய ஜில்லா கலெக்டர் ஆகறதுக்கான வழியைப் பார்ப்பியா... என்னமோ சினிமா கினிமானு உளறிக்கிட்டு இருக்கியே... உன்னைப் பத்தி நான் என்னென்னவோ கனவெல்லாம் கண்டுக்கிட்டு இருக்கேன்டா ஹரி... அநியாயமா என் ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டு டாதே... இதுவரை நம்ம பரம்பரையிலேயே யாருக்கும் இல்லாத இந்த சினிமா ஆசை உனக்கு மட்டும் எப்படிடா வந்தது? போ... வேணும்னா ரெண்டு சினிமா பார்த்துட்டு வந்து புஸ்தகத்தை எடுத்து வெச்சு ஒழுங்கா மரியாதையா படி...”

இது என்ன நியாயமென்று எனக்குத் தெரியவில்லை. என்னுடைய ஆசையை நான் நிறைவேற்றிக் கொள்ளக் கூடாதாம்... ஆனால், இவருடைய ஆசையை மட்டும் தப்பாமல் நான் நிறைவேற்றி வைக்க வேண்டுமாம். இந்த லட்சணத்தில் ‘எப்படி நம்முடைய பரம்பரையில் யாருக்குமே



வந்திராத சினிமா ஆசை உனக்கு மட்டும் வந்தது?’ என்ற பெரிய கேள்வி வேறு...

இதிலிருந்தே தெரிந்து கொள்ள வேண்டாமா... அவருடைய பரம்பரைக்கும், எனக்கும் எந்தத் தொடர்புமே கிடையாதென்று? அவர்களெல்லாம் காபிச் செடிகள்! நான் காபிச் செடிகளின் மத்தியில் வளர்ந்துவிட்ட ரோஜாச்செடி! ரோஜாச் செடியில் என்ன பூ பூக்கும்? ரோஜாப்பூதானே பூக்கும்... அதெல்லாம் முடியாது, ரோஜாச் செடியிலும் காபிக் கொட்டைதான் காய்க்க வேண்டுமென்று சொன்னால்— அதென்ன நடக்கிற காரியமா?!

பேசாமல் பம்பாய் கிளம்பிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்தேன். ஆனால், எப்படிக் கிளம்புவது என்றுதான் தெரியவில்லை. மனசில் பெரிய பெரிய ஆசை யெல்லாம் இருந்தாலும், பம்பாய் கிளம்பிப் போவதற்குச் சற்று மருட்சியும் எனக்குள் இருக்கத்தான் செய்தது. என் இஷ்டத்துக்கு பம்பாய் போனால், அங்கு செலவு வேறு நிறைய ஆகுமே... என்ன பண்ணுவேன்? வேறு எதற்குச் செலவழிக்காவிட்டாலும், சாப்பாட்டுக்குச் செலவழித்துத் தானே ஆகணும்? குறைந்தது ஒருநாளைக்கு மூன்று வேளை சாப்பிட்டாக வேண்டும் எனக்கு அதற்கெல்லாம் மேல் இடையிடையே நொறுக்குத்தீனி வேறு வேண்டியிருக்கும், அதற்கெல்லாம் பணம்? கஷ்டம்தான். பர்ஸாத் பற்றியும், பர்ஸாத் கிராட் பற்றியும்தான் யோசித்துக் கொண்டிருக் கிறேனே தவிர பணத்தைப் பற்றி யோசித்தே பார்த்திருக்க வில்லை. எனக்கோ ஒரு நயாபைசா சம்பாதிக்கத் தெரி யாது. பின் எப்படி பம்பாயில் குப்பை கொட்டுவது?

முதலில் ஏதாவது சினிமா ஸ்டூடியோவில் போய்ச் சின்ன வேலையாக இருந்தாலும் பரவாயில்லையென்று தேடிக் கொள்ள வேண்டியதுதான் என நினைத்துக் கொண் டேன். அப்புறம் படிப்படியாக முன்னேறிக் கொள்ளலாம்!

எத்தனையோ பெரிய நடிகர்கள் ஆரம்ப காலத்தில் ஒரு வேளைச் சாப்பாட்டுக்கே தாளம் போட்டவர்கள் தானாமே? எனது சரித்திரமும் அந்த மாதிரியே இருந்து விட்டுப் போகட்டும்...

'பிரபல நடிகர் ஹரி, பாக்கெட்டில் பத்து ரூபாயோடு பம்பாய்க்குப் புறப்பட்டு வந்தவர்' என்று பத்திரிகைகளில் எழுதுவார்கள்! ஆனால், இதெல்லாம் ஒரு பேச்சுக்குத் தான். உண்மையில் என்னால் இப்படியெல்லாம் பாக்கெட்டில் வெறும் பத்து ரூபாயை வைத்துக் கொண்டு பம்பாய்க்கு ரயில் ஏறிவிட முடியாது. ஆகையால், அப்பாவின் மனத்தை எப்படியாவது மாற்றி, அவரிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு கிளம்பினால்தான் அவரிடம் பணம் பெறமுடியும். அவருடைய சம்மதம் இல்லாமல் கிளம்பினால், அவருடைய பணமும் இல்லாமல்தான் கிளம்பியாக வேண்டும். எனவே, மறுபடியும் அப்பாவிடமே சரணடைந்தேன். திரும்பத் திரும்பக் கெஞ்சினேன். நிஜமாக அழுதும் பார்த்தேன்!

அப்பா மசிந்தே கொடுக்கவில்லை. பாறை போல் கரைக்கவே முடியாதவராக இருந்தார். ஆனால், இவர் பாறை போல இருக்கிறார் என்பதற்காக, என் ஆசைகள் வடிந்து போய்விடுமா என்ன? அதுவும் இல்லாமல் எந்த ஒரு நதியின் ஓட்டத்தையும் ஒரு பாறை குறுக்கே நின்றா தடுத்து நிறுத்திவிடும்? பாறையை ஒரு சுற்றுச் சுற்றிக் கொண்டு அழகாக அல்லவா நதி அதன் பாட்டுக்கு ஓடும்! சாதாரணமாக ஓடுகிற நதியின் இயல்பே அது என்றால், என்னுடைய ஆற்றில் வெள்ளம் வேறு வந்துவிட்டது! கேட்க வேண்டுமா? வெள்ளம் கரைகளையெல்லாம் உடைத்துவிட்டுக் கிளம்பிவிட்டது! அதாவது, என் ஆசை வெள்ளம் அப்பாவின் பணப்பெட்டியை உடைத்து ஒரு வழி பண்ணிவிட்டுக் கிளம்பிவிட்டது!



மயிலே இறகு போடு என்று கேட்பதும், பம்பாய் போவதற்குப் பணம் கொடுங்கள் என்று அப்பாவிடம் கேட்பதும் ஒன்றுதான்... ஆகையால் அப்பாவின் பணப் பெட்டியிலிருந்து யாருக்கும் தெரியாமல் இரண்டாயிரம் ரூபாய் எடுத்து வைத்துக் கொண்டு நாளும் பார்க்காமல், நேரமும் பார்க்காமல். எவரிடமும் ஒரு வார்த்தைகூடச் சொல்லிக் கொள்ளாமல் சிறிய பையில் சில உடைகளை மட்டும் சேகரித்துக் கொண்டு தைரியமாக ஒரு நாள் திண்டுக்கல் நகரைத் தாண்டிவிட்டேன்!

## 2

இனி நடக்கும் அத்தனை சம்பவங்களும் என்னைப் பொறுத்தவரையில் மிகவும் நீளமான ஒரு இந்தி சினிமாவின் பல்வேறு காட்சிகளின் தொகுப்புதான். பம்பாய் நோக்கி பாம்பே எக்ஸ்பிரஸ் புறப்பட்டபோது ஒரு சினிமா ஆரம்பித்துவிட்டது போலத்தான் இருந்தது. சினிமா ஆசையுடன் அப்பாவி இளைஞனாக இன்னொரு ராஜ்கபூர் அவரின் பட்டிவீரன்பட்டி கிராமத்திலிருந்து தன்னந்தனியாகக் கிளம்பிவிட்டார். இனி அவருடைய வாழ்க்கையில் என்னவெல்லாம் நடப்பதற்கு இருக்கிறதோ?!

ரயில் பயணம் நெடுக இந்தப் பிரமைதான் எனக்கு. ஏனோ தெரியவில்லை, இடையிடையே ஃப்ளாஷ்பேக் போல பட்டிவீரன்பட்டியும் அதன் பங்குக்கு ஞாபகத் திரையில் வந்து வந்து போனது.

எங்கள் வீட்டு வாசலில் எப்போதும் நிற்கும் ஜீப், மலைத்தோட்டத்தில் கொத்துக் கொத்தாய்த் தொங்கும் காபிப் பழங்கள், வேட்டைக்குப் போக அப்பா வைத்

திருக்கும் பெரிய ரைஃபின்... ஒன்றுவிடாமல் நினைவில் தெரிந்தன.

உடனே ஒரு படத்தில் ராஜ்கபூருக்கு பத்மினி துப்பாக்கி சுட சொல்லித் தருகிற காட்சியும் ஞாபகத்துக்கு வந்தது. வழக்கம்போல அப்பாவிக் கிராமத்துக்காரனாக வருவார் ராஜ்கபூர் அந்தப் படத்தில்... துப்பாக்கியை எப்படிப் பிடிப்பது என்று பத்மினி கற்றுத் தரும்போது அவரது நெஞ்சுப் பகுதியில் ராஜ்கபூரின் முழங்கைகள் பட்டுக் கொண்டேயிருக்கும். ஆனால், அவருக்கு அதை யெல்லாம் உணரத் தெரியாது. அத்தனை அப்பாவி பாவம்... எனக்கும் பெண்ணிடத்தில் அந்த மாதிரி அப்பாவி இளைஞனாக நடந்து கொள்ளவே விருப்பம். முரடன் போலெல்லாம் பெண்களிடம் நடந்து கொள்ளக் கூடாது! பெண்கள் பாவம்... மென்மையானவர்கள்!

ரயில் பூனா தாண்டியதும் மலைச்சரிவுகளின் பசுமை யான தோற்றங்கள் கனமழைக் காட்சியாக மாறியது. என்னை வரவேற்க ராஜ்கபூர் அழகான பூங்கொத்துடன் விக்டோரியா டெர்மினஸில் காத்துக் கொண்டிருப்பார். பம்பாய் நகரமே என்னை வரவேற்கத் தயாராகிக் கொண் டிருந்தது— பெரிய ஜூலை மாத மழையோடு...

மிகவும் பெரிதான குகை போல் தெரிந்த விக்டோரியா டெர்மினஸில் ரயில் போய் நின்றதும், ஜனவெள்ளம் அந்தக் கனமழையிலும் பரவிச் சிதறிக் கலைந்த வேகத்தைப் பார்த்துத் திகைத்து நின்றுவிட்டேன். அத்தனை பெரிய மழையில் எங்கே போவேன்? தன்னந் தனியாக நின்றுவிட்டேன். என் சினிமாவின் ஆரம்பக் காட்சிகள் டல் அடிப்பது போலிருந்தன...! மழை பெய்யா விட்டால்கூட எங்கேயாவது சுற்றி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாம்... ஆனால் இப்படிப் பெய்கிறதே மழை...



வேறு வழியிலலாமல் ஸ்டேஷனையே சுற்றிச் சுற்றி வந்தேன். மாடிப் பகுதியில் ஒரு ஓட்டல் இருந்தது. 'சிக்கன் பிரியாணி ரெடி' என போர்டு போட்டிருந்தார்கள். அதில் நான் எதிர்பாராத விஷயம் என்னவென்றால் மதுரை முனியாண்டி விலாஸ்காரர்கள்தான் அந்த ஓட்டலை நடத்திக் கொண்டிருந்தார்கள். எனக்கு ஆச்சரியமாகி விட்டது. ஆப்பிரிக்கா போனால் கூட முனியாண்டி விலாஸ் காரர்கள் இருப்பார்கள் போலிருக்கிறது! பரவாயில்லை. மதுரையின் சேவை நாட்டுக்குத் தேவைதான் போலிருக் கிறது... சந்தோஷத்துடன் உள்ளே நுழைந்தேன்.

அந்த ஓட்டலில் பணிபுரிந்து கொண்டிருந்த ஒருவருக்கு என்மேல் என்னவோ சந்தேகம் வந்துவிட்டது. பக்கத்தில் வந்து நின்று விசாரித்தார்.

''ஏன் தம்பி— எந்த ஊரு உனக்கு?''

''பாளையங் கோட்டை!''— புளுகினேன்.

''அட! நானும் தின்னவேலி பேட்டைதான்— இங்கே என்ன ஜோலியா வந்தே?'' விடமாட்டார் போலிருந்தது.

''ராஜ்கபூர் என்னைப் புறப்பட்டு வரச்சொல்லித் தபால் போட்டிருந்தார்... அவரைப் பார்க்கத்தான் வந்திருக்கேன்...''

சும்மா அள்ளிவிட வேண்டியதுதானே...! என் பின் னாடியே வந்து பார்க்கவா போகிறார்...?

''ராஜ்கபூரா... எந்த ராஜ்கபூர்?''— கேட்கும்போதே ஒரு மாதிரியாகி விட்டார்.

''சினிமா ஸ்டார் ராஜ்கபூர்தான்!''

''நெஜமாவா?''

''இதில் என்னங்க பொய் வேண்டிக்கெடக்கு?''

"பார்த்தா சின்னப் பையனாட்டம் இருக்கே...உன்னை எதுக்கு அவர் வரச் சொன்னார்?"

"நான் ஒரு பெரிய ரைட்டர்ங்க! ராஜ்கபூர் சாருக்கு ஏத்த மாதிரி நல்ல கதை ஒண்ணு எழுதி அவருக்கே அனுப்பி வெச்சிருந்தேன். படிச்சுட்டு உடனே என்னைக் கிளம்பி வரச் சொல்லி தந்தியே அடிச்சிருந்தார்..."

"இந்தி தெரியுமா உனக்கு?"

"இந்தி சினிமா பார்த்துப் பார்த்தே படிச்சுக் கிட்டேன்..."

"இங்கே எங்கே தங்கியிருக்கே?"

"மட்டுங்கால எங்க அக்கா வீட்ல இருக்கேன்!"

"பெரிய யோகக்காரன்தான்... அப்ப என்னையும் ஒரு நாள் ராஜ்கபூர்கிட்டே கூட்டிட்டுப் போ தம்பி. எனக்கும் ரொம்ப நாளாவே அவரைப் பாக்கணும்னு ஆசை..."

"கட்டாயம் கூட்டிட்டுப் போறேன்... அண்ணாச்சி பெரு?"

"நெல்லை முருகேசன். இந்த ஏரியாவில யாரைக் கேளு சொல்வாங்க...!"

"அப்ப நான் வரேங்க!"

"நல்லது தம்பி. போயிட்டு வா!"

கழுவிய கையைத் துடைக்கக்கூடச் செய்யாமல் படிகளில் இறங்கி ஓடியே வந்துவிட்டேன்... நானே ராஜ்கபூரை எப்போது பார்க்கப் போகிறேன் என்பது தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறேன்... இதில் இவரையும் அழைத்துக் கொண்டு போக வேண்டுமாம்... வேறு வேலை இல்லை எனக்கு... ராஜ்கபூர் எனக்கு நெருங்கிய நண்பராகவே ஆகிவிட்டாலும் கூட இந்த நெல்லை முருகேசனை



யெல்லாம் அழைத்துப் போய் அறிமுகமெல்லாம் செய்து வைக்கக்கூடாது! வீணாக என் பெயர் கெட்டுப் போகும்! அது மட்டுமில்லை. நாளை இந்த நெல்லை முருகேசன் என்னைவிடப் பெரிய ஆளானாலும் ஆகிவிடுவார்... அதற்காகவாவது அவரை யாரிடமும் அழைத்துப் போகவே கூடாது.

பார்த்தேன்... மழை கொட்டிக் கொண்டுதான் இருந்தது. இரவு வந்து விடவில்லை என்றாலும் மழையால் வானம் இருண்டு கிடந்தது. நிறையப் பேர் ஆங்காங்கு படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். நானும் அவர்களில் ஒருவனாக ஓர் ஓரமாகக் கையிலிருந்த பையைத் தலைக்கு வைத்தபடி படுத்துக் கொண்டேன். மனம் ஒரு மாதிரி மலைத்துப் போயிருந்தது. இப்படி சேர் ஆஃப் ரயில்வே ஸ்டேஷனில் படுத்துக் கிடக்கிறேனே... கடைசிவரை இப்படி ஸ்டேஷனிலேயே படுத்துக் கிடக்கும்படி ஆகிவிட்டால்? நினைக்க நினைக்கப் பயமாக இருந்தது. திடீரெனத் தோன்றியது— நினைத்தால்தானே பயம்... ஏன் நினைக்க வேண்டும்? எதையும் நினைக்காமல் இருந்துவிடலாம் என நினைத்து ஒன்றையும் நினைக்காமல் படுத்திருந்தேன். சில நிமிடங்களில் தூங்கியும் விட்டேன்.

தூக்கம் கலைந்தபோது பொழுது விடிந்திருந்தது. பரபரப்புடன் எழுந்து ஸ்டேஷனுக்கு வெளியில் ஓடினேன். மழை நின்று லேசாக வெயில் வந்திருந்தது. 'ஜங்லி' படத்தில் ஷம்மிகபூர் 'யாஹூ' என்று கத்தியவாறு ஒரு பாய்ச்சல் பாய்வாரே... அதுபோல் பாயலாம் போல இருந்தது. நேற்றுப் பூராவும் கடலுக்குள் மூழ்கிய பிரதேசம் போல் காட்சி அளித்த என் பம்பாய் நகரம் கடற்கரை ஊராக உயிர் பெற்றிருந்தது. சிகப்பு நிறமான மாடி பஸ்கள், நகரும் கட்டடங்களாக அங்குமிங்கும் விரைந்து கொண்டிருந்தன.

ஸ்டேஷனை விட்டு வெளியேறினேன். இஷ்டத்துக்குச் சுற்றினேன். சௌபாத்தி அருகே 'மொகல்- ஏ- ஆஸம்' திரைப்பட பேனர் சாயம் இழந்து பெரும் திரை போல் நின்றது. ரெக்ஸ் தியேட்டரில் 'கன்ஸ் ஆஃப் நவ்ரோன்' படம் ஐந்தாவது மாதமாக நிறைந்து வழிந்து கொண்டிருந்தது. மலபார் ஹில்ஸில் ஆங்காங்கு தாவரப் புதர்களுள் காதல் ஜோடிகள் நெருங்கி அமர்ந்து வெப்பமடைந்து கொண்டிருந்தார்கள்.

இரவு தூங்குவதற்கு விக்டோரியா டெர்மினஸ் போய் விடலாம் என்ற எண்ணத்துடன் அங்குமிங்கும் அலைந்து விட்டு இரவு ஒன்பது மணியளவில் ஸாவரி பஜாரில் ஒரு சிந்திக்காரன் கடையில் எதையோ சாப்பிட்டுவிட்டுச் சூடாக ஒரு கிளாஸ் பால் அருந்தியதும் உடம்பே நிறைந்து விட்டது. இனி இரண்டடி கூட நடக்க முடியாது எனத் தெரிந்தது. இந்தக் களைப்புடன் விக்டோரியா டெர்மினஸ் போய்ச் சேருவது முடியாத விஷயம் என்பதும் புரிந்தது.

அருகில் பிரிந்து சென்ற கிளைத் தெருவில் புகுந்தேன். பம்பாய் நகரத்துக்கே உரித்தான ஓர் உயரமான புராதனக் கட்டிடத்தின் முன்புற கேட் திறந்திருந்தது. அருகில் சென்று கவனித்தேன். உள்ளே நுழைந்ததுமே அகலமான மரப் படிக்கட்டு இருந்தது. படிக்கட்டின் கீழ் இரண்டு பேர் படுத்துக் கொள்கிற அளவுக்கு இடம் இருந்தது. சிறிது நேரம் வெறுமே நின்றேன். அதிகமாக யாரும் வரவோ போகவோ உபயோகிக்கிற வழியாகத் தெரியவில்லை. துண்டை உதறி விரித்தேன். பையைத் தலைக்கு வைத்துக் கொண்டு படுத்தேன். தூக்கத்தால் கண் இமைகள் கனத்தன. என் பிரக்ஞை தூக்கத்தினுள் நழுவிக் கொண்டிருந்ததன் கடைசிக் கணத்தில் படிக்கட்டில் யாரோ மெதுவாக இறங்கி வரும் சத்தம் கேட்டது. நான் நிசப்தமாகப் படுத்திருந்தேன். காலடிச் சத்தம் கீழே வந்துவிட்டது. டார்ச் விளக்கின் ஒளி வட்டம் என் முகத்தில் பரவியது.



கண்கள் கூச எரிச்சலுடன் எழுந்து உட்கார்ந்தேன். வந்த ஆள் சுவிட்சைப் போட்டு மின்விளக்கை எரியவிட்டான். அலுப்புடன் நிமிர்ந்து பார்த்தேன். எதிரில் நின்ற ஆள் ஒரு கிழவன். அவனுடைய நீளமான தாடி ஆரஞ்சு நிறத்தில் இருந்தது. கண்களை இடுக்கியபடி என்னை உற்றுப் பார்த்தான்.

''யார் நீ?'' மிகவும் அதட்டலுடன் இந்தியில் கேட்டான்.

பேசாமல் இருந்தேன்.

''எழுந்திரு... இங்கெல்லாம் படுக்கக் கூடாது'' என்றான்.

எழுந்து நின்றேன்.

''ரஹ்மான், யாருடன் பேசிக் கொண்டிருக்கிறாய் கீழே?''

மேல் மாடியிலிருந்து ஒரு இந்திப் பெண்ணின் குரல் கேட்டது.

''ஒரு பையன் மேம் சாப்! பார்த்தால் திருடன் போலத் தெரிகிறான்'' என்றான் கிழவன் அந்த இந்திப் பெண்ணிடம்.

''தாத்தா, நான் திருடன் இல்லை!'' என்றேன் நான்.

''பொய்யெல்லாம் வேண்டாம். எனக்குத் தெரியும். உன்னை மாதிரிப் பையன்களை நிறையவே பார்த்திருக்கிறேன்.''

''இரு ரஹ்மான்... இதோ நான் வந்து பார்க்கிறேன்''— மாடியிலிருந்து மறுபடியும் அதே பெண்ணின் குரல் கேட்டது.

உடனே மாடிப்படிகளில் கொலுசுச் சத்தம் கேட்டது. அடுத்த நிமிடம் அந்தக் குரலுக்கு உரிய பெண் என் எதிரில்

தோன்றினாள். பொதுவாகப் பெண்களின் உயரம் என்பதற்கு மிகவும் மேலான உயரம் இருந்தாள் அவள். அதிக உடல் வலிமை உள்ளவளாகவும் தெரிந்தாள். முகம் கூட ஓரளவுக்கு மதுபாலாவின் முகம் போலத்தான் அமைந்திருந்தது. ராஜ்கபூர் முதன் முதலாக ஒரு கதாநாயகியைப் பார்க்கிற அறியாமையுடன் நான் அவளைப் பார்த்தேன். யாரோ தெருவில் போகிறவன் என்ற நினைப்பில் அவளாலும் என்னை அலட்சியமாகப் பார்க்க முடியவில்லை. காபித் தோட்டத்து முதலாளியின் மகன் என்ற பணச் செழுமை முகத்தில்தான் ஜொலிக்கிறதே...

"யார் நீ?"— சிறிது அதிகாரத்துடன் கேட்டாள்.

"என் பெயர் ஹரி. சினிமா துறையில் ஈடுபட வேண்டும் என்பதற்காகத் தமிழ் நாட்டிலிருந்து வந்திருக்கிறேன்."

பெண்களிடம் உண்மையைச் சொல்லிவிட வேண்டும்! அதுதான் நல்லது.

"சினிமாவில் சேரவா?" ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"ஆம்!"

"இத்தனை சின்னப் பையனா இருக்கிறாய்!"

"விளையும் பயிர் முளையிலேயே தெரியப் பார்க்கிறது...!"

ஆரஞ்சுத் தாடிக்காரன் குறுக்கிட்டான். "இல்லை மேம்சாப்! இவன் பொய் பேசுகிறான். இவனை எனக்குத் தெரியும் திருடன் இவன். பையா, முதலில் நீ வெளியில் போ. இங்கே படுக்கக் கூடாது யாரும். உம்...போ போ..."

கிழவன் விரட்டினான். நான் அவளுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன். என்னைப் படுக்கவிடாமல் வெளியில் விரட்டுவது அவளுக்குச் சம்மதமாக இல்லை. ஆனாலும், எதுவும் சொல்லாமல் நின்றாள்.



"போ பையா வெளியில்"— கிழவன் விடாமல் விரட்டினான்.

"நான் பையன் இல்லை. இளைஞன்" என்று எரிச்சலுடன் சொல்லிவிட்டு வெளியேறினேன். எதிரில் பூட்டிக் கிடந்த வாட்ச் ரிப்பேர் பண்ணுகிற ஒரு கடையின் ஓரடி அகலம் பலகையில் ஏறி உட்கார்ந்தேன், தாடிக்காரக் கிழவன் கேட்டை இழுத்துச் சாத்திப் பெரிய பூட்டால் பூட்டினான். என்னைச் சில விநாடிகள் கவனித்துவிட்டு அவள் வேகமாகப் படிகளில் ஏறிப் போய்விட்டாள். ஞாபகமாய் அவளின் கொலுசுகள் சத்தம் செய்தன. கிழவன் மின்விளக்கை அணைப்பது தெரிந்தது.

அந்தச் சின்னப் பலகையில் நான் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டேன். திடீரென்று காற்று குளிர்ந்து வீசியது. சடசடவென மழைத்துளிகள் விழத் துவங்கின. படுத்திருக்க முடியாமல் உடம்பெல்லாம் மழைத்துளிகள் தெறித்தன. எரிச்சலுடன் எழுந்து நின்று கொண்டேன். மழை நேற்றுப் போல் பெரிதாகப் பெய்ய ஆரம்பித்தது.

அப்போது எதிர் கட்டடத்தில் பளிச்சென்று விளக்கு எரிந்தது. சுவிச்சில் வைத்த கையை எடுக்காமல் அவள் தான் மின்விளக்கின் கீழ் நின்று கொண்டிருந்தாள். நான் மழையில் நனைவதை அவள் கவனித்தாள். நான் சிறிது ஆச்சரியமான பாவனையுடன் ராஜ்கபூர் மாதிரி குந்தி உட்கார்ந்தபடி அவளைப் பார்த்தேன். அவள் பூட்டை விலக்கிக் கேட்டைத் திறந்தாள். நான் திலீப்குமார் மாதிரி வசனமே இல்லாமல் மௌனமாக நின்றேன்!

"உனக்கு இங்கே வீடு இருக்கிறதா இல்லையா?"— மழையின் ஊடே உரக்கக் கேட்டாள்.

"வீட்டிலிருந்து ஓடி வந்துவிட்டேன்?"-நானும் உரக்கச் சொன்னேன்.

"அப்படியானால் இங்கே படிக்கட்டின் கீழே வந்து படுத்துக்கொள். பொழுது விடிந்ததும் எழுந்து போய்விடு" என்றாள்.

நன்றியுடன் குதித்து ஓடினேன். எனக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றாள். மறுபடியும் படிக்கட்டின் கீழ் துண்டை விரித்தவாறே அவளைப் பார்த்தேன். ஓர் உயரமான அழகான தங்கமீன் போல அவள் நின்றாள். அதற்கு மேல் அவளைக் கவனிக்க முடியாமல் பட்டென விளக்கை அணைத்துவிட்டாள். இருளில் மீண்டும் மாடிப்படிகளில் கொலுசுச் சத்தம். நிம்மதியுடன் படுத்தேன். வெளியில் பம்பாய் நகரின் மாரிக்கால 'பர்ஸாத்' விளாசித் தள்ளிக் கொண்டிருந்ததை உணர்ந்தவாறே தூங்கிப் போனேன்.

## 3

காலையில் தூக்கம் கலைந்தபோதும் வெளியில் மழை பெய்து கொண்டிருந்தது. பையில் இருந்த வாட்ச்சை எடுத்து மணி பார்த்தேன். ஆறு ஆகியிருந்தது. சில நிமிடங்கள் படுத்தே கிடந்தேன். டாய்லெட் போக வேண்டிய அவசர நிலை ஏற்பட்டது. எழுந்து தயக்கத்துடன் மாடிப்படிகளில் ஏறினேன். முதல் தளத்தின் முன் வராந்தாவில் ஆரஞ்சுத் தாடிவைத்த கிழவன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய முகம் மிகப் பெரிய கொட்டைப் பாக்கு போல இருந்தது. சத்தம் செய்யாமல் அவனைத் தாண்டிப் போனேன். பெரிய ஹால் காலியாக இருந்தது. சுவர் ஓரமாய்ச் சில வாத்தியக் கருவிகள் வைக்கப் பட்டிருந்தன. தபேலா மட்டும் எனக்கு அடையாளம் தெரிந்தது. இன்னொருபுறம் வரிசையாக மூன்று அறைகள்



இருந்தன. அறையின் கதவுகள் எல்லாமே சாத்தப் பட்டிருந்தன.

ஹாலைத் தாண்டிச் சென்றேன். இன்னொரு கதவு இருந்தது. கதவை இழுப்பதற்காகக் கையை வைத்தேன். சரியாக அந்தக் கதவைத் திறந்து கொண்டு நேற்று இரவு பார்த்த உயரமான பெண்தான் வெளியில் வந்தாள்.

"என்ன இங்கே வந்து நிற்கிறாய்?"— முகத்தில் அதிகமான எரிச்சலைக் காட்டியவாறு கேட்டாள்.

"டாய்லெட் போக வேண்டும்" என்றேன்.

"படுக்க இடம் கொடுத்தால்... இப்படித்தான்!"— கோபத்துடன் சொல்லிவிட்டு விலகிப் போனாள். அவசரமாக உள்ளே போய்த் தாழிட்டுக் கொண்டேன். அவளின் கோபமான முகம் சிறிது பயத்தைத் தந்தது. நேற்று தங்க மீன் போல இருந்தவள் இன்றைக்குத் திமிங்கலம் போல் இருக்கிறாளே! ஒரு பெண்ணை இரவில் பார்ப்பதற்கும், பொழுது விடிந்து பார்ப்பதற்கும் எத்தனை வித்தியாசம். நேற்று இரவு அவளிடம் இருந்த ஒன்று கலைந்து போயிருந்தது. அது என்னவாக இருக்கும்? யாருக்குத் தெரியும்?

நான் வெளியே வந்தபோதும் மழை பெய்தபடியே இருந்தது. நனைந்தபடியே நடந்துவிடலாம் எனத் தோன்றியது. அவளுக்கு நன்றி சொல்லிவிட்டுப் போகலாம் என்று சுற்றிலும் பார்த்தேன். வலதுபுறம் கண்ணாடிப் பாசிகளே திரையாகத் தொங்க ஓர் அறை திறந்திருப்பது தெரிந்தது. திரையின் பாசிகள் மெலிதாகக் குலுங்கிக் கொண்டிருந்தன. நடந்து போய்ப் பாசிகளின் வழியே "மேம்சாப்" என்று அழைத்தபடி உள்ளே நோக்கினேன். மிக அகலமான கட்டிலின் மெத்தையில் சப்பணமிட்டு உட்கார்ந்து, முன்னே மூன்று தலையணைகளை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி... அதன் மீது குனிந்து யாருடைய

மடியிலோ சாய்ந்து கொண்டிருக்கிற சாயலில் அவள் முகத்தைக் கவிழ்ந்தபடி கிடந்தாள். அப்போது ஒரு கிழவி கையில் ஆவி எழும்பி நெளிகிற டீ கோப்பையுடன் என்னை நகர்ந்து கொள்ளச் சொல்லி விட்டு அந்த அறைக்குள் போனாள். "அனார்கலி..." என்று கிழவி அன்புடன் கூப்பிட்டாள்.

சிறிதும் எதிர்பாராமல் அந்தப் பெயர் என்னைப் பலமாக உலுக்கிவிட்டது. கற்பனையில் கூட எந்தப் பெண்ணுக்கும் பொருத்தியே பார்த்திராத கம்பீரமான பெயர். எனக்குள் பெயர் இல்லாமல் இருக்கும் என் வட நாட்டுக்காரிக்கே பெயர் கிடைத்துவிட்டாற் போலிருந்தது. முகத்தை நிமிர்த்திக் கோப்பையை வாங்கிக் கொண்ட அந்த அனார்கலி என்னைக் கவனித்தபடியே டீயை உறிஞ்சினாள். விடைபெற்றுக் கொள்வதே எனக்கு மறந்துவிட்டது. அவளைப் பார்த்தபடியே நின்றேன். காலிக் கோப்பையைக் கிழவியிடம் நீட்டியபடியே அவள் சொன்னாள்: "என் மாத உபாதை ஆரம்பித்துவிட்டது ஜமீலா. படுத்திவிடும் இன்றைக்கு என்னை! இந்த மாதிரி சமயத்துக்காகவாவது ஒருத்திக்கு அம்மா மடி வேண்டும். பார்... படுத்திருக்கவும் முடியாமல் உட்கார்ந்திருக்கவும் முடியாமல்..."

பின் அனார்கலி சுவாரஸ்யம் இல்லாமல் என்னைப் பார்த்து எரிச்சலுடன் கேட்டாள்.

"இங்கே வந்து ஏன் நின்று கொண்டிருக்கிறாய்?"

"உங்களுக்கு நன்றி சொல்லிவிட்டுப் போகலாம் என்று..."

அவள் சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டுக் கேட்டாள்.

"நேற்றைக்கு நீ ஒரு விஷயம் சொன்னாயே— அது நிஜம்தானா?"



"என்ன சொன்னேன்?"

"சினிமாவில் சேர்வதற்காக வந்திருப்பதாகச் சொன்னாயே... அதைக் கேட்கிறேன்!"

"நிஜமாகவே இந்தி சினிமாவில் சேர்வதற்காகத்தான் பம்பாய் ஓடி வந்திருக்கிறேன்!"

"வந்து எவ்வளவு நாளாகிறது?"

"ஒரு நாள்தான் ஆகிறது!"

"என்ன வயதாகிறது உனக்கு?"

"சரியாகப் பதினெட்டு..."

"பார்த்தால் பதினைந்து வயதுப் பையன் மாதிரி இருக்கிறாய்... சினிமாவில் எந்தத் துறையில் ஈடுபடப் போகிறாய்?"

"ராஜ்கபூர் மாதிரியான நடிப்பில்... நடிப்பு வராவிட்டால் டைரக்ஷன் கற்றுக் கொள்வேன்!"

"அதற்கான ஒரு வயது வர வேண்டாமா?"

"வயது வராமலா போய்விடும்?"

"அவ்வளவு நம்பிக்கையா?"

"அத்தனை ஆசை!"

அனார்கலி விஷமத்துடன் புன்முறுவல் பூத்துக் கொண்டாள்.

"சாயா சாப்பிடுகிறாயா?"

"காபி தரமாட்டீர்களா?"

"மதராஸி என்பதைக் காட்டுகிறாய் பார்..."

"அப்படியில்லை. என் அப்பா ஒரு காபி எஸ்டேட் முதலாளி!"

"ஜமீலா, இவனுக்கும் ஒரு சாயா கொண்டு வந்து கொடு. இப்படி வந்து இந்த ஸ்டூலில் உட்கார்ந்து கொள்" என்றாள்.

உள்ளே போய் அவள் காட்டிய ஸ்டூலில் உட்கார்ந்தேன். அனார்கலி தலையணைகளின் மேல் கவிழ்ந்து கண்களை மூடிக் கொண்டாள். வாழ்வில் அதற்கு முன் உணர்ந்திராத நிசப்தம் என்னைச் சுற்றிலும் மௌனமாக விரைந்து கொண்டிருந்தது. வாழைப்பூவின் திண்மையான மடல் என அனார்கலியின் முதுகு சுவாசத்தால் மென்மையாக எழும்பித் தணிந்து கொண்டிருந்தது.

எனக்கு டீ வந்தது. சுவைத்துக் குடித்தேன். சில நிமிடங்களுக்குப் பிறகு அனார்கலி முகத்தை உயர்த்தினாள். தலையணை வரிசையில் அழுந்தியதால் அவளின் நெஞ்சுப் பகுதி சிறிதே எழும்பித் தெரிவதைக் காண முடிந்தது.

"உன் பெயர் என்ன சொன்னாய்?"— அனார்கலி கேட்டாள்.

"ஹரிராம்!"

"ஹரிராம்... பத்து வருஷங்களுக்கு முன்பு நானும் லக்னோவை விட்டு இந்த பம்பாய்க்கு ஓடி வந்தவள் தான்— அதுவும் சினிமாவில் நடிப்பதற்காக..."

சினிமாவில் நடிப்பதற்காக ஓடி வந்தவள் என்ற செய்தியில், அனார்கலியை ஓடி வந்த மற்றொரு நதியாகவே நான் பார்த்தேன். எங்கோ உற்பத்தியாகிய இரண்டு நதிகள் அருகருகே ஓடுகின்றன. "இங்கே இரண்டு நதிகள் பாய்கின்றன' என்ற தலைப்பில், நானும் இவளும் நடிக்க ஒரு படம் தயாரித்து விடலாம் போலிருந்தது,

"அப்போ நீங்க ஏதாவது இந்திப் படத்துல நடிச்சிருக்கீங்களா?"



அவன் பதில் சொல்லவில்லை. தலையை வலிப்பதாகச் சொன்னான்.

"உடனே மாத்திரை போட்டுக் கொண்டால் தலைவலி போய்விடுமே!"

"அப்படியில்லை. எந்த வலியையுமே சிறிது நேரத்துக்குக் கவனித்துக் கொண்டிருக்கத்தான் நான் விரும்புவேன். பார்— முதலில் இந்த வலி வயிற்றில் துவங்கியது. பின் முதுகில் நகர்ந்து, இப்போது தலையில்... சரி, மதராஸி என்கிறாய்... இவ்வளவு சின்னப் பையனாக வேறு இருக்கிறாய்... எப்படி இவ்வளவு இந்தி பேசுகிறாய்?"

"எத்தனை இந்திப் படம் பார்த்திருக்கிறேன்..."

"இந்தி சினிமா என்றால் அத்தனை இஷ்டமா?"

"இந்தி சினிமா என் உயிர்!"

"உனக்குப் பிடித்த ஏழெட்டு இந்திப் படங்களின் பெயர்களைச் சொல், பார்க்கலாம்."

"குருதத் நடித்த 'ப்யாசா'... திலீப்குமார் ஆக்ட் பண்ணிய 'முஸாஃபிர்'... அப்புறம் 'தில் அப்னா அவர் ப்ரீத்பராய்!"

"பாவி! எனக்குப் பிடித்தமான படங்களாகச் சொல்கிறாயே..."— சந்தோஷத்துடன் உடம்பைச் சற்றுச் சிலிர்த்துக் கொண்டதில், அனார்கலி பொங்கிய பால் போல் தெரிந்தாள்.

"ஆனால் எல்லாப் படங்களுக்கும் மேலாக எனக்குப் பிடித்தமானவை— ராஜ்கபூரின் படங்கள்தான். அவர் என்னுடைய லட்சியக் கதாநாயகர்!"

"சரி... ஓடிப்போய்த் தலைவலி மாத்திரை ஒன்று வாங்கி வா..."

சரேலெனப் பின்புறக் கதவைத் திறந்து படிகளில் இறங்கினேன். மழையில் நனைந்து கொண்டே தெருவில் நடந்தேன். வலுக்கட்டாயமாக எனக்கு இந்த இடைவேளை தேவையாக இருந்தது! அனார்கலியுடன் சில நிமிஷங்கள் பேசிக் கொண்டிருந்தது அத்தனை தூரம் என்னை மூச்சு வாங்க வைத்திருந்தது!

தலைவலிக்கான மாத்திரையுடன் நான் திரும்பிய போது. அனார்கலி தலையணையில் முகம் புதைத்துக் கவிழ்ந்திருந்தாள்.

''மாத்திரை வாங்கி வந்துவிட்டேன்...'' என்றேன்.

நிமிர்ந்தாள். அவளுடைய முகபாவம் மாறிப் போயிருந்தது.

''நான் ஆண்பிள்ளையாக இருந்திருந்தால்— பழகிய இத்தனை நிமிடங்களில், இந்த மழையில் தலைவலி மாத்திரை வாங்கி வருவதற்காக இத்தனை வேகம் காட்டி யிருப்பாயா?'' என்று கேட்டாள்.

''எதற்காக இப்படிக் கேட்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை!''

''நான் பெண் என்பதால்தான் உனக்கு இத்தனை கரிசனம் என்கிறேன்...''

எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. சில விநாடிகள் கழித்துத் திருப்பிக் கேட்டேன்.

''அப்படியானால் என்னை நேற்றிரவு மழை பெய்ததும் உள்ளே வந்து நீங்கள் படுத்துக் கொள்ளச் சொன்னதற்குக் காரணம், நான் ஆண் என்கிற கரிசனம்தானா!''

இந்தக் கேள்வியில் அனார்கலி அதிர்ந்துவிட்டாள். அவளுக்குள் ஏற்பட்டிருக்கும் கோபம், அவளின் முகத்தில் சிவப்பு நிறத்தில் தெரிந்தது.



''என்னைப் பெண்ணாகப் பார்த்துப் பெண்ணாகவே நடத்துகிற ஆடவனைப் பார்த்தாலே, எனக்குப் பற்றிக் கொண்டு வரும்... அதனால் அப்படிக் கேட்டேன். உடனே மிகவும் பெரியவன் மாதிரி என்னைத் திருப்பிக் கேட்கிறாயே...''

''நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் மிகவும் பெரியவன்தான்!''

''இந்தச் செருக்குத்தான் பெண்களிடம் ஒவ்வொரு ஆடவனுக்கும் இருக்கிறது. எதிர்ப்படும் பெண்ணை ஜெயிக்கப் பார்ப்பதே அவனின் லட்சியம்...''

எனக்கு இவளிடம் விவாதம் வேண்டாம் என்று தோன்றியது. அவளுக்கும் என்னிடம் போய் இப்படி யெல்லாம் வெளிப்பட்டிருக்க வேண்டாம் என்று தோன்றி யதோ என்னவோ, மேற்கொண்டு பேசாமல் மௌனமாகி விட்டாள்.

''நான் கிளம்புகிறேன். நேற்று மழையில் படுத்துக் கொள்ள இடம் கொடுத்ததற்காக உங்களுக்கு நன்றி...'' என்றேன்.

''இன்னும்தான்...மழை பெய்து கொண்டிருக்கிறது!''

''பரவாயில்லை...''

''எங்கே போவாய்?''

''ஆர். கே. ஸ்டுடியோ பக்கம் போகலாம் என்று நினைக்கிறேன்!''

''உன்னை உள்ளேயே விடமாட்டார்கள்!''

''அதனாலென்ன! எல்லாக் கதாநாயகனின் ஆரம்பமும் தவிர்க்கவே முடியாமல் அப்படித்தான் தொடங்குகிறது!''

''லக்னோவை விட்டு ஓடிவந்த சமயத்தில் நான்கூட அப்படித்தான் நினைத்தேன்!''

''இப்போது கூட நீங்கள் முயற்சி செய்து பார்க்கலாம்!''

''லட்ச லட்சமாய்க் கொடுத்தாலும் சினிமாவுலகம் பற்றி மட்டும் மீண்டும் நான் நினைத்தே பார்க்க மாட்டேன். அத்தனை புதைகுழிகளும், சோகங்களும், பயங்களும் நிறைந்தது அந்த உலகம். உன் ராஜ்கபூரே சில விஷயங்களில் எத்தனை சோகங்களை அனுபவித்திருக்கிறார் தெரியுமா?''

''எனக்குச் சோகங்களை அனுபவிப்பதில் அலாதியான ஆசை உண்டு. வெற்றியின் சந்தோஷத்தை விடத் தோல்வியின் வருத்தம் அழுத்தமானது, ஆழமானது...''

''உன்னுடைய லட்சியம் நிறைவேறட்டும்!''

''நன்றி!''

நான் கிளம்புவதற்குத் தயாராகி விட்டேன்.

''கொஞ்சம் இரு... இன்று நீ என்னுடைய விருந்தாளி. அதனால் சாப்பிட்டு விட்டே நீ போகலாம்!''

''நன்றி!''

''ஒவ்வொன்றுக்கும் நன்றி சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். தெரிகிறதா?''

அப்போது அந்த ஜமீலா அங்கு வந்தாள்.

''ஜமீலா, இவனுக்கும் சேர்த்து ரொட்டி செய்துவிடு... இன்றைக்கு இவன் என்னுடைய விருந்தாளி!''

''இவன் உன்னிடம் நாளை உதை வாங்காமல் போனால் பெரிய விஷயம்!''

''இல்லை... இவன் நல்ல பையனாகத் தெரிகிறான் ஜமீலா!''



''உனக்கு எவனுமே ஒரே ஒரு நாளுக்குத்தான் நல்லவனாகத் தெரிவான்!''

அந்த ஜமீலா போனதும் ''நாளை நான் உங்களிடம் உதை வாங்காமல் போனால் பெரிய விஷயமென்று சொன்னார்களே— அந்த ஜமீலா...ஏன் அவர்கள் அப்படிச் சொன்னார்கள் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டேன்.

''என்னை பெண்ணாகவே பாராட்டுகிற ஆண்களை எல்லாவிதத்திலும் அவமதிப்பதற்கு நான் தயங்க மாட்டேன்...''

''நீங்கள் பெண்தானே?',

''இல்லை.''

''மன்னிக்கவும்... தன்னை பெண் என்று ஒப்புக் கொள்ளாத பெண்மணியை இப்போதுதான் சந்திக்கிறேன்!''

''சிறிது நேரம் பேசாமல் இருக்கிறாயா... பத்து நிமிஷம் எனக்கு தனியாக இருக்க வேண்டும் போலிருக்கிறது ஹரி, அந்த மாத்திரையைக் கொடு...''

''சரி... இந்தக் கட்டடம் பூராவையும் சுற்றிப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன்!''

''யாராவது உன்னை 'யார் நீ?'' என்று கேட்டால், என்னுடைய விருந்தாளி என்று சொல்!''

''எதுவும் சொல்ல மாட்டார்களே...?'' — எழுந்து கொண்டே கேட்டேன்.

''இந்த வீட்டு எஜமானியின் விருந்தாளியை யாரும் எதுவும் சொல்லிவிட முடியாது...''

இது நான் எதிர்பாராத செய்தி. அதென்னமோ எப்போதுமே சொத்து, சுகம், பணம் உள்ளவர்களோடுதான் எனக்கு நட்பும் உறவும் கிடைக்கும். வாழ்வின் எந்தக் கட்டத்திலும் எந்த ஒரு ஏழையோடும் எனக்கு எந்தத் தொடர்பும் ஏற்பட்டதே கிடையாது. ஏழை என்பதற்காக, நானாக யாரையும் நிராகரித்ததில்லை. ஆனால், ஏழ்மை என்னை புறக்கணித்தே வைத்திருந்தது!

## 4

அந்தப் பழைய கட்டடத்தின் மொட்டை மாடியில் போய் நின்றேன். மழை விட்டிருந்தது. பம்பாய் நகரின் வானத்தை நன்றியுடன் அண்ணாந்து பார்த்தேன். இந்த வானம் மழை பெய்வித்ததால்தானே அனார்கலியின் விருந்தாளியாகும் நிலை வந்தது! பிடரியில் கைகள் இரண்டையும் பின்னியபடி விச்ராந்தியாக நின்றேன். 'ஆர்த்தி' திரைப்படத்தின் பாடலான 'கபி தோ மிலேங்கி' எங்கிருந்தோ ஈரக்காற்றில் அழகாக மிதந்து வந்தது. இந்தித் திரைப்படப் பிரவேசமும் எளிதாகவே கைகூடிவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் இந்தித் திரைப்படத் துறையில் எந்தப் பிரிவில் முனைப்புடன் முயற்சித்துப் பார்க்க வேண்டும் என்ற தனிப்பட்ட முதன்மை ஏதும் என்னுடைய அறிவில் குறித்தெல்லாம் வைக்கப்பட்டிருக்கவில்லை. ராஜ்கபூரின் நடிப்பைப் பார்க்கும்போது அவரைப் போலவே நடிகனாக வேண்டும் போலிருக்கும். சாந்தாராமின் ஜோரான டைரக்‌ஷனைப் பார்த்துவிட்டால் உடனே அவரைப் போன்ற சிறந்த இயக்குநராகப் பெயரெடுக்க வேண்டும் என்றிருக்கும். ஓ. பி. நய்யாரின் இசையைக் கேட்டு விட்டாலோ அவரை மாதிரி பெரிய இசையமைப்பாளராக ஆகிவிட வேண்டும் போலிருக்கும்!



மொத்தத்தில் பார்த்தால் இந்திப் படத்துறையின் எல்லாப் பிரிவுகளுமே என்னுள் ஒன்றாகக் கலந்து குழைந்து ஊறிக் கிடந்தன— இந்தக் கலவை ஓர் உணர்வுப் பொங்கல் மட்டும்தானே அன்றி என் அறிவுத் தேர்ச்சியின் வடிவம் இல்லை. திரைப்படக் கலையின் எந்தப் பிரிவிலும் எத்தகைய பயிற்சியிலும் ஈடுபாடு காட்டுகிற முயற்சி எதையும் நான் எந்தச் சமயத்திலும் மேற்கொண்டதே கிடையாது. மனத்தால் நான் ஒரு நடிகனாக இருந்தேன். இயக்குநராக வாழ்ந்தேன். இசையமைப்பாளராகத் திரிந்தேன். அவற்றுக்கு மேல் செயல் அளவில் என்னிடம் எந்தத் திட்டமும் கிடையாது. ஆசைகள் மட்டும்தான் நெஞ்சு நிறையக் குவிந்து கிடந்தன. ஆசைகளை மட்டும் வைத்துக் கொண்டு சாதித்துவிட முடியுமா? முடியணும்...!

"ஏய், பையா!"

சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன், ஆரஞ்சு நிறத் தாடிக்காரக் கிழவன் நின்று கொண்டிருந்தான். எனக்கு அதிகமான எரிச்சல் வந்துவிட்டது.

"நான் பையன் கிடையாதென்று நேற்றைக்கே உங்களிடம் சொல்லியிருக்கிறேன்!"

"என்னுடைய வயசுக்கு நீ பையன்தான்!"

"வயதைக் காட்டியெல்லாம் பேச வேண்டாம்!"

"உன்னிடம் என்ன பேச்சு எனக்கு... போ, மேம்சாப் உன்னுடன் சாப்பிடுவதற்காகக் காத்திருக்கிறார்கள்!"

"அதைச் சொல்லிவிட்டுப் போக வேண்டியதுதானே... பையா என்ன வேண்டிக் கிடக்கிறது பையா..."

வேகமாக இறங்கிப் போனேன். நிஜமாகவே அனார்கலி எனக்காகக் காத்திருந்தாள். அவளுடைய முகத்தில் சிடுசிடுப்பு மறைந்து ஒரு மென்மை வந்திருந்தது. மாமிச

வாசனை மூக்கைத் துளைத்தது. இரண்டு பீங்கான் தட்டுக்களில் ரோஸ்ட் செய்யப்பட்ட ரொட்டித் துண்டுகள் அடுக்கப்பட்டிருந்தன. வேறொரு பெரிய கோப்பையில் மணக்க மணக்கச் சமைக்கப்பட்ட மாமிசம் மசாலாவிலும் எண்ணெயிலும் மூழ்கிப் போயிருந்தது. இன்னொரு சிறிய தட்டில் பேரீச்சம் பழங்களும் உலர்ந்த திராட்சைகளும் குவிக்கப்பட்டிருந்தன.

"நீங்கள் மாமிசம் சாப்பிடுவீர்களா?" — ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"இந்தக் கேள்வியை நான் உன்னைக் கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தேன்."

"நீங்கள் மாமிசம் சாப்பிடாத இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பீர்கள் என்பது என் அனுமானம்!"

"இதற்கெல்லாம்கூட ஒரு இனத்தையும் மதத்தையும் சார்ந்து இருக்க வேண்டுமாக்கும்?"

"அப்படியொரு வழக்கம் நாட்டில் இருக்கத்தானே செய்கிறது?"

"நீ இங்கே சினிமாவில் சேர வந்திருப்பதென்ன உங்கள் மதராஸிகள் வழக்கமோ?" — அனார்கலி இந்தக் கேள்வியை மிக அழகான பாவனையோடு கேட்டாள். இந்தக் கேள்வி ஏனோ எனக்குப் பிடிக்கவும் செய்தது. அது மட்டும் இல்லை... என் எதிரில் இருந்த அனார்கலி அந்த நிமிடத்தில் என்னுடைய பெண் வேடம் போலவும் கூடத் தெரிந்து அக மகிழ்வாக இருந்தது...!

"வெட்கப்படாமல் சாப்பிடு ஹரி!';

"சரி!"

"உனக்கு வேண்டிய அளவு நீயே சாப்பிட்டுக் கொள்ள வேண்டும். சும்மா வாய்க்கு வாய் உபசாரமெல்லாம் பண்ணத் தெரியாது எனக்கு..."



இருவரும் சாப்பிடத் துவங்கினோம்.

"மாமிசம் பிடித்திருக்கிறதா?" - அனார்கலி கேட்டாள்.

"பிரமாதமாக இருக்கிறது!"

"அதற்காகத் தினமும் எனக்கு விருந்தாளியாக வந்துவிடலாமென்று நினைத்துவிடாதே..."

"நீங்களும் சினிமாவில் நடிப்பதற்காக ஒரு காலத்தில் லக்னோவை விட்டு ஓடி வந்ததாகச் சொன்னீர்களே... அது எந்த வருடத்தில் என்று சொல்ல முடியுமா?"

"எதற்காகக் கேட்கிறாய்?"

"சும்மாதான் கேட்கிறேன்!"

"சரியாகப் பத்து வருடங்கள் ஆகின்றன... அப்போது எனக்குப் பதினாறு வயது..."

"லக்னோவை விட்டுத்தானே நீங்கள் ஓடி வந்தீர்கள்?"

"ஆம்!"

"அப்படியானால் லக்னோதான் உங்களின் சொந்த ஊரா?"

"இல்லை. அது நான் பிறந்து வளர்ந்த ஊர்..."

"சொந்த ஊர்?"

"எந்த ஊரையும் என் சொந்த ஊராக நான் நினைத்தது கிடையாது..."

"ஆச்சரியமான பெண்மணியாக இருக்கிறீர்கள் நீங்கள்!"

"நீதான் சொல்லேன்... எதற்காக ஒரு ஊரையும் ஒரு சில மனிதர்களையும் சொந்தம் கொண்டாடிக் கொண்டே வாழ வேண்டும்?"

"மன்னிக்க வேண்டும்—எனக்கு அவ்வளவு தூரத்துக் கெல்லாம் சிந்தித்துப் பார்க்கத் தெரியுமா என்பது சந்தேக மாக இருக்கிறது!"

"ஜமீலா..."

கிழவியை அழைத்தான் அனார்கலி.

"என்ன அனார்கலி?"— கிழவி வேகமாக உள்ளே நுழைந்து கொண்டே கேட்டாள்.

"கிராமபோனில் மேலாக இருக்கும் அந்த இசைத் தட்டை எடுத்துப் போடேன்!"

"இதோ..."

மூலையில் உயரமான ஸ்டூலில் வைக்கப்பட்டிருந்த கிராமபோனைத் திறந்து ஜமீலா ஒரு இசைத்தட்டைச் சுழலவிட்டாள். நான் கேட்டே இராத தேன்சொட்டுப் போன்ற கெட்டியான குரலில் ஒரு பெண்மணியின் பாடல் ஒலித்தது.

"குரல் எப்படி இருக்கிறது பார்த்தாயா?"

"இதுவரை நான் கேட்டிராத குரலாக இருக்கிறது!"

"பேகம் அக்தர்...கஜல் பாடுபவர்களில் ராணி! கேள்விப் பட்டதே இல்லையா நீ!"

"எனக்கு சினிமா பாட்டுகளைத் தவிர வேறு எதுவும் தெரியாது."

"முட்டாள். சினிமாவில் ரஃபியும் முகேஷும் எத்தனை கஜல்கள் பாடியிருக்கிறார்கள்."

"இந்துஸ்தானி சாஸ்திரிய சங்கீதத்தில் இந்த கஜல் என்பதும் ஒரு பிரிவா?"

"இல்லை. தும்ரிதான் சாஸ்திரிய சங்கீதத்தைச் சார்ந்தது. கஜல் மெல்லிசைப் பாடல்தான்."



"நெஞ்சை உருக்குவது போல் இருக்கிறது!"

"கஜலின் அழகே இந்த உருக்கம்தான்..."

அனார்கலியும் அந்த பேகம் அக்தரின் குரலுடன் இணைந்து ஒரு வரி பாடினாள்.

"இந்தக் கஜல் பாட்டை யார் எழுதுகிறார்கள்?"

"இதை எழுதியவர் மீர்ஸா காலிப்... அற்புதமான உருதுக் கவிஞர் அவர்..."

"அப்போ உங்களுக்கு உருது தெரியுமா?"

"தெரியும்!"

சில நிமிடங்கள் நான் மௌனமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். உருது மொழி தெரியும் என்கிறாள். லக்னோவில் பிறந்து வளர்ந்தவள் என்று வேறு சொல் கிறாள். அவற்றையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இவள் ஒரு இஸ்லாமியப் பெண்.

"ஏய்... என்ன யோசனை திடீரென்று?"

"ஒன்றுமில்லை. நீங்கள் முஸ்லிம் பெண்ணோ என்று நினைத்தேன்!"

"நான் முஸ்லிம் பெண் இல்லை. ஆனால் முஸ்லிம் தம்பதியால் வளர்க்கப்பட்டேன். சரி, இரண்டு பேர் சந்தித்துக் கொண்டால் இந்து—முஸ்லிம் என்ற பார்வை களெல்லாம் தேவைதானா?"

"என்னை மட்டும் நீங்கள் மதராஸி என்று நினைத்துப் பார்த்துக் கொண்டீர்களே...?"

"அது பார்வை இல்லை. எங்கோ இருந்து வந்திருக்கும் மதராஸி பையன் இந்திப் பட ஆசையில் ஊறியவனாக இருக்கிறானே என்ற சந்தோஷம் அது."

பின் இருவருமே மௌனமாகச் சாப்பிட்டு முடித்தோம். இசைத்தட்டில் பேகம் அக்தரின் கஜல் பாடலும் முடிவு பெற்றது.

"ஆனால் ஒன்று ஹரி..." அனார்கலி சொன்னாள்: "முஸ்லிம் தம்பதியால் லக்னோ நகரில் நான் வளர்க்கப் பட்டதன் மிகப் பெரிய விளைவு என்ன தெரியுமா— உருது மொழியை நான் கற்றுக் கொண்டதுதான்... உருது தெரிந்ததால்தானே மீர்ஸா காலிப்பின் கஜல் பாடல்களைக் கரைத்துக் கரைத்துக் குடிக்க முடிந்தது என்னால்..."

"மீர்ஸா காலிப்பில் உங்களை மிகவும் கவர்ந்த சில வரிகளைச் சொல்லுங்களேன்— நானும் தெரிந்து கொள்கிறேன்!"

"... 'இறப்பு ஒரு நாள் வந்தே தீரும் நான் விரும்பாவிட்டாலும்... ஆனால், நான் விரும்பினாலும் அவள் வரவே மாட்டாள் ஒருநாளும்.'"

"ஆஹா..."

"இன்னொரு வரியும் சொல்கிறேன்..."

"... காதலின் வலிக்கு மருந்து இல்லை... அற்பமான இதயமே மறுபடியும் நீ ஏன் காதல் வலி கொள்கிறாய்...?"

"நிஜமாகவே மிக எளிமையாகவும் மனதைத் தொடும்படியாகவும் இருக்கிறது..."

"அவ்வளவுதான் ஹரி... இன்று நான் உனக்குத் தந்த விருந்து முடிந்தது. இனி நீ கிளம்பிச் செல்லலாம்..."

எனக்குத் திக்கென்றிருந்தது. என்ன இது விருந்து அரைகுறையாக முடிந்துவிட்டது...!

"வெளியில் போய் வரவேண்டிய வேலை ஒன்று இருக்கிறது... மழை விட்டிருக்கும் இந்த நேரத்தில் போய் வந்துவிட்டால்தான் நல்லது. ஏனென்றால் பம்பாயில்



பருவமழை அப்படிப்பட்டது. கொட்டித் தீர்த்துவிடும் தீர்த்து. பார்...விஹார் லேக் நேற்றே நிரம்பிவிட்டதாம்..."

"மறுபடியும் நான் உங்களை என்றைக்கு வந்து பார்க்கட்டும்?"

"அதற்கெல்லாம் கூடவா நான் உனக்கு அட்டவணை போட்டுத் தர வேண்டும்?"

"அதற்கில்லை...எனக்கு உங்களிடம் ஒரு உதவி கேட்க வேண்டும் போலிருக்கிறது!"

"அந்த உதவியை இப்போதே கேட்டுவிடு."

"நீங்கள் நினைத்தால் என்னை சினிமாத் துறையில் சேர்த்துவிட முடியும்!"

"இல்லை ஹரி. உனக்கு சினிமாவுலகம் வேண்டாம். ஆயாசமான அசுரத் தொழில் அது. நன்றாக சினிமா பார். சினிமாவுலகை மட்டும் நிமிர்ந்து கூடப் பார்க்காதே. விருப்பம் இருந்தால் சங்கீதம் கற்றுக்கொள். போதும்!"

எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. பேசாமல் நின்றேன்.

"சரி, பம்பாய் வந்தாயே... கேட் வே ஆஃப் இண்டியா பார்த்தாயா?"

அனார்கலி கேட்டாள்.

"இன்னும் இல்லை!"

"உடனே போய்ப் பார். நான்கு நாள் அங்கேயே உட்கார்ந்திரு. சினிமாவுலக ஞாபகமே உனக்கு அற்றுப் போய்விடும் அற்று..."

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

''நம்மைப் போன்றவர்களுக்கு கேட் வே ஆஃப் இண்டியா தான் போதிமரம்...!''

அனார்கலியிடம் விடைபெற்றுத் தெருவில் இறங்கி நடந்தபோது என்னுடைய மனத்திரையில் மதுபாலா நடித்த 'கேட் வே ஆஃப் இண்டியா' என்ற இந்தித் திரைப் படம் ஆளற்ற காட்சியாக வருத்தத்துடன் ஓடிக் கொண் டிருந்தது.

## 5

நூற்றுக்கணக்கான புறாக்கள் சிதறிப் பறக்க அரபிக் கடலைப் பின்னணியாகக் கொண்டு— ஒரு கோட்டையின் நுழைவாயில் என அகன்ற திண்மையுடன் உயர்ந்து நின்ற கேட் வே ஆஃப் இண்டியாவைப் பல்வேறு கோணங்களில் இருந்தும் பார்த்துக்கொண்டே இருந்தேன். ஒரு கணம் அனார்கலி தான் கட்டட வடிவில் உயரமாய்த் தியானத்தில் ஆழ்ந்திருப்பதாகக்கூடப் பார்த்தேன்! வருடக்கணக்கில் தியானத்தில் அமர்ந்துவிட்ட அந்தக் கட்டடத்தை எழுப்பி அழைத்துச் சென்று விடவும் நினைத்தேன். உண்மையில் அந்த மொத்தச் சூழலின் ஒவ்வோர் அணுவிலுமே உயிர்மை சொட்டிக் கொண்டிருந்ததையும் நன்றாக உணர்ந்தேன். என்னமோ, திடீரென்று ஷர்ட்டையும் பனிய னையும் கழற்றிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. உடனே கழற்றிவிட்டேன். அகன்ற காங்கிரீட் தளத்தில் என் முதுகுபட படுத்துக் கொள்ள வேண்டும் போலவும் இருந்தது. உடனே படுத்துக் கொண்டேன். அத்தனையை யிம் துறந்து இப்படிப் படுத்து விடுவதிலும் ஓர் ஆனந்தம் இருப்பதை மனம் உணரவே செய்தது— ஆனாலும் இப்படியே படுத்துக் கிடக்கவும் முடியவில்லை. எழுந்து



உட்கார வேண்டியிருந்தது. கடலை எட்டிப் பார்க்க வேண்டும் போலிருந்தது. புறாக்களின் மத்தியில் ஓடிப் பார்க்கும் தேவை ஏற்பட்டது வழியில்லாமல் இன்னமும் மதுரை முனிச்சாலையிலும், வக்கீல் புதுத்தெருவிலும் நின்று கொண்டிருக்கும் என்னுடைய வகுப்புத் தோழர்களுக் கெல்லாம், அனார்கலி கொடுத்த விருந்து பற்றி முழு நீளத்துக்குக் கடிதம் எழுதித் தள்ள மனசு வேறு கிடந்து அடித்துக் கொண்டது. ஆனாலும், கடிதம் எழுதுவதைத் தவிர்க்கத்தான் வேண்டியிருந்தது. தப்பித் தவறிக்கூட வேலைகெட்ட அந்தப்பயல்களுக்கு ஒரு வரிகூட எழுதிவிடக் கூடாது... எழுதினால் தொலைந்தேன்...! உடனே ஓடிப் போய் என் அப்பாவிடம் காட்டி விடுவார்கள் கடிதத்தை. சும்மா இருப்பாரா என் அப்பா கடிதத்தைப் பார்த்ததும்... அவரும் இண்டுக்கல்லைத் தாண்டப் போவதாகச் சொல்லி வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பாமல் விடமாட்டார். என்னத்துக்கு வம்பு? எந்தப் பயலுக்கும் எந்த விஷயத்தை யும் எழுத வேண்டாம்...

எனவே, யாருக்கும் எதையும் எழுதவில்லை. கேட் வே ஆஃப் இண்டியாவைச் சுற்றிச் சுற்றி வட்டமடித்துக் கொண் டிருந்தேன். 'நம்மைப் போன்றவர்களுக்கெல்லாம் இந்த கேட் வே ஆஃப் இண்டியா ஒரு போதிமரம்' என்று அனார்கலி சொன்னதை மனசு வட்டம் போட்டுக் கொண் டிருந்தது. உண்மையில் பார்த்த நிமிடமே கேட் வே ஆஃப் இண்டியா எனக்குத் தோழனாகிவிட்டது அல்லது தோழியாகி விட்டிருந்தது. ஆனால் போதிமரமாக அண்ணாந்து பார்க்கத் தெரியாத அறியாமையும் என் எதிரில் நின்று கொண்டிருந்தது. எப்படி அப்படியொரு வார்த்தையை அனார்கலியால் சூட்ட முடிந்தது? அதுதான் தெரியவில்லை. 'சினிமா பார்; சினிமாவுலகத்தை மட்டும் நிமிர்ந்துகூடப் பார்க்காதே' என்று எப்படித் தாட்சண்யமே இல்லாமல் சொல்ல முடிந்தது? அதுவும்தான் தெரிய வில்லை.

இதற்கான பதில்களையெல்லாம் எப்போது தெரிந்து கொள்ளப் போகிறேன்? எப்படித் தெரிந்துகொள்ளப் போகிறேன் என யோசித்தபடி நின்று கொண்டிருந்தபோது திடீரென அந்தச் சூழல் பரபரப்படைந்தது. பெரிய பெரிய டப்பா மாதிரியான வேன்களில் மோசமான ஒப்பனை களுடன் நாற்பது ஐம்பது பேர் ஆண்களும் பெண்களுமாக இறக்கப்பட்டார்கள். அவர்கள் எல்லோருமே எப்படி நிற்க வேண்டும் அல்லது எப்படிக் காத்திருக்க வேண்டும் என்கிற குழப்பத்தில் ஏதோ ஒரு தண்டனைக்குக் காத்திருப்பது போல விழித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் மேலும் சில பொருட்கள் வந்து சேர்ந்தபோதுதான் இதெல்லாம் சினிமா படப்பிடிப்புக்கான ஆயத்தம் என்பது தெரிந்தது.

சரேலென என்னைச் சுற்றிலும் ஓர் மானசீகக் காகிதத் திரை கிழிந்து கொண்டாற் போலிருந்தது. குவிந்து கொண்டிருந்த சினிமாவுலகத்தின் மனிதர்களையும் பொருட் களையும் வியப்புடன் சுற்றிச் சுற்றிக் கவனித்துக் கொண் டிருந்தேன். படப்பிடிப்பை வேடிக்கை பார்க்க பார்வை யாளர்கள் வேறு திரண்டு வந்தார்கள். கூட்டத்தைக் கட்டுப் படுத்தி விலக்கி வைக்க போலீஸ் படை தடிகளைச் சுழற்றிய படி கறாராக நின்றது! ஒரு கழைக் கூத்தாட்டம் நடப்பது போன்ற காட்சியைப் படமாக்க அந்த சினிமா யூனிட் தயாராகிக் கொண்டிருந்தது.

மேகம் இல்லாவிட்டாலும்கூட இயக்குநர் வானத்தை அடிக்கடி நிமிர்ந்து பார்த்தபடி இருந்தார். அவர்கள் எல்லோருமே அவசரகதியில் கோபத்தோடும் கூச்சலோடும் இயங்கிக் கொண்டிருந்தார்கள். ஒப்பனை செய்து கொண் டிருந்த ஆண்களும் பெண்களும் ஆட்டு மந்தையாக நடத்தப் பட்டனர். ஒருவர் ''சைலன்ஸ்'' என்று உரக்கக் குரல் கொடுத்தார்... ''ஸ்டார்ட் காமிரா'' என்றார்கள் ''ஆக்ஷன்'' என்றார்கள். ''கட் கட்'' என்று கத்தியபடி



தலையில் அடித்துக் கொண்டார்கள். அவசரமும் பதட்டமும் எரிச்சலும் எங்கும் சஞ்சரித்துக் கொண் டிருந்தது. என்ன இது, சினிமாவுலகம் இப்படி இருக்கிறது?! நிஜமாகவே எனக்குத் திகைப்பாகத்தான் இருந்தது. இப்படித்தான் இருக்குமா சினிமாவுலகம்? சினிமாவுலகத் தைச் சேர்ந்த இவர்கள் அழகாகக்கூட இருக்க மாட்டார் களா? ஒருத்தர்கூட அழகாக இல்லையே!

அப்போது ஒரு கார் வந்து நின்றது. ஜிப்சி பெண் வேடத்தில் முழு ஒப்பனையுடன் ஒரு நடிகை காரைவிட்டு இறங்கினார். நான் தூரத்தில் நின்றபடி உற்றுப் பார்த்தேன்... அந்த நடிகை யார் என என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. பக்கத்தில் நின்ற இளைஞனிடம் அந்த நடிகை யார் எனக் கேட்டேன்.

''இதுகூடத் தெரியவில்லையா? நூடன்'' என்றான்.

எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. திரையில் மூங்கில் தளிர் போல் காட்சியளிக்கும் அந்த நூடன்தானா இது? என்னடா இது- இந்த பம்பாய்க்கு வந்த சோதனை...! ஜிப்சி வேடத்திலும் ஒப்பனையிலும் நூடன் எப்படி இருந்தார் என்பதையெல்லாம் சொல்லவே வேண்டாம். வேடிக்கை பார்த்த கூட்டம் ஒட்டு மொத்தமாக நூடனைப் பார்க்கப் பாய்ந்தோடியது— அநேகமாக என்னைத் தவிர...! நான் சற்று தூரத்தில் என்னுடைய இடத்திலேயே தான் நின்று கொண்டிருந்தேன். எனக்கே என்னுடைய மனத்தன்மை முழுமையாக அப்போதுதான் தெரிந்தது. இப்படிக் கும்பலோடு கும்பலாகவெல்லாம் என்னால் என் கௌரவத்தை விட்டு எந்த நடிகையைப் பார்ப்பதற்காகவும் ஓட முடியாது! நான் கொஞ்சம் அகந்தை உள்ள ஆள் தான். இந்தி நடிகையென்ற மோகம் இருந்தாலும்கூட இந்தப் படப்பிடிப்பை வேடிக்கை பார்க்கிற அடையாளங் களோடு என்னையும் இணைத்துக் கொள்ள இயலவில்லை. திரைப்படக் கலாரசனை கொண்ட ஒரு கலாரசிகனாகத்

தான் என்னை அடையாளம் காட்டிக்கொண்டு எந்த நடிகையையும் என்னால் அணுக முடியுமே தவிர— அதுவும் தனிமையில்— இம்மாதிரியெல்லாம் வெறிபிடித்த கும்பலோடு கலந்து ஓடி ஓடிப் போய்ப் பார்ப்பதெல்லாம் சரிப்படாது எனக்கு

ஆகையால் நான் தூரத்திலேயே நின்றபடி நடிகை நூடனைப் பார்த்தேன். காட்சி பற்றி இயக்குநர் விளக்கிக்கொண்டிருந்தார். ஒருவர் வசனம் சொல்லிக் கொடுத்தார். சிற்சில கோணங்களில் நூடனின் நடிப்பைப் படம் பிடித்தார்கள். அப்போது வேறொரு மிகப் பெரிய கார் வந்து நின்றது. என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. காரிலிருந்து ஜிப்சி வேடத்தில் இறங்கியவர் எனதருமை ராஜ்கபூர்! என் மன ஆழத்தில் புதைந்து கிடக்கும் ஒரு பிரத்யேகமான தாவரம் மெள்ள அதிர்ந்து ஆடியது. தூரத்தில் நின்று கருவறை மூலவரைத் தரிசிக்கிற உணர்வுடன் நான் ராஜ்கபூரைத் தரிசித்தேன். மானசீகமாக சல்யூட் அடித்தேன். நானே மனத்துள் இத்தனை உணர்ச்சிவசப்பட்டேன் என்றால் கூடியிருந்த கும்பலின் உணர்வு வெள்ளத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமா என்ன?

கும்பல் ராஜ்கபூரை நோக்கிக் கடல் அலையென உயர்ந்ததை போலீஸின் தடியடி சிதறச் செய்தது. விரட்டி விரட்டி அடித்தது. என் மனம் ராஜ்கபூர் என அடித்துக் கொண்டது. ஆனால் அவரின் அருகில் போவதற்கு முயன்று போலீஸிடம் அடி வாங்குவதற்கெல்லாம் நான் தயாரில்லை...!

ராஜ்கபூருக்கு நடிப்புச் சொல்லித் தந்தார்கள். வசனத்தை விளக்கினார்கள். காட்சியை விவரித்தார்கள். காமிரா சுழன்றது. உதவி இயக்குநர்கள் ஓடிப்போய் ஒதுங்கிக் கொண்டார்கள். ஒருமுறை வசனம் சரியாக இல்லை. இன்னொரு சமயம் நடிப்பு தப்பாக அமைந்துவிட்டது. திரும்பத் திரும்ப அதையே படமாக்கிக் கொண்



டிருந்தார்கள். எல்லோருடைய முகத்திலும் அயர்வும் வியர்வையும் தெரிந்தன. ராஜ்கபூர் பகுதி முடிந்து விட்டதோ என்னவோ— திடீரென அவர் மட்டும் தன்னுடைய காரில் ஏறிக்கொண்டார். ஒரு சிலர் ஓடிப் போய் அவசர அவசரமாக அவரிடம் ஆட்டோகிராப் வாங்கிக் கொண்டார்கள். கார் புறப்பட்டு விரைந்தது. பல ரசிகர்கள், பாவம் அந்த காரின் பின்னால் ஓடினார்கள். அது ஒன்றுதான் சினிமா காட்சி போல இருந்ததே அன்றி வேறு எதுவும் எனக்கு சினிமா போலவே இல்லை! ஒரு பக்கம் போலீஸ் தடியடியை நடத்திக் கொண்டேதானா படப்பிடிப்பு? எனக்கு ஏமாற்றமாக இருந்தது. செய்யும் தொழிலே தெய்வம் இல்லையோ? அந்தத் தொழில் நடைபெறும் இடம் தெய்வ சந்நிதானம் போன்றதன்றோ? ஆனால், இதுவா தெய்வ சந்நிதானம்?

சிறிது நேரத்தில் நூடனும் கிளம்பிச் சென்றுவிட்டார். மீதப் பகுதிகளைப் படமாக்கத் தனது உதவியாளர்களுக்கு சில ஆலோசனைகளை வழங்கிவிட்டு இயக்குநரும் ஒரு காரில் ஏறிப் பறந்துவிட்டார். அதற்கு அப்புறம் ஆளுக்கு ஆள் கத்திக் கொண்டிருந்தார்கள். கல்யாணத்தில் பந்திகள் முடிந்த அப்புறம் சாப்பாட்டுக் கூடம் எவ்விதம் தோன்றுமோ— அப்படியோர் அழகில் தோற்றமளித்தது— அந்தப் படப்பிடிப்பு இடம்...!

நான் ரொம்பத் தூரம் தள்ளிப் போய் உட்கார்ந்து கொண்டேன். படப்பிடிப்பைப் பார்த்ததே எனக்கு அப்படியோர் ஆயாசத்தைத் தந்திருந்தது! ஒரு ரசிகன் என்ற அளவில் கூட என்னால் ராஜ்கபூரை நெருங்க முடியாமல் போயிருந்த நிலை என்னை மிகவும் அதிர்ச்சி அடைய வைத்திருந்தது. எனக்குத்தான் ராஜ்கபூர் இமாலய மனிதர். அவருக்கு நான் கூச்சல் போட்டு, போலீஸிடம் தடியடி வாங்கிய இந்தக் கும்பலில் ஒருவன் தான். வெறும் ஜீரோ அவருக்கு நான். அவருக்கு மட்டுமில்லை— வந்து கலைந்துபோன இந்த சினிமா மனிதர்களுக்கே நான்

சைபர்தான்! என்னைக்கூட யூனிட்காரன் ஒருவன் 'ஜாவ் ஜாவ்' என்று துரத்தினானே பாவி! எப்பேர்ப்பட்ட இளைஞன் நான்...! ராஜ்கபூர் போல் ஆகவேண்டும் என்பதற்காக காபித் தோட்டங்களையெல்லாம் விட்டு விட்டு ஓடி வந்திருக்கிற வருங்கால ராஜ்கபூர் ஆயிற்றே நான்! என்னைப் போய் 'ஜாவ் ஜாவ்' என்று துரத்தினானே! ராஜ்கபூருக்காவது தெரிய வேண்டாமா? அகத்தின் அழகு முகத்தில் தெரிய ஒரு இளைஞன் நிற்கிறானே என்று அவராகவே என்னைக் கண்டு கொண்டிருக்க வேண்டுமா வேண்டாமா? அவரால்தான் கண்டுபிடிக்க முடியவில்லை— அந்த இயக்குநராவது என்னைக் கண்டுபிடித்திருக்கலாமே கண்டுபிடிக்க வேண்டியதும் அவருடைய பொறுப்புத் தானே...!

அதென்னமோ யாருமே கண்டுபிடிக்கவில்லை என்னை. குடத்தில் இட்ட விளக்காக என்னை விட்டுவிட்டு அவர்கள் எல்லோரும் போய்விட்டார்கள் நான் என்னமோ ஆர் கே. ஸ்டுடியோ பக்கம் போனவுடனே என்னை ராஜ்கபூரிடம் அழைத்துப் போய்விடுவார்கள் என்கிற மாதிரி மிக எளிதாக நினைத்துக் கொண்டிருந்தேன் போலும்! இங்கு விஷயமே வேறு மாதிரி இருக்கும் போலும்! இப்போது நான் என்ன செய்வது? யோசித்தேன். முயற்சி திருவினையாக்கும் என்கிற பள்ளிக்கூட போதனையெல்லாம் எனக்குச் சரிப் பட்டு வராது! ரயில் ஏறி பம்பாய் ஓடி வந்த மாதிரி சினிமா உலகப் பிரவேசம் எனக்கு இலகுவாக இருக்க வேண்டும் ..! ராஜ்கபூரின் அருகில் கூடப் போய்விட முடியாத தடியடித் தடுப்புகளில் ஏறிக் குதிக்கிற தீரச் செயல்களெல்லாம் சரிப்பட்டு வராது எனக்கு! போட்டிருக்கும் ஷர்ட் கசங்காமல் நான் ராஜ்கபூராகிவிட வேண்டும் அல்லது சாந்தாராம் ஆகிவிட வேண்டும். பட்டிவீரன்பட்டியி லிருந்து கிளம்பும்போது நினைத்தேன்— கஷ்டப்பட்டு முன்னேற வேண்டும் என்று. என்னால் ஓரிரு கஷ்டங்கள் படமுடியும். ஆனால் பயங்கர கஷ்டமெல்லாம் பட



முடியாது! கிளம்பிப் போவதற்கு முன் உதவி இயக்குநர்கள் நான்கு நாட்களாக வாங்காத 'பேட்டா' பணத்துக்கு புரொடக்ஷன் மானேஜரிடம் கெஞ்சிக் கூத்தாடிக் கொண் டிருந்ததை நான்தான் நன்றாகக் கண்ணை திறந்து வைத்துக் கொண்டு பார்த்தேனே... ஒரு காபித் தோட்ட முதலாளியின் புதல்வனுக்குச் சரிப்பட்டு வருமா இந்த உதவி இயக்குநர் வேலையெல்லாம்...! அதுவும், இயக்கு நருக்குப் பயந்து பயந்து வேலை செய்து கொண்டு... சதா அவரிடம் திட்டு வாங்கிக் கொண்டு... க்ளாப் அடித்துக் கொண்டு... டிராலி தள்ளிக் கொண்டு... யம்மாடி, தமக்குத் தாங்காது. கிடைத்தால் நேரடியாக இயக்குநர் பதவி அடைந்தால் நேரடியாகவே ராஜ்கபூர் போன்ற கதா நாயகன் அந்தஸ்து. அவை கிடைக்காத பட்சத்தில்? வேறு எதுவும் தேவையில்லை. இப்படியே ஒரு இந்திப் பட ரசிக னாக மட்டும் இருந்துவிட்டுப் போகிறேன்.

இருட்டும் வரைக்கும் கேட்வே ஆஃப் இண்டியா பகுதி யிலேயே திரிந்து கொண்டிருந்தேன். 'நம்மைப் போன்றவர் களுக்கெல்லாம் கேட் வே ஆஃப் இண்டியா ஒரு போதிமரம்' என்று அனார்கலி சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. அனார்கலியின் மீது முதன் முறையாக உணர்ச்சிவசப்பட் டேன். அவளைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற ஆசை வந்தது. புறப்பட்டு நேராக விக்டோரியா டெர்மினலின் மாடிக்குப் போனேன். சிக்கன் பிரியாணி ஆர்டர் கொடுத் தேன். நெல்லை முருகேசன் பவ்யமாக வந்து விசாரித் தார்.

"என்ன தம்பி, ராஜ்கபூரைப் பார்த்தாச்சா?"

"இன்னிக்குக் கூடப் பார்த்தேனே..."

"என்னை மறந்துடாதே தம்பி..."

"உங்களை மறப்பேனா."

சாப்பிட்டு முடித்ததும் அனார்கலிக்குக் கொடுக்கலாம் என்ற எண்ணத்தில் கோழி பிரியாணி பார்சல் வாங்கிக் கொண்டு லாவரி பஜார் நோக்கிப் புறப்பட்டேன். அந்தக் கிளைத் தெருவில் திரும்பி பழைய கட்டடத்தின் மரப்படிகளில் நிறைந்த உற்சாகத்துடன் ஏறினேன். முதல் தளம் நுழைகிற இடத்திலேயே ஆரஞ்சுத் தாடிக்காரன் விறைப்பாக அமர்ந்திருந்தான்.

''எங்கே வந்தாய் இந்த நேரத்தில்?''

ஆச்சரியத்துடன் கேட்டான்.

''அனார்கலியைப் பார்க்க வேண்டும்!''

''இப்போது பார்க்க முடியாது. லால்ஜி சாகேப் வந்திருக்கிறார்...''

''லால்ஜியா, யார் அவர்?''— ஏமாற்றத்துடன் கேட்டேன்.

''எங்கள் எஜமானர்...''

## 6

''எஜமானர் என்றால்?'' நிஜமாகவே புரியாமல்தான் கேட்டேன்.

''எஜமானர்!''— தாடிக்காரன் அலட்சியமாகச் சொன்னான்.

''அப்படின்னா நான் அனார்கலியைப் பார்க்க முடியாதா?''

''பார்க்கக் கூடாது!''



''அப்படியானால் எனக்கு ஒரு உதவியாவது செய்யுங்கள்!''

''சொல்!''

''இந்தப் பிரியாணியை அனார்கலிக்காகத்தான் வாங்கி வந்தேன்... இதையாவது அவர்களிடம் சேர்த்துவிட்டால் போதும்...''

''அதைக்கூட இப்போது சேர்க்க முடியாது!''

''எப்போது சேர்த்தாலும் பரவாயில்லை.''

''ஆறிப் போனபின் மேம்சாப் சாப்பிட மாட்டார்களே?''

''சாப்பிடாவிட்டாலும் பரவாயில்லை. நான் அவர்களுக்காக வாங்கி வந்தேன் என்பது தெரிந்துவிட்டால் போதும்...''

''சரி, கொடு...''

பிரியாணிப் பொட்டலத்தை அவனிடம் கொடுத்துவிட்டுக் கீழே இறங்கினேன். படிக்கட்டின் கீழ் படுத்துவிடலாமா என்று நினைத்தேன், ஏதோ ஒன்று தடுத்தது. மறுபடியும் விக்டோரியா டெர்மினஸ் போய்ச் சேர்ந்து, முதல் நாள் படுத்துக் கொண்ட இடத்திலேயே படுத்துக் கொண்டேன். நல்லவேளை... வந்து படுத்துக் கொண்டதும் வெளியில் மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. மழையில் எங்கேயும் போய் இம்சைப்பட வேண்டியதில்லை என்றாலும் கூட அந்தக் கன மழையைப் பார்த்ததும் எரிச்சலாக வந்தது.

வெகு நேரமாகியும் எனக்குத் தூக்கமே வரவில்லை. வடநாட்டுத் திரைப்படவுலகத்தில் என்னால் குடியேற முடியுமா என்ற சந்தேகம் வந்து விட்டது. ஒரு வடநாட்டுப்

பெண்ணின் மனத்திலும் குடியேற முடியாமல் போய் விட்டால்? வடநாட்டுப் பெண் என நினைத்ததுமே அனார்கலி ஞாபகத்தில் வந்தாள். அவளை ஒரு வடநாட்டுப் பெண்ணாக என்னால் நினைக்க முடியவில்லை. அனார்கலி என் எதிர்ப்பார்ப்புக்கு மேல் கொஞ்சம் கூடுதலாக வயதாகிவிட்ட ஒரு வடநாட்டு பெண்மணி! எனக்கு வெறும் பெண்தான் தேவையாக இருந்தாள்— விளையாடுவதற்கு; ஓடுவதற்கு; பாடுவதற்கு... என்னுடைய பெண்ணின் முன்னிலையில் நான் தான் வலிமையுடன் நிற்க வேண்டும். நான்தான் அவளிடம் மணலைக் கயிறாகத் திரிக்க வேண்டும். வாய் ஓயாமல் பேசி அவளுடைய வாயை மூட வேண்டும். இந்த அனார்கலியின் எதிரில் நானல்லவா வாயை மூடிக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கிறது! என்னுடைய பெண்ணுக்கு நான்தான் ஐஸ்க்ரீம், எஸ்ப்ரெஸ்ஸோ காபி என்று ஏதாவது வாங்கிக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆனால் இந்த அனார்கலி எனக்கு விருந்து வைக்கிறாள் விருந்து...! அவள் விருந்து வைத்தால் என்ன? என் பங்குக்கு சூடாகக் கோழி பிரியாணி வாங்கிக் கொடுத்துவிட்டு வந்துவிட்டேன்! அதை அவள் சாப்பிட்டால் என்ன? சாப்பிடா விட்டால் என்ன? நான் வெறுமே வாங்கிக் கொண்டே இருக்கிற ஆள் இல்லை; கொடுக்கிற ஆள் என்பதை அந்த அனார்கலி தெரிந்து கொண்டால் அது போதும்...

அதுபோதும்தான்... அதை இல்லை என்று சொல்லவில்லை யாரும்... ஆனாலும் அனார்கலியை நான் யாராக நினைத்துக் கொள்வது? தோழியாகவா? ஒரு அக்கா மாதிரியாகவா...? என் எண்ணம் இங்கே கொஞ்சம் தடுமாறியது. அக்கா என்று சொல்லிவிட்டால் அனார்கலியின் கவர்ச்சியே அடிபட்டு போகும்! வேண்டுமானால் ஒரு பேச்சுக்கு இப்படி வைத்துக் கொள்ளலாம்— எனக்கு ஒரு இளம் மனைவி இருக்கிறாள் அந்த மனைவியின் அழகான அக்கா தான் அனார்கலி! நம்முடைய சொந்த அக்காவைவிட நம்



மனைவியின் அக்கா என்பதுதான் சுவையானதும் கூட... இல்லையா?

500559

ஆனால், 'மனைவியின் அக்காவுக்குக் கல்யாணமாகாமல் இருந்தால்தானே ஜோராக இருக்கும்...' இந்த அனார்கலி அக்காவுக்குக் கல்யாணம் ஆகியிருக்கும் போலிருக்கிறதே. யாரோ லால்ஜி சாகேப் என்கிறான் அந்தத் தாடிக்காரன்... எஜமானர் என்று வேறு சொல்கிறான். யாராக இருக்கும் அந்த எஜமானர்? யோசித்துப் பார்த்தேன். அனார்கலி மட்டும் கல்யாணம் ஆனவளாக இருந்தால் அவளிடம் அதிகமாகப் பேச்சு வைத்துக்கொள்ளக் கூடாது! எப்பேர்ப்பட்ட புருஷனாக இருந்தாலும் சரி... தன்னுடைய மனைவிக்கு ஒரு நண்பன் இருப்பதை மட்டும் எந்தக் காலத்திலும் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளவே மாட்டான்! இரவு எட்டு மணிக்குக் கோழி பிரியாணி வாங்கிக் கொண்டு வருகிற நண்பனை ஆள் வைத்து உதைக்கக்கூடச் செய்வான்! வெறும் நண்பனா இரவு நேரத்தில் பிரியாணி வாங்கிக் கொண்டு வருவான்? இவர்களின் அகராதியில் அப்படி வெறுமே பிரியாணி வாங்கித் தருவது கிடையாது. இவர்கள் அப்படி யாருக்காவது வாங்கிப் போனால் அதற்கான அர்த்தம் வேறு. அந்த அர்த்தத்தில்தானே இவர்கள் மற்றவர்களையும் பார்ப்பார்கள்...!

894.8113
STE

பிரியாணியைத் தாடிக்காரனிடம் கொடுத்துவிட்டு வந்தது மிகப்பெரிய தவறு. தெரிந்தோ தெரியாமலோ இந்தத் தவறைச் செய்தாகிவிட்டது. இனியொரு முறையும் இதே தப்பைச் செய்துவிடக் கூடாது... சரியா? சரியென்றுதான் தோன்றுகிறது! ஆனாலும் மனம் முழுதாக இதை ஒப்புக் கொள்ளத் தயங்குகிறதே...! தப்பை மறுபடியும் ஒரே ஒரு முறை செய்து பார்க்கத்தானே ஆசைப்படுகிறது. அதனால் மறுபடியும் பிரியாணி வாங்கி விட்டேன்— மறுநாளே!

CPL 500559
...RA PUBLIC LIB...

"அடப் பாவமே... இன்றைக்கு வேறு வாங்கி வந்து விட்டாயா?"- எதிர் பார்த்திராத தொனியில் அனார்கலி கேட்டாள்.

"ஏன், வாங்கி வரக்கூடாதா?"

"அதற்கில்லை. நேற்றைக்கு வாங்கித் தந்துவிட்டுப் போனதையே நான் சாப்பிட வில்லை...'

"ஏன்?"

"லால்ஜி வந்திருக்கும்போது யாரும் எதற்காகவும் என்னுடைய அறைப்பக்கம் வரக்கூடாது!"

"லால்ஜி என்பவர் யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா?"

"மிகப் பெரிய வியாபாரி. பேரீச்சம் பழம், உலர்ந்த திராட்சை, அல்மாண்ட். அக்ருட் போன்றவற்றை மொத்தமாக விற்பனை செய்கிறவர்... மஜீத் பந்தரில் அவருடைய வியாபாரக் கேந்திரம் இருக்கிறது. இந்தக் கட்டடம் அவருடையது. என்னுடைய பெயரில் எழுதி வைத்திருக்கிறார்... போதுமா?"

'உங்கள் பெயருக்கு ஏன் எழுதி வைத்திருக்கிறார்?" விடாமல் கேட்டேன்.

"நீ ஏன் எனக்குப் பிரியாணி வாங்கிக் கொண்டு ஓடி வந்திருக்கிறாய்?"- பளிச்சென்று கேட்டாள்.

அனார்கலியின் இந்தக் கேள்விக்கு என்னால் பளிச்சென்று பதில் சொல்ல முடியவில்லை! அதனால் பேசாமல் இருந்தேன்.

"முக்கியமான கேள்விக்கு மட்டும் பதில் சொல்லாதே—"



"மன்னித்து விடுங்கள். இனிமேல் இப்படியெல்லாம் பிரியாணி வாங்க மாட்டேன்..." என்றேன்.

"அப்படியானால் இந்தப் பிரியாணிப் பொட்டலத்தையும் எடுத்துக் கொண்டு நீ இடத்தைக் காலிபண்ணலாம்..."

நான் கொஞ்சம் அதிர்ந்து போய்ப் பார்த்தேன்.

"இடத்தைக் காலி பண்ணச் சொல்லி விட்டால் உடனே காலி பண்ணிட வேண்டும்!" என்றாள்.

உடனே நானும் இடத்தைக் காலி பண்ணிவிட்டேன்—நேராக கேட் வே ஆஃப் இண்டியாவுக்கு ஓடினேன். அம்மாவிடம் ஓடுகிற குழந்தையாக...

அங்கேயும் என்னுடைய கஷ்ட காலம்... நேற்றைக்குப் படப்பிடிப்பு நடத்திய அதே சினிமா கோஷ்டி அதே காட்சியை அதேவிதமான கூச்சலோடும் அதேவித கோபங்களோடும் அவசரங்களோடும் படமாக்கிக் கொண்டிருந்தது— கதாநாயகி வேஷ நடிகையும் கதாநாயக வேஷ நடிகரும் இல்லாமல். என்னமோ திடீரென்று ஒரு ஆக்ரோஷம் வந்தது. சினிமாவுலகில் நுழைவதற்குத் தீவிரமாக முயன்றால்தான் என்ன? எதற்காக ஒரே நாளில் இந்தப் பழம் புளிக்கும் என்று ஓடிப் போக வேண்டும்?

எழுந்து வேகமாகக் கும்பலையெல்லாம் விலக்கிவிட்டு அந்த சினிமா கோஷ்டியின் ஊடே போய் நின்றேன். இயக்குநரைப் பார்த்து வணக்கம் தெரிவித்தேன். அலட்சியமாக என்னைப் பார்த்தார்.

"என் பெயர் ஹரிராம்... இந்தி சினிமாவுலகில் நான் நுழைய வேண்டும். அதற்கு நீங்கள்தான் உதவ வேண்டும்..."

"உனக்கு என்ன வேலை தெரியும்?"

''எந்த வேலையாக இருந்தாலும் செய்வேன்!''

''புரொடக்ஷன் மானேஜர்...''— அந்த இயக்குநர் உரக்கக் குரல் கொடுத்தார்.

''யெஸ் சார்!''

மிக ஒல்லியாய் ஒருவர் ஓடிவந்தார்...

''இந்தப் பையனுக்கு வேலை வேண்டுமாம்... வேலை ஏதாவது காலி இருக்கிறதா?''

''ஒரு புரொடக்ஷன் பையன் தேவையாக இருக்கிறது சார்...''

''சேர்த்துக் கொள்!''

''புரொடக்ஷன் பையன் வேலை பார்க்கிறாயா?''

''என்னென்ன வேலை பார்க்க வேண்டியிருக்கும்...?''

''சாப்பாடு பரிமாற வேண்டும்... சாயா ஊற்றித் தர வேண்டும் எல்லோருக்கும்...''

''நான் நடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்...''

''அந்த வேலைக்கெல்லாம் ஆள் தேவையில்லை...''

அந்த புரொடக்ஷன் மானேஜர் அவரின் வேலை மும்முரத்தில் கலந்துவிட்டார். என்னை விலகிக் கொள்ளச் சொன்னார்கள். விலகி நின்று கொண்டேன். கழைக் கூத்தாட்டம் படமாக்கப்பட்டது...

இரண்டு மணி நேரங்களுக்குப் பிறகு அந்த சினிமா கோஷ்டி என்னை லட்சியமே பண்ணாமல் கலைந்தும் சென்றது. சே! இவர்கள் படப்பிடிப்பு நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் நேற்று மாதிரி மழை பெய்யாமல் போய் விடுகிறதே... தப்பித்து விடுகிறார்களே...



என் உடம்பும் மனமும் களைத்துப் போய்விட்டன... தங்கக்கூட இடம் இல்லாமல் பம்பாயில் இப்படியே காலம் தள்ள முடியாது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. வேளா வேளைக்குச் சாப்பிட்டால் மட்டும் போதாது என்பதும் புரிந்து போய்விட்டது... களைப்புத் தீர, வீடு வேண்டும். பேசுவதற்கு மனிதர்கள் வேண்டும். வெறும் கனவுகளில் வாழ்தல் சரிவராது. பம்பாய் நகர் முழுவதையும் நன்றாகச் சுற்றிப் பார்க்க வேண்டும். பிடித்த நடிகைகளின் வீடுகள் எங்கே இருக்கின்றன என்பதையெல்லாம் முகவரியை வைத்துத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்... ஏதாவது ஒரு லட்சியத்தையாவது நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். எந்த லட்சியமும் நிறைவேறாத பட்சத்தில் மறுபடியும் திண்டுக்கல்லைத் தாண்டி ஊர் போய்ச் சேர்ந்து விட வேண்டும்.

அப்போது தூரத்தில் ஒரு கார் வந்து நின்றது. காரிலிருந்து ஒரு கிழவியும் அவளுடன் திருமணமான குஜராத்திப் பெண்ணின் புடவைத்தலைத்தோடு ஒரு அம்மணியும் இறங்கி நடந்து வந்தார்கள். அம்மணிதானே என்ற அலட்சியத்துடன் நான் மீண்டும் அரபிக்கடல் பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டேன்...

சில நிமிஷங்கள் கழித்து என் பின்னால் ''ஏய் பிரியாணி!'' என்ற குரல் கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்தேன்.

குஜராத்திப் பெண் ஸ்டைலில் நின்றிருந்த அம்மணி—அனார்கலி அம்மணிதான்...! அவளுடன் வந்திருந்தது ஜமீலா.

என்னுடைய இந்தி சினிமாவின் அழகான வெளிப்புறப் படப்பிடிப்பு மிக அமைதியாக ஆரம்பித்திருந்தது...!

# 7

"என்ன ஹரி... போதிமரத்தைத் தேடி வந்து விட்டாய் போலிருக்கிறதே!"— கேட்டுக் கொண்டே அனார்கலி சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்டாள்.

"அனார்கலி, நான் கொஞ்ச தூரம் நடந்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லி ஜமீலா நகர்ந்து போனாள்.

"என்ன, பதிலே சொல்ல மாட்டேன் என்கிறாய்..."

"உங்கள் வீட்டிலிருந்து கிளம்பியதும் இங்கேதான் வந்து விட்டேன்!"

"ஏன்... வேறு போக்கிடமே இல்லையா உனக்கு!"

"கிடையாதே..."

"நிஜமாகவே உனக்குத் தங்கிக் கொள்ள இடமே இல்லையா?"

"நிஜமாகவே இல்லை!"

"தங்கிக்கொள்ள இடம் இல்லாவிட்டால் போகிறது உனக்கென்று மனிதர்களாவது இருக்கிறார்களா?"

"யாரும் பம்பாயில் கிடையாது!"

"பாவி! இப்படியா சினிமா ஆசையில் இடமும் மனிதர்களும் இல்லாமல் ஓடிவருவாய்?"

"நீங்கள் கூடத்தான் சினிமா ஆசையில் ஓடி வந்தீர்கள்..."

"எனக்குத் தங்கிக்கொள்ள இடம் இருந்தது; மனிதர்களும் இருந்தார்கள்!"

"காரில் வந்து இறங்கினீர்களே... அது யாருடையது?"



"லால்ஜியின் கார்..."

"ஏன் உங்களை இறக்கி விட்டதும் போய்விட்டது?"

"அவர்களுக்கு வேறு வேலையே இலலையா என்ன... நான் உட்கார்ந்திருப்பேன் இங்கு இரண்டு மணி நேரங்களுக்கு..."

"நீங்கள் காரிலிருந்து இறங்கியபோதே பார்த்தேன்—ஆனால் குஜராத்திப் பெண் ஸ்டைலில் புடவை கட்டியிருப்பதால் உங்களை அடையாளம் தெரியவில்லை..."

"வெளியில் வரும் வேளைகளில் இப்படித்தான்..."

"உங்களுக்கு இந்தப் புடவை ஸ்டைல் மிகவும் அழகாக இருக்கிறது. இந்தி சினிமாக்களில் அழகிய அண்ணி வேஷங்களில் வருகிற நடிகை போல் இருக்கிறீர்கள்...!"

"அதற்கும் சினிமா உதாரணம்தானா? வாழ்க்கையில் நீ உருப்படவே மாட்டாய் போலிருக்கிறது!"

"தயவு செய்து அப்படிச் சொல்லாதீர்கள். ஏற்கெனவே ரொம்பவும் மனசு நொந்து போயிருக்கிறேன். நேற்றும் இன்றும் இங்கே ஒரு சினிமா கம்பெனி படப்பிடிப்பு நடத்த வந்திருந்தது. அவர்களிடம் போய் எனக்கொரு சந்தர்ப்பம் தரும்படி கேட்டேன். சாப்பாடு பரிமாறுகிற புரொடக்ஷன் பையன் வேலை தருவதாகச் சொன்னார்கள்..."

—இதைச் சொன்னபோதே துக்கத்தால் என் தொண்டை அடைத்தது.

"அதற்குத்தான் நான் சொன்னேன்— சினிமாவுலகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்காதே என்று... ஆனால், ஒரேயடியாக உன்னை அப்படியும் சொல்லிவிட முடியாது.

இத்தனை தூரம் நீ இங்கு ஓடிவந்திருப்பதே சினிமா மோகத்தில் தானே...''

''நான் பம்பாய்க்கு ஓடிவந்தது சினிமா மோகத்தினால் மட்டும் கிடையாது.''

''இன்னும் என்ன மோகம் பாக்கி இருக்கிறது?''

''நடிகைகள் மேல் மோகம். சில நடிகைகளுக்கு நான் காதல் கடிதங்களும் எழுதியிருக்கிறேன்.''

''எப்படி இதை வெட்கமே இல்லாமல் சொல்கிறாய்?''—அனார்கலி மிகவும் ஆச்சரியவயப்பட்டுக் கேட்டாள்.

''உங்களிடம் மறைக்க விரும்பவில்லை!''

''அழகான அண்ணி போல் இருக்கிறேன் என்பதாலா?''

அனார்கலி இவ்விதம் கேட்டது எனக்கொரு திருப்தியான வெட்கத்தைத் தந்தது.

''நடிகைகளின் காதல் கிடைக்காவிட்டால் கூட—போனால் போகிறதென்று மனசைச் சமாதானம் செய்து கொள்வேன்... ஆனால், ஒரு வடநாட்டுப் பெண்ணின் காதல்கூட எனக்குக் கிடைக்காமல் போனால்தான் ரொம்பவும் கவலைப்படுவேன். அதற்கும் சேர்த்துத்தான் நான் பம்பாய்க்கு ஓடி வந்தேன்...''

''உன்னை மாதிரி ஒரு முட்டாள் பையனை எந்த நாட்டுப் பெண்ணுமே காதலிக்க மாட்டாள்!...''

''எனக்குத் தெரியும் நான் முட்டாள் பையன் இல்லை!''

''அது நீ காதலிக்க விரும்பும் பெண்ணுக்குத் தெரியாதே...!''



''தெரிய வைத்துவிட்டுப் போகிறேன்...!''

''உனக்கு எனது நல்வாழ்த்துக்கள்... ஆனால், நீ கறுப்பு என்பது ஒரு தகுதிக்குறைவு என்று நினைக்காதே. அது தவறு. கறுப்பாக இருந்தாலும் சிகப்பாக இருந்தாலும் ரோஜா மலர் ரோஜா மலர்தான்...''

''என்னை ரோஜா மலர் என்றா சொல்கிறீர்கள்?''—பெருமிதத்துடன் கேட்டேன்.

''நீ ஒரு கறுப்பு ரோஜா!''—நான் நம்பும்படி அழுத்தமாகச் சொன்னாள்.

எனக்கு அனார்கலியின் கைகளைப் பிடித்துக் கொண்டு நன்றி சொல்ல வேண்டும் போலிருந்தது... ஆனாலும், நன்றியை வெறுமனே தான் சொன்னேன்1 கைகளைப் பிடிப்பதற்குப் பயமாக இருந்தது.

''சரி, சினிமாக்காரர்களிடம் கேட்டாய்... புரொடக்ஷன் பையன் வேலைதான் இருக்கிறதென்று சொன்னார்கள். இனி என்ன பண்ணப் போகிறாய்?''

''ஒரே ஒரு நாள் உங்களுடைய விருந்தாளியாக இருந்தேன்— அதற்குள் என்னை இப்படிக் கறுப்பு ரோஜா என்று சொல்லிவிட்டீர்களே...!''

''எனக்குப் பதில் சொல்லாமல் நீ கேள்வி கேட்கிறாய்...''

''நீங்களாவது பதில் சொல்லுங்களேன். எனக்குத்தான் பதில் சொல்லத் தெரியவில்லை...''

''ஒப்புக் கொள்கிறேன்... ஒரு நாள் மட்டும்தான் நீ என் விருந்தாளி. இன்றிலிருந்து எனக்கு நீ நண்பன்!''

''அப்படியானால் என் வாழ்க்கையின் முதல் தோழி நீங்கள்தான்...''

"சரி, இப்போது உனக்குத் தங்கிக் கொள்ள உடனடியாக ஒரு இடம் தேவை... அதற்கு என்ன செய்யலாம் என்று நினைக்கிறாய்...? உனக்கு விருப்பமிருந்தால் நான் சொல்வதைச் செய்!"

"சொல்லுங்கள்!"

"பேசாமல் என்னுடைய கட்டடத்துக்கே வந்துவிடு. சாப்பாடும் உனக்கு என் வீட்டிலேயே..."

"நிஜமாகவே எனக்கு உங்கள் காலில் விழவேண்டும் போலிருக்கிறது... என்னால் நம்பவே முடியவில்லை... எப்படி என்மீது இத்தனை அன்பு காட்டுகிற அளவுக்கு ஒரு நண்பனாக ஏற்றுக் கொண்டு விட்டீர்கள்?"

"இந்தி சினிமாவில் வருகிற அழகான அண்ணிபோல் இருக்கிறேன் என்று சற்று முன்னால் சொன்னாய் பார்... இதற்கு முன்னால் எந்த வயது ஆடவனும் என்னை அப்படிப்பட்ட வாஞ்சையான பார்வையில் பார்த்ததே கிடையாது ஹ்ரி... எல்லா ஆடவனுமே என்னைப் பெண் உடலாய் மட்டுமேதான் பார்த்திருக்கிறான்; அணுகியிருக்கிறான். அந்தக் காயம் எனக்குள்ளும் இருக்கிறதல்லவா...?"— அனார்கலி சிறிது உணர்வுவயப்பட்டுப் பேசினான்.

"எனக்கு உங்களைப் பற்றி நிறையத் தெரிந்துகொள்ள வேண்டும் போலிருக்கிறது..."

"அதுதான்— என்னுடைய கட்டடத்தில்தானே நீயும் இனிமேல் தங்கிக் கொள்ளப் போகிறாய்!"

"இதையெல்லாம் ஊரில் இருக்கும் என் நண்பர்களுக்கு எழுத வேண்டுமென்று எனது மனம் கிடந்து அடித்துக் கொள்கிறது!"

"இன்னும் மூன்றே மூன்று நாட்களுக்கு மட்டும் எங்கேயாவது தங்கிக் கொள். அதற்குள் நான் உன்னைப் பற்றி லால்ஜியிடம் பேசி விடுகிறேன்!"



"அவரிடம் சொல்லத்தான் வேண்டுமா?"

"இரண்டாம் தளத்தில் நீ தங்குவதாக இருந்தால் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால் நான் இருக்கும் தளத்திலேயே உன்னைத் தங்க வைத்துக் கொள்ள நினைக்கிறேன். அதனால் இந்த விஷயத்தை லால்ஜியிடம் முதலிலேயே சொல்லி விடுவதுதான் மரியாதை..."

"உங்கள் தளத்தில் இப்போது வேறு யாரெல்லாம் இருக்கிறார்கள்?"

"ஒரு அறையில் ஸரோத் வாத்தியக் கலைஞர் ஒருவர் இருக்கிறார். இன்னொரு அறையில் நடனமாடும் இரண்டு பெண்கள் இருக்கிறார்கள்."

"உங்களுக்கு வேண்டியவர்களா?"

"தெரிந்தவர்கள்!"

"லால்ஜியிடம் என்னைப் பற்றி என்ன சொல்வீர்கள்?"

"அதை நான் யோசித்துக் கொள்கிறேன். ஆனால் ஒன்று— உன்னை என்னுடைய மைத்துனன் போன்றவன் என்றெல்லாம் சொல்லமாட்டேன்!"

"நீங்கள்கூட இந்த குஜராத்தி ஸ்டைல் புடவையில் மட்டும்தான் இந்தி சினிமாவில் அண்ணி வேஷமிட்ட நடிகை போல் தெரிகிறீர்கள்..."

"பரவாயில்லை... நீ உண்மையைப் பேசுகிறாய்..."

"அதென்னமோ பெண்களிடம் என்னால் பொய் பேச முடிவதில்லை!"

"உடனே உரித்துவிட்டுக் கொள்ளாதே... சும்மா என்னைப் பெண்ணாகவும் பார்க்காதே..."

''இல்லை... இல்லை!''

''எனக்கு நீ ஒரு வேலை செய்யவேண்டும் ஹரி...''

''சொல்லுங்கள்!''

''நானும் ஜமீலாவும் சினிமாவுக்குப் போகிறோம். நீ போய் எங்களுக்கு ஒரு டாக்ஸி கொண்டு வந்துவிடேன்!''

''என்ன சினிமா?''— ஆசையுடன் கேட்டேன்.

''மராட்டா மந்திரில்— 'ஏக் முஸாஃபிர் ஏக் ஹஸினா' ...படம் சுமாராகத்தான் இருக்கும். ஆனால் பாட்டெல்லாம் ஏ.ஒன்!''

''ஓ.பி. நய்யார் மியூஸிக் ஆயிற்றே.''

''பார்த்துவிட்டாயா என்ன?''

''எங்கள் ஊருக்கு அத்தனை சீக்கிரம் வந்துவிடாது. ரேடியோவில் பாட்டுக் கேட்டேன். மிகவும் ஜோராக இருந்தது.''

''சரி, அதோ ஜமீலா வந்துவிட்டாள்... போய் டாக்ஸி கொண்டு வருகிறாயா?''

''ஒரு விஷயம்''— என்றேன் தயக்கத்துடன்.

''என்ன?''

''அதென்ன உங்கள் வலது புறங்கையில் சிகப்பாய்ப் படை போல்...''

''சில நாட்களாகவே இருக்கிறது இது'' என்றாள் அலட்சியமாக.

''கவனித்து அதற்கு மருந்து போடுங்கள்!''

''ரொம்பவும்தான் அக்கறை காட்டுகிறாய்...''



''என் குணம் இது. யாருக்காவது உடம்புக்குச் சின்ன அசௌகரியம் வந்தாலும்கூட விழுந்து விழுந்து கவனிப்பேன். அதேபோல் எனக்குச் சிறு உடல்நலக் குறைவு ஏற்பட்டாலும் மற்றவர்களும் என்னை மிகவும் அன்புடன் கவனிக்க வேண்டும் என விரும்புவேன்...''

''இந்த விஷயத்தில் நான் உனக்கு நேர் எதிர்... எனக்கு உடம்பு சரியில்லாத சமயங்களில் யாரையும் பார்க்கக்கூட எனக்குப் பிடிக்காது. யாரையும் என் அருகில் வரவும் விடமாட்டேன்... மிகவும் தனியாகவே இருப்பேன்!''

''ஒரு நிமிஷம் காத்திருங்கள்... டாக்ஸி அழைத்து வந்துவிடுகிறேன்!''

தூரத்தில் நின்ற டாக்ஸியை சில நொடிகளில் அழைத்து வந்தேன்... அனார்கலியும் ஜமீலாவும் டாக்ஸியில் ஏறி அமர்ந்து கொண்டார்கள்... டாக்ஸி மெதுவாக நகர்ந்து விரைந்தபோது எனக்கு அதன் பின்னால் வேகமாக ஓடலாம் போலிருந்தது! ஆனாலும் ஓடாமலேயே நின்றேன். அப்போது அன்றைய முதல் மழைத் துளி என் மேல் விழுந்தது— எனக்குள் என்னுடைய இந்தி சினிமா மிகவும் துரிதகதியில் படமாக்கப் பட ஆரம்பித்து விட்டிருந்தது— 'கருப்பு ரோஜா' என்ற தலைப்பில்!

## 8

இடையில் அந்த மூன்று நாட்கள் நான் மிகவும் பதட்டத்துடன் இருந்தேன். நிஜமாகவே நான் அனார்கலி என்ற பெண்ணைச் சந்தித்திருக்கிறேன் என்பதை எப்படி நினைத்துப் பார்த்தாலும் என்னால் நம்ப முடியாமலே இருந்தது. இந்தி சினிமா உலகம் என் கைகளுக்கு எட்டாமல்

போனாலும்கூட, என் பம்பாய் வாழ்வே அழகிய இந்தி சினிமாவாக என்னுள் படமாகிக் கொண்டிருந்தது. என்னைப் பெருமைப்படவும் வைத்தது.

அனார்கலியைக் கதாநாயகியாக நடிக்க வைத்து, நானே ஒரு இந்திப் படம் தயாரித்தால் என்ன என்றுகூட என் மனம் யோசித்தது. நான் ஒன்றும் பணம் இல்லாதவன் இல்லையே! ஊரில் தோட்டம் தோட்டமாக காபி விளைகிறதே... அந்தத் தோட்டங்களும் பூர்வீகச் சொத்துக்கள்தானே! அவற்றில் எனக்கும்தான் பங்கு இருக்கிறதே! என்னுடைய பங்கைத் தரமுடியாதென்று என் அப்பா ஒன்றும் சொல்ல முடியாதே... அப்படிச் சொல்ல அவருக்கு 'ரைட்ஸ்' கிடையாதே! ஆனால், என்னுடைய பங்கை இப்போது கேட்பதற்கு எனக்கு ரைட்ஸ் கிடையாது. சட்டப்படி எனக்கு இன்னும் பதினெட்டு வயது முடியவில்லை. மனத்தால் பதினெட்டு வயதையெல்லாம் நான் தாண்டி எவ்வளவோ காலமாகிவிட்டது! சட்டத்துக்கு என் மனம் தெரியாதே! இப்போது நடப்பது ஜூலை மாதம் தான். பிப்ரவரி வந்தால்தான் எனக்குப் பதினெட்டு வயது முடியும். பிப்ரவரிக்கென்ன இன்னும் ஏழு வருடமா இருக்கிறது? ஏழே மாதம் ஏழு மாதம்... காத்திருப்பதென்ன கஷ்டமான காரியமா?

"நெஜமாவா தம்பி நீ சினிமா எடுக்கப்போறே?"— நெல்லை முருகேசன் வாயைப் பிளந்தவாறு கேட்டார்.

"நெஜமாத்தாங்க அண்ணாச்சி... நானே சொந்தத்துல எடுத்துடலாம்னு பாக்கறேன்..."

"உன் படத்துல ராஜ்கபூர் சார்தானே தம்பி?

"இல்லைங்க.. அதெல்லாம் சரிப்பட்டு வராது போலிருந்தது— அதனால அவரைப் போய்ப் பாக்கறதையெல்லாம் விட்டுட்டேன்... இப்ப வேற மாதிரியா—ரொம்ப



வித்தியாசமான சப்ஜெக்டா திங்க் பண்ணிட்டு இருக்கேன்..."

"உன் சப்ஜெக்டைத்தான் லேசா சொல்லேன் தம்பி... நானும் தெரிஞ்சுக்கறேன்..."

"சாவகாசமா இன்னொரு நாள் வந்து சொல்றேங்க."

"எப்படியோ தம்பி... நம்ம பக்கத்துப் பையன் நீ வந்து இந்த இந்தி சினிஃபீல்டுல பேரும் புகழும் வாங்கினா நாளைக்கு எனக்கும்தானே அதுல பெருமை..."

"நிச்சயமா உங்களுக்கும் அந்தப் பெருமையில் பங்கு உண்டுங்க அண்ணாச்சி..."

"இந்த ஒரு வார்த்தை போதும் தம்பி..."

சாப்பிட்டுவிட்டு நெல்லை முருகேசனிடம் விடைபெற்ற போது பில் கொண்டு வந்தார். பில்லில் அவர் போட்டிருந்த தொகையைப் பார்த்ததும் எனக்கு திகைப்பாக இருந்தது. முருகேசன், நான் சிக்கன் பிரியாணி சாப்பிட்டதற்கு மட்டுமான தொகையைத்தான் பில்லில் போட்டிருந்தார். நான் சாப்பிட்டிருந்த இரண்டு ஆம்லெட்டுக்கான தொகையைச் சேர்க்காமல் விட்டிருந்தார்.

"என்னங்க அண்ணாச்சி... ரெண்டு ஆம்லெட் வேற நான் சாப்பிட்டிருக்கேன்... அதை மறந்துட்டீங்களே?" என்றேன்.

முருகேசன் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டுத் தணிந்த குரலில் சொன்னார்: "இருக்கட்டும் தம்பி... ஏதோ என்னால முடிஞ்சது! நாளைக்கு நீ சினிமா எடுக்கறப்ப என்னைக் கவனிச்சுக்க மாட்டியா!"

அவர் இப்படி சொன்னதும் எனக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது. அவரின் செயல் எனக்குப் பிடிக்கவில்லை தான். ஆனாலும் என்ன செய்வது? கல்லாவில் போய்

அவரைக் காட்டியா கொடுக்க முடியும்? பிரியாணிக்கான காசை மட்டும் செலுத்திவிட்டுச் சத்தம் போடாமல் வெளியில் வந்தேன். சே! சினிமா என்று சொன்னாலே— ஒவ்வொருத்தனும் ஆலாய் பறக்கிறானே! ஆனால் இவன்களாவது வெறும் சினிமா பைத்தியம்தான். நான் சினிமா நடிகைகள் பைத்தியம் வேறு ஆயிற்றே. வெறும் சினிமா நடிகைகள் பைத்தியம் மட்டும் தானா? வடநாட்டு பெண்கள் மேலேயே பைத்தியம் வேறு... நான் நினைக்கிறேன் இந்த பைத்தியம் இந்தியாவிலேயே எனக்கு மட்டும் தான் இருக்கும்... வேறு எவனுக்கும் இருக்காது.

மூன்று நாள் பொழுதையும் முக்கி முனகிக் கழித்து விட்டு, நான்காம் நாள் காலை அனார்கலியின் வீட்டுக்கு நான் டாக்ஸியில் போய் இறங்கினேன்.

''என்ன ஹரி, எனக்குப் பிரியாணி வாங்கி வந்தாயா இல்லையா?''— என்னைப் பார்த்த உடனே அனார்கலி கேட்டாள்.

''வாங்கவில்லை!''

''ஏன்?''

''செண்டிமெண்ட்!''

''இரண்டு தடவை வந்தபோதும் நான் சாப்பிட வில்லை என்பதாலா?''

''லால்ஜியிடம் கேட்டுவிட்டீர்களா?''— பரபரப்புடன் கேட்டேன்.

''கேட்டு விட்டேன்!''

''என்ன சொன்னார்?''

''நூறு கேள்விகள் கேட்டுவிட்டார்!''

''அப்படியா?''



''உன்னைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார்!''

''ஐயையோ... எதற்காக?''

''நீ பதினெட்டு வயது இளைஞன் என்றேன்... முதலில் யோசித்துப் பார்த்துவிட்டு 'வேண்டாம்' என்று சொல்லி விட்டார்...''

நான் மௌனமாக இருந்தேன்.

''ஆனால் பார்ப்பதற்குப் பதினைந்து வயதுப் பையன் போலத்தான் இருப்பானென்று சொன்னேன்...''

நான் அவசரமாகக் குறுக்கிட்டுச் சொன்னேன்: ''மனத்தால் நான் இருபது வயதுக் காளைக்கும் மேலானவன் என்றே நீங்கள் சொல்லியிருக்கலாமே...''

அவ்வளவு தான்... உன்னை இங்கே தங்கவைக்கக் கூடாது என்பார்...''

''அவருடைய சம்மதம் இல்லாமல் நீங்கள் என்னை இங்கே தங்க வைக்க முடியாதா?''

''முடியும்... ஆனால், நான் அதை விரும்பவில்லை...''

அனார்கலியின் சுபாவத்தில் சில உறுதியான கோணங்களை என்னால் பார்க்க முடிந்தது. எனக்கு அவளின் புறத்தில் ஓர் அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்திருக்கும் சிறிய பெருமிதம் அவளுடைய கண்களில் படர்ந்திருந்தது.

''உனக்கு சந்தோஷம் தானே ஹரி?''— இதை அனார்கலியே சந்தோஷத்துடன் தான் கேட்டாள்.

''சந்தோஷம்தான்... ஆனாலும் பார்ப்பதற்கு நான் பதினைந்து வயதுப் பையன் போலத்தான் இருப்பேன் என்ற தகவலில்தான் என்னை இங்கே தங்கிக் கொள்ள

லால்ஜி அனுமதி தந்திருக்கிறார் என்ற செய்தி என்னைக் கொஞ்சம் வருத்தப்படவே வைக்கிறது..."

"நான் வேண்டுமானால் உன்னை அப்படி நினைத்துக் கொள்ளாமல் இருக்கிறேன்..."

"ஏன்... இதையே அவரும் நினைத்துவிட்டுப் போக லாமே?"

"இதிலென்ன கஷ்டம் என்று விளங்கவில்லை எனக்கு..."

"மனசால் நீ ஒரு இருபது வயதுக் காளையென்று கண்டால், எப்படி எனக்கு அருகில் உன்னை இங்கே தங்க வைப்பதற்குச் சம்மதிப்பார்? அந்த இருபது வயதுக் காளை, அவருடைய அனார்கலியின் மனசையும் கற்பையும் கொள்ளையடித்து விட்டுப் போய் விடுமே!"

நான் இப்படியொரு பதிலை எதிர்பாராததால் கொஞ்சம் அதிர்ந்து போனேன்.

அனார்கலியே தொடர்ந்தாள்: "இருபது வயதுக் காளையாக எவன் வந்தாலும் அனார்கலியும், தன் மனசை யும், கற்பையும் கொள்ளை கொடுப்பதற்குத் தயாராகவும், அத்தனை பலவீனமாகவும் காத்துக் கிடக்கிறாளே..."

—அவளுடைய குரலில் உணர்வு மேலிடுவது தெரிந்தது. அவளின் முகம்கூடச் சிறிதே சிவந்து கன்றியது. அனார்கலி மேலும் சொன்னாள்.

"இதை மட்டும் நீ புரிந்துகொள் ஹரி... எந்த ஆண் பிள்ளையாக இருந்தாலும் சரி— அவனுக்கு உண்மையான ஒருத்தியுடன் இன்னோர் இளைஞன் நெருங்கிப் பழக மட்டும் அனுமதிக்கவே மாட்டான். உடனே சந்தேகப்படு வான்... பயப்படுவான்..."



"புரிகிறது. ஆனால், அவர்களின் பயத்துக்கு அவர்கள் தான் பொறுப்பாளி. நான் பொறுப்பாளி இடையாது என்பதை முதலில் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்" என்றேன்.

என்னுடைய இந்தப் பதிலைக் கேட்டதும் அனார்கலி யின் கண்களில் ஒரு களிப்பு மின்னல்போல் மின்னி மறைந்தது.

"சரியான ஆளாகப் பார்த்துத்தான் இங்கே தங்கிக் கொள்வதற்காக நான் அழைத்து வந்திருக்கிறேன்" என்றாள். கண்களில்கூட அவளின் உணர்வுகள் தெரிய! யாருக்கோ ஒரு நன்றிகூட அனார்கலியின் அந்த நிமிடக் கண்களில் பரவிப் போயிருந்தது. நானும் என் கண்களில் நன்றி தெரிய அவளைப் பார்த்தேன். முதல் நாளன்று இரவு மழைக்காகக் கதவுகளை எனக்குத் திறந்துவிட்ட அனார்கலி — எனக்கு ஒரு புதுமுகக் கதாநாயகி! மறுநாள் மாமிசத் துடன் உணவு தந்த அனார்கலி— ஒரு வனப்பு மிக்க வடநாட்டு அம்மணி! குஜராத்திப் பாணி உடையில் கண்ட அனார்கலி— அண்ணி வேஷத்தில் தோன்றிய எழிலான நடிகை! கறுப்பு ரோஜா என்று என்னை அழைத்த அனார்கலி—ஓர் இதமான தோழி! அவருடைய கட்டடத் திலேயே நான் தங்கிக் கொள்ள ஏற்பாடும் செய்து தந்திருக்கும் இந்த அனார்கலி...?— இந்த அனார்கலிதான் யாரென்று தெரியவில்லை!

"என்ன ஹரி... அப்படிப் பார்க்கிறாய்?"— அனார்கலி மிகவும் மெல்லிய குரலில் கேட்டாள்.

"எனக்கு நீங்கள் யாரென்று யோசித்துப் பார்க் கிறேன்..."

"நானா? நான் உனக்கு ஓர் அருமையான சிநேகிதி..."

"அந்தச் சொல் எனக்குப் போதுமானதாக இல்லை... எனக்கு நீங்கள்தான் எல்லாமாகவும் இருக்க வேண்டும்

என்று சொல்ல வேண்டிய அளவுக்கு மிக அகண்ட உறவை உங்களுடன் நான் உணர்கிறேன்...''

''இப்படிப் பேசுகின்ற ஒரே காரணத்துக்காகவே உன்னை நான் பையனாகப் பார்க்க மாட்டேன் ஹரி...''

''எனக்கு இந்த ஒரு அங்கீகாரம் போதும்...''

தங்கிக் கொள்ள ஐம்பது ரூபாயும் உணவுக்கு நூறு ரூபாயும்... ஆக மாதம் நீ நூற்றைம்பது ரூபாய் கொடுக்க வேண்டும் ஹரி. உன்னால் முடியும் இல்லையா?''

''தாராளமாக முடியும்!''

''அதோ, ஜமீலா சமையல் செய்கிறாள் இல்லையா... அந்தப் பகுதியிலேயே இன்னொரு சிறிய அறை இருக்கிறது. அந்த அறைதான் உனக்கு. அதில் தங்கிக்கொள். மற்றவற்றை அப்புறம் பார்ப்போம்...''

நான் அப்போதுதான் கவனித்தேன்— அனார்கலியின் வலது புறங்கையில் இருந்த சிகப்பான— படைபோல் தெரிந்த இடத்தில் ஏதோ களிம்பு போல் பூசப்பட்டிருந்தது.

''அந்தச் சிகப்புப் படையில் ஏதோ மருந்து போட்டிருக்கிறீர்கள் போலிருக்கிறதே?''

''நீதான் அன்றைக்கு அக்கறையுடன் விசாரித்தாயே...''

''எந்த டாக்டரிடம் போனீர்கள்?''

''இதற்கெல்லாம் டாக்டரிடம் போவார்களாக்கும்... இந்த மாதிரியான ஏரியாக்களில்— இப்படிப்பட்ட ஹைதர் அலி காலத்துக் கட்டடங்களில் வாழ்பவர்களுக்கெல்லாம் சிறுசிறு தோல் வியாதிகள் சகஜம் ஹரி. நம்முடைய டாய்லெட் எப்படிக் கிடக்கிறதென்றுதான் உனக்கும் தெரியுமே... உனக்கே பார்— இன்னும் சில மாதங்களில் எக்ஸிமா, ஃபங்கஸ் போன்ற தோல் வியாதிகள் வரத்தான் செய்யும்...''



''என்னுடைய அறைக்குப் போவதற்கு முன்—ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்க விரும்புகிறேன்'' என்றேன்.

''எதைப் பற்றிய கேள்வி?''

''லால்ஜி பற்றி...',

''கேளேன்!''

''அவருக்கும் உங்களுக்கும் என்ன உறவு?''

''நான் அவருடைய ஆசைநாயகி...''

அனார்கலி இதை எந்தத் தயக்கமும் இல்லாமல்தான் தொடர்ந்து சொன்னாள்: ''அதாவது உலகத்துக்கு நான் அவரின் ஆசைநாயகியே தவிர உண்மையில் இல்லை... இப்படிச் சொன்னால் உனக்குப் புரியாது—சில நாட்கள் போகட்டும்— பல உண்மைகளை நான் வெளியிடுகிறேன்'' என்றாள்.

ஏனோ நான் அனார்கலிக்கு மனத்தால் மௌன அஞ்சலி செலுத்தினேன்!

''நீ உன்னுடைய அறைக்குப் போய்க் கொள்ளலாம் ஹரி... அதற்கு முன் உனக்கும் ஒரு செய்தி...''

''சொல்லுங்கள்!''

''நாளை நான் லால்ஜியுடன் லோனா வாலா போகிறேன்...''

''எங்கே இருக்கிறது அது?''

''அதிக தூரமில்லை... ஆனால், மிக மிக அழகான பள்ளத்தாக்கு அது...''

''என்றைக்குத் திரும்பி வருவீர்கள்?''

''நான்கு நாட்களாகும்...''

நன்றியுடன் அனார்கலியை வணங்கிவிட்டு, என்னுடைய அறைக்குள் நுழைந்து தரை வரைக்கும் இருந்த ஜன்னல் வழியாகப் பார்த்தேன். பம்பாய்க்கே உரிய நூற்றுக்கணக்கான புறாக்கள் எங்கும் சிதறிப் பறந்து கொண்டிருந்தன.

# 9

தரை வரைக்கும் அமைக்கப்பட்டிருந்த ஜன்னல் அருகில் நின்றால் என்னுடைய அறை ஒரு சிறை போன்று தெரிந்தது. நானே இங்கே வந்து சிறைப்பட்டு விட்டது போலவும் ஒரு நிமிஷம் தோன்றியது. மிக இயல்பாகவும் ஆர்வத்துடனும் அனார்கலியை நோக்கி நான் வந்திருக்கும் வருகையில் அவள் லால்ஜி என்ற ஒரு மனிதரின் ஆசைநாயகி என்ற செய்தி சிறிய இடையூறாக நின்றது. ஒருவரின் மனைவியாக விளங்குகிற பெண்மணியுடன் நட்புக் கொள்வது சிக்கல் அற்றதாகவும், ஒருத்தரின் ஆசைநாயகியாக வசிக்கிற பெண் ஒருத்தியுடன் நட்புப் பாராட்டுவது சிக்கல் கொண்டதாகவும் தெரிந்தன. ஆனால், அனார்கலி என்ற தனி மனுஷியிடம் எனக்குத் தயக்கம் எதுவும் மனத்துள் தோன்றிடவில்லை. பொய்மைகள் இல்லாத அவளின் தன்மை அழகுகள் என்னுள் பற்பல நீர் வட்டங்களாக வட்டம் போட்டுக் கொண்டிருந்தன. அந்த வட்டங்களை என்னால் விலக்க முடியவில்லை. விலக்குவதற்கு நான் விருப்பப் படவும் இல்லை. சில மணி நேரங்கள் அந்த வட்டங்களுக்குள்ளேயே நான் முடங்கிப் போயிருந்தேன்.

அப்போது ஜமீலா உள்ளே எட்டிப் பார்த்துக் கேட்டாள் ''ஹரி சாப்பிடுகிறாயா?''

''அனார்கலி சாப்பிட்டு விட்டார்களா?''

''இன்னும் இல்லை!''

''அப்போ அவர்களுடனேயே சாப்பிடுகிறேனே!''

''உடனே அப்படி எல்லாம் நிர்ணயம் செய்து கொண்டு விடாதே. அதுவும் இல்லாமல் இப்போது அவள் தலைவலி என்று சொல்லிக் கதவை வேறு பூட்டிக் கொண்டிருக்கிறாள். எப்போது திறப்பாளோ தெரியவில்லை. அதனால் நீ சாப்பிட்டுவிடு!''



''இன்றைக்குத்தான் வந்திருக்கிறேன். ஆகையால் முதல் சாப்பாட்டை அவர்களுடன் உட்கார்ந்து சாப்பிடலாமென்று நினைத்தேன். ஒரு நிமிஷம் இருங்கள். எதற்கும் கதவைத் தட்டி அவர்களையும் ஒரு வார்த்தை கேட்டு விடுகிறேன்!''

''இல்லை ஹரி. அறைக் கதவைத் தாழ் போட்டுக் கொண்டிருந்தால் யாரும் எதற்காகவும் கதவுகளைத் தட்டக் கூடாது!''

''அப்போ நான் மட்டும் சாப்பிட்டு விடவா?''

''நிறைய விஷயங்களில் கொஞ்சம் அவளை அனுசரித்துத்தான் போக வேண்டும்... ஓரளவு கடினமான பெண் அனார்கலி...''

''அவர்களின் உண்மையான பெயரே அனார்கலிதானா ஜமீலா ஜி.''

''அது அவளாக வைத்துக் கொண்ட பெயர். அவளுடைய உண்மைப் பெயரை நீயே ஒருநாள் கேட்டுத் தெரிந்து கொள்...''

''சரி. எனக்குச் சாப்பாடு எடுத்து வையுங்கள். ஒரு நிமிஷத்தில் நான் கை கால் கழுவிவிட்டு வந்து விடுகிறேன்.''

எழுந்து வேகமாக பாத்ரூம் போனேன். அனார்கலியின் அறைக் கதவு சாத்தியிருந்தது. கை கால் கழுவிவிட்டு வந்து சாப்பிட உட்கார்ந்தேன். பரிமாறிக் கொண்டே ஜமீலா கேட்டாள் :

''உனக்குத் தெரியுமா ஹரி... நம் தேசத்தில் யுத்தம் வரப் போகிறதாமே?''

''எனக்குத் தெரியாதே. யார் சொன்னார்கள்?''

''எல்லாரும்தான் சொல்கிறார்கள். பேப்பரில்கூடப் போட்டிருக்கிறதாம்!''

''யுத்தம் யாருடனாம்?''

''சீனாக்காரனோடாம்!''

''அப்படியா... ஆச்சரியமாக இருக்கிறது. சீனாவின்கு என் லாய்தான் நம் நேருஜிக்கு நல்ல நண்பராயிற்றே...''

''எல்லாம் பொய்யாம்... நம் நேருஜியை இனிக்க இனிக்கப் பேசிக் கழுத்தை அறுத்துவிட்டானாம்!''

''யாரையும் நம்பக்கூடாது போலிருக்கிறது!''

''சண்டை பெரிதாக வந்துவிடுவதற்குள் போய் வந்து விடலாம் என்றுதான் லால்ஜி சாகேப் திடீரென்று நாளைக்கே லோனாவாலா புறப்பட்டு விட தீர்மானம் செய்து விட்டார்...''

''யுத்தம் வந்தால் லோனாவாலா போக முடியாதா?'' —நான் புரியாமல் கேட்டேன்.

''யுத்தம் வந்தால் நிறையப் பொருட்களுக்கு பெரிய நெருக்கடி வருமாம்... லால்ஜி சாகேப் பெரிய வியாபாரி ஆயிற்றே... இன்னும் ஏராளமாய்ச் சம்பாதிக்கலாமே... அந்த நேரத்தில் போய் எங்கேயும் போவாரா என்ன...''

''தேசத்துக்கு ஒரு கஷ்டம் வந்தால் சிலருக்கு அதனால் லாபமே வரும் போலிருக்கிறது... அது சரி ஜமீலாஜீ... லால்ஜியும் அனார்கலியும் அடிக்கடி லோனாவாலா போய் விடுவார்களா?''

''இந்த ஆறு வருடத்தில் இதுதான் முதல் தடவை. நேரமே கிடைக்காது அந்த மனுஷருக்கு. வியாபாரத்தில் அத்தனை வேலை உள்ள மனிதர்...''

''எனக்கு அனார்கலியின் ஒரே ஒரு பழக்கம்தான் விசித்திரமாக இருக்கிறது ஜமீலாஜீ!''

''என்ன பழக்கம்?''

''மாமிசம் சாப்பிடுகிற பழக்கம்



''அது அவள் முஸ்லீம் குடும்பத்தில் வளர்ந்ததால் வந்தது!''

''ஏன், முஸ்லீம் குடும்பத்தில் வளரவேண்டி வந்தது?''

''அதையெல்லாம் சமயம் வரும்போது அவளிடமே கேள்... மனதில் எதையும் வைத்துக் கொள்ளாமல் அவளே சொல்வாள்.''

''என்னை இங்கேயே தங்கிக் கொள்ளவும் சாப்பிட்டுக் கொள்ளவும் சொன்னது மிக மிகப் பெரிய விஷயம்... இன்னும்கூட எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது...''

''என்னமோ அவளுக்கு உன்மேல் அத்தனை பிரியம்...''

''ஆனால், ஏனோ என்னை சினிமா உலகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்காதே என்று சொல்லிவிட்டார்கள்.''

''அவ்வளவு குரூர அனுபவங்கள் அவளுக்கு சினிமா உலகத்தில்...''

''ஒரு பெண்ணுக்கு ஏற்பட்ட அனுபவங்களே ஒரு ஆணுக்கும் நேர்ந்து விடாதே...''

''ஒரு மனித ஜீவனுக்கு ஏற்பட்ட கொடுமை இன்னொரு மனித ஜீவனுக்கும் வந்துவிடக் கூடாது என்பது தான் அனார்கலியின் பார்வை.''

ஜமீலாவின் பதில் கன்னத்தில் அறைந்தாற் போலிருந்தது. அந்தக் கிழவியின் மதிக்கூர்மை என் வாயை அடைத்துவிட்டது. கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும் என்பது உண்மைதான் போலும்...!

''நன்றி ஜமீலாஜீ மிக எளிதாக எனக்குப் புரிய வைத்து விட்டீர்கள்...'' என்றேன்.

''இப்படியெல்லாம் பேசுவதற்கு நான் யாரிடம் கற்றுக் கொண்டேனென்று நினைக்கிறாய்...?''- ஜமீலா பெருமை பொங்குகிற குரலில் கேட்டாள். எனக்கும் பெருமையாகவே இருந்தது. சாப்பிட்டுவிட்டுக் கையைக் கழுவினேன்.

''சரி ஜமீலாஜி... எனக்குப் போரடிக்கிறது. கொஞ்ச நேரம் எங்கேயாவது வெளியில் போய்விட்டு வருகிறேன்...''

''ரொம்பவும் தாமதமாகவெல்லாம் வந்துவிடாதே!''

''இல்லை இல்லை. இருட்டும் முன் வந்து விடுவேன்.''

எலிபெண்டா குகைகளை பார்த்துவிட்டு வரலாமென்று கிளம்பினேன். நீராவிப் படகில் கடல் நீரைக கிழித்துக் கொண்டு விரைந்தது மிகவும் ஆனந்தமாகத்தான் இருந்தது. ஆனால், அந்த ஆனந்தத்தை நீண்ட நேரம் அனுபவிக்க முடியாமல் பெரும் மழை வந்து கெடுத்து விட்டது. ஆகையால் நிறைய நேரம் எலிபெண்டா குகைகளில் பொழுதைக் கழிக்க முடியாமல் சீக்கிரமே வீடு திரும்பினேன். படிகளில் ஏறி முதல் தளத்தில் நான் நுழைந்ததுமே லால்ஜி வந்திருப்பதாகத் தோட்டக்காரன் சொன்னான். ஏனோ எனக்குள் ஒருவிதமான தயக்கம் வந்தது. மெதுவாக நடந்து என்னுடைய அறைக்குப் போகும் வழியில் ஓரக் கண்ணால் கவனித்தேன். அனார்கலியின் அறைக் கதவு திறந்திருந்தது. உள்ளே மிகுந்த ஓசையில் ஒரு ஆண் குரல் கேட்டது. என்னுடைய அறைக்குள் போய் நின்றேன். சில நிமிடங்கள் கழித்து ஜமீலா வந்தாள்.

''ஹரி, லால்ஜி உன்னைக் கூப்பிடுகிறார்'' என்றாள்.

''இதோ வருகிறேன்!''

மிக மிக மெதுவாக நடந்து அனார்கலியின் அறைக்குள் நுழைந்தேன். கட்டிலில் கிடந்த அனார்கலியின் மெத்தையில் அந்த லால்ஜி என்ற வியாபாரி சாய்ந்து அமர்ந்திருந்தார். மிகவும் சாதாரணமான மனிதராகத்தான் தோன்றினார். வடநாட்டுக்காரர்களுக்கே உரித்தான குல்லாய் அணிந்திருந்தார். அவருடைய வாய்க்குள் வெற்றிலைக் குழம்பு ஊறி நிறைந்து தெரிந்ததன் ஊடே பற்களெல்லாம் கறுப்பாகக் காட்சியளித்தன.

''நமஸ்தே'' என்றேன் மெல்லிய குரலில்.



''அட, இவ்வளவு சின்னப் பையனா நீ... நான் நினைக்கவே இல்லை'' என்றார் லால்ஜி எடுத்த எடுப்பிலேயே.

''ஆனால் உண்மையில் நான் சின்னப் பையன் கிடையாது சார்!''

''நீ வேண்டுமானால் அப்படிச் சொல்லிக் கொள்ளலாம். அது சரி... நீ மதராஸியாமே... அங்கே எந்த ஊர்?''

''மதுரைக்குப் பக்கத்தில் ஒரு ஊர்...''

''மதுரை, ராமேஸ்வரமெல்லாம் வந்து கோயில்களைப் பார்க்க வேண்டுமென்று நானும் பத்து வருஷமாக நினைத்துக் கொண்டிருக்கிறேன்... உன் தந்தை அங்கே என்ன செய்கிறார்?''

''எங்களுக்கு நிறைய காபி எஸ்டேட் இருக்கிறது!''

''ஹரே ராம்! அவ்வளவு பெரிய இடத்துப் பையனா நீ?'' லால்ஜி கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தார். நான் மௌனமாக நின்றேன். லால்ஜியின் பின்னால் நாற்காலியில் அமர்ந்திருந்த அனார்கலி சுவாரஸ்யத்துடன் என்னையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

''அவ்வளவு பெரிய இடத்துப் பையனான உனக்கு எதற்காக இந்த சினிமா ஆசை?''— லால்ஜி கேட்டார்.

''ஏன், பெரிய இடத்து இளைஞனுக்கு சினிமா ஆசை வரக்கூடாதா?''

''பொதுவாகக் கையில் பணம் இல்லாத வேலையில்லாத பையன்கள்தான் இப்படியெல்லாம் ஓடி வருவார்கள்.''

''அனார்கலிஜி கூட ஒரு காலத்தில் என்னைப் போல லக்னோவை விட்டு ஓடி வந்தவர்கள்தான்...''

''உன்னை ஏன் அனார்கலிக்குப் பிடித்ததென்று தெரிகிறது எனக்கு. நீயும் அவளைப் போலவே வக்கணையாகப் பேசுகிறாய்?''

நான் மௌனமாக இருந்தேன்.

லால்ஜி தொடர்ந்து சொன்னார் :

''ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள் ஹரி. அனார்கலியின் சிபாரிசுக்காகத்தான் உன்னை இங்கே தங்கிக் கொள்ள அனுமதித்திருக்கிறேன். எனவே நல்லபடியாக நடந்துகொள். நான் எதிர்பார்த்தபடி நீ நல்ல பையன் இல்லை என்று எப்போதாவது எனக்குத் தோன்றினால் அந்த நிமிஷமே உன்னை இந்தக் கட்டடத்தை விட்டு வெளியேற்றி விடுவேன்.''

''இப்போது எதற்காக இத்தனை அவசரமான—கடுமையான எச்சரிக்கை?''— அனார்கலி குறுக்கிட்டுக் கேட்டாள். அவளுடைய குரலில் கொஞ்சம் கோபமும் கலந்திருந்தது.

''இப்படிச் சொன்னால்தான் அவனுக்குத் தெரியும்!''

''நீங்கள் சொல்லவே வேண்டாம். அவனுக்கே தெரியும்...'' என்றாள் அனார்கலி விடாமல்.

''தெரிந்தால் நல்லதுதான்...''

''இந்த மழையில் எங்கே போயிருந்தாய் ஹரி?''— அனார்கலி கேட்டாள்.

''எலிபெண்டா கேவ்ஸ் பார்க்கலாம் என்று கிளம்பிப் போனேன். போகிற போதே மழை வந்துவிட்டது.''

''அவ்வளவுதான் ஹரி... நீ போகலாம்'' என்றார் லால்ஜி.

மறுபடியும் ஒரு நமஸ்தே சொல்லிவிட்டு என் அறைக்குள் திரும்பிவிட்டேன்... ஏனோ எனக்குள் ஒரு படபடப்பு ஏற்பட்டிருந்தது. நான் நல்ல பையன் இல்லையென்று தோன்றினால் உடனே இவர் என்னை வெளியில் அனுப்பிவிடுவாராம்... எரிச்சலாக வந்தது எனக்கு. இவர்களுக்கு நான் பையன் இல்லை... பையன் இல்லையென்று எத்தனை தடவைதான் சொல்லித்



தொலைவதோ... நானும் இவர்கள் மாதிரியே காரியங்கள் செய்வதற்கு ஆரம்பித்தால்தான் என்னைப் பையன் என்று சொல்வதையெல்லாம் நிறுத்துவார்கள்!

அப்போது நான் கொஞ்சமும் எதிர்பாராமல் சரேலென என் அறைக்குள் நுழைந்தாள் அனார்கலி.

''என்ன... லால்ஜி போய்விட்டாரா என்ன?'' என்றேன்.

''உஸ்... சப்தமாகப் பேசாதே சற்றுக் கண்களை மூடி ஓய்வாக இருக்கிறார். அவர் ஏதாவது சொன்னார் என்பதற்காக மனசுக்குள் கவலைப்படாதே... பெரிய பணக்காரர் அல்லவா— அந்தத் தோரணையில் சில சமயங்களில் எதையாவது சொல்லிவிடுவார். மற்றபடி மனசுக்குள் உன்னை அவமதிக்க வேண்டும் என்ற எண்ணமெல்லாம் அவரிடம் கிடையவே கிடையாது... அப்படிப்பட்டவராக எல்லாம் இருந்தால் என் பெயரைச் சொல்லக்கூட அவரை அனுமதித்திருக்கமாட்டேன்'' என்றாள் அனார்கலி மிகவும் தணிந்த குரலில்.

''ஆனாலும் எனக்கு ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறது...'' என்றேன் கொஞ்சம் வருத்தம் கலந்த குரலில்...

''எது ஒரு மாதிரியாக இருக்கிறது?''

நான் பேசாமல் அனார்கலியைப் பார்த்தேன்.

''கேட்டால் பதில் சொல் ஹரி...''

''உங்களை லால்ஜியின் ஆசைநாயகி என்று சொன்னீர்களே...''

''ஆமாம். ஆனால் அது என்னுடைய வார்த்தை அல்ல இந்தச் சமூகத்தின் பார்வை அது...''

''அப்படியானால் உண்மையான பார்வையில்...?''

''இதில் வேறு பல உண்மைகள் இருக்கின்றனவென்ற அதற்காகத்தான் அப்போதே சொன்னேன்... உண்மையில் இந்த லால்ஜிக்கு மட்டுமல்ல; எந்த ஆடவனுக்குமே நான்

ஆசைநாயகியாக இருக்கமாட்டேன் ஹரி... இருக்க முடியாது என்னால். நான் அனார்கலி—சுயமரியாதை கொண்டவள்... தெரிகிறதா...?''

நான் மௌனமாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். அனார்கலியும் சில விநாடிகள் மௌனமாக என்னையே கவனித்திருந்துவிட்டுச் சொன்னாள்.

''சிறிது நேரத்தில் லால்ஜி கிளம்பிச் சென்றுவிடுவார்... அதனால் அவசரப்பட்டு நீ சாப்பிட்டுவிடாதே. லால்ஜி போனதும் நீயும் நானும் சேர்ந்து சாப்பிடுவோம்... சாப்பிட்டதும் இன்று இரவே லால்ஜி பற்றிய சில உண்மைகளை நான் வெளியிடுகிறேன்... அதைக் கேட்டுவிட்டுச் சொல்..''

— ஆதரவுடன் என்னைத் தட்டிக் கொடுக்கும் எண்ணத்துடன் என்னுடைய தோள்களை நோக்கி அனார்கலி அவளின் கைகளை உயர்த்தியபோது, ஒரு திருஷ்டி போல அழகான அவளுடைய வலது புறங்கையில் அந்தச் சிகப்பு நிறப்படை பளீரெனத் தெரிந்தது...

## 10

மீர்ஸா காலிப்பின் கஜல் ஒன்றினை இசைத்தட்டில் பேகம் அக்தர் மிகச் சன்னமான ஒலி அமைப்பில் பாடிக் கொண்டிருந்தாள். இரவுக்கே உரித்தான நிசப்தம் எங்கும் சூழ்ந்திருந்தது. அனார்கலி பேசப்போவதைக் கவனிக்க இருக்கின்ற தயார் நிலையில் நான் அவளின் எதிரில் அமர்ந்திருந்தேன். இத்தகைய இரவுப் பின்னணியில் இதற்கு முன் இப்படியோர் அந்நியப் பெண்மணியுடன் நான் தனித்திருந்ததே கிடையாது. இந்தச் சூழல் என் மனத்துள் கிளர்ச்சியை உண்டு பண்ணுகிறதா என்று யோசித்துப் பார்த்தேன். மெலிதாகக்கூட எந்தவிதமான கிளர்ச்சியும்



என்னுள் இல்லையென்றுதான் தோன்றியது. ஏதோ ஒரு கூர்மைதான், அனார்கலி வெளியிடப்போகிற உண்மைகளுக்காக விழிப்புடன் இருந்ததே அன்றி வேறு எந்தக் கவனமும் இல்லை. இன்னோர் உண்மையும் கூடப் புரிந்தது. அது நாள் வரை எனக்குள் அமர்ந்திருந்த ராஜ்கபூர் ஓடி விட்டிருந்தார்! நானே எதிர்பாராமல் வெறும் ஹரிராம் என்ற மனிதனாக நான் அனார்கலியின் எதிரில் அமர்ந்திருந்தேன்.

''லால்ஜிக்கு என்ன வயதிருக்கும் என்று நீ நினைக்கிறாய் ஹரி?'' திடீரென அனார்கலி கேட்டாள்.

''ஐம்பத்தேழு அல்லது ஐம்பத்தெட்டு வயது இருக்கும்?''

''நாற்பத்தெட்டு!''

எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

''நாற்பத்தெட்டுதானா...? பின் இப்படி ஆகிவிட்டார் அதற்குள்?''

''அத்தனை உழைப்பு சின்ன வயதில் இருந்தே... அத்தனை ஓட்டம்— ஓயாமல் பணம் சம்பாதிப்பதற்கு... வியாபார டென்ஷன் வேறு எந்த நேரமும்... லால்ஜிக்கு எப்போதுமே ப்ளட் பிரஷர் இருநூறு இருக்குமென்றால் பார்த்துக் கொள். அவருடைய உடல்நிலை எந்த நிலையில் இருக்கிறதென்று! இந்த நிலை அவருடைய உடம்புக்கு மிகச் சின்ன வயதிலேயே ஏற்பட்டு விட்டது. வேறொன்றும் அவரின் உடல்நிலையிலும் மனநிலையிலும் மிகவும் எதிர்பாராமல் நேர்ந்திருந்தது... அது...''

அனார்கலி சற்று நிறுத்தினாள். நான் பெரிய ஆர்வம் ஏதும் கிளர்ந்து விடாமல் இலகுவாகத்தான் அமர்ந்திருந்தேன்.

''போய் அந்த இசைத்தட்டை நிறுத்தி விட்டு வா...'' என்றாள்.

எழுந்து போய் அதை நிறுத்திவிட்டு வந்தேன். அனார்கலி நெஞ்சின் குறுக்கே இரண்டு கைகளையும் கட்டிக் கொண்டு என்னைத் தீர்க்கமாகப் பார்த்தபடியே சொன்னாள்.

"மிக மோசமான ஆண்மைக் குறைவு அவருடைய உடம்பிலும் மனத்திலும் ஏற்பட்டிருந்தது ஹரி..." —அனார்கலியின் இந்த அறிவிப்பு எனக்குள் எந்த அதிர்வையும் ஏற்படுத்தவில்லை. ரொம்பவும் சாதாரணமாகச் செவிமடுத்தபடியே நான் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"என்னது... மிகப் பெரிய ரகசியத்தைச் சொல்கிறேன், கொஞ்சம்கூட அலட்டிக் கொள்ளாமல் உட்கார்ந்திருக்கிறாயே..." —அனார்கலி கொஞ்சம் எரிச்சலுடன் கேட்டாள்.

நான் ஒன்றும் சொல்லாமல் வெறுமே சிரித்தேன்.

"நான் சொன்னதன் பொருள் உனக்குப் புரியவில்லை போலிருக்கிறது..."

"இதில் புரியாமல் போவதற்கு என்ன இருக்கிறது?" என்று நான் அனார்கலியைத் திருப்பிக் கேட்டாலும் ஆண்மைக் குறைவு என்பதன் மொத்த அர்த்தங்களும் நான் அறிந்தவைதானா என்ற சந்தேகம் எழுந்தது.

"உன் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே— உனக்கு எவ்வளவு தூரம் புரிகிறதென்று..."

—அனார்கலியும் திருப்பி என்னை மடக்கினாள். "நிஜமாகவே நீ சின்னப் பையன்தான் ஹரி..." என்றும் சொன்னாள்.

"எனக்குப் புரிகிறது— சொல்லுங்கள்..."

"என்ன புரிகிறது சொல் பார்க்கலாம்..."

"மன்னிக்க வேண்டும். இம்மாதிரி விஷயங்களையெல்லாம் என்னால் பெண்களிடம் பேச முடியாது. பேசியதும் கிடையாது... அந்தக் கூச்சம்தான்..."



"ஆமாம்... நான் மட்டும் வருகிறவர் போகிறவர்களிடமெல்லாம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறேன்— இதைப் பற்றி!"

"அப்படியில்லை. இம்மாதிரி விஷயங்களை உங்களால் எளிதாகப் பேச முடிவதற்கும் என்னால் எளிதாகப் பேச முடியாததற்கும் வயது வித்தியாசம் ஒரு முக்கிய காரணம்."

நானே எதிர்பாராமல் வயது வித்தியாசம் என்ற சொல் என் வாயிலிருந்து வந்துவிட்டதில் நான் கொஞ்சம் அதிர்ந்துவிட்டேன். சட்டென்று என் பலம் சற்றே வீழ்ந்தாற்போலிருந்தது... என்னுடைய அதிர்ஷ்டம்— அனார்கலி இதைக் கவனிக்கத் தவறிவிட்டிருந்தாள். ஆகையால் நான் உடனே சுதாரித்துக் கொண்டேன்.

"லால்ஜிக்கு எத்தனை குழந்தைகள்?" என்று சும்மா கேட்டு வைத்தேன்.

'பரவாயில்லை— விஷயத்தைப் புரிந்துகொண்டு வருகிறாய்..."

எதுவும் புரியாமலே நான் நெஞ்சை உயர்த்திக் கொண்டேன்...

"ஆனால் ஒன்று ஹரி... லால்ஜி ஆண்மையற்றவர் என்ற செய்தியே உனக்குப் போதுமானது... அதற்கும் அப்பால் அதைச் சார்ந்து வருகிற பல விஷயங்கள் நமக்குத் தேவையில்லை. ஏனெனில் அவை மிக மிக அவலமானவை. சோகமானவை. ஒரு கணவன் தன்னுடைய மனைவியிடமே தன்னை இழந்து பார்க்கிற கொடுமை இருக்கிறது பார்— அதைவிட அபாக்கியம் மனித வாழ்வில் வேறொன்று இருக்க முடியாது!"

"அதெல்லாம் லால்ஜி என்ற தனிமனிதனின் அவலமாக இப்போது எனக்கு நீங்கள் சொல்லாவிட்டாலும் ஒரு மனிதனின் சோகங்களாக என்றைக்காவது சொல்லுங்கள்...

நானும் தெரிந்து சொல்கிறேன் - வாழ்வின் அதல பாதாளங்கள் பற்றி!''

''இப்படியெல்லாம் நீ பேசுவதால்தான் ஹரி உன்னை இங்கே தங்க வைத்தேன்...''

''நிஜமாகவே எனக்கு நீங்கள் செய்திருக்கும் மிகப் பெரிய உதவி இது...''

''ஆனால் உண்மை அது மட்டுமே இல்லை... எனக்கு நானே செய்து கொண்டிருக்கிற உதவியும் இதுதான்...''

''நான் மறுபடியும் என்னுடைய ஒரு விஷயம் பற்றி கேட்டு விடட்டுமா?''

''எந்த விஷயம்?''

''என் சினிமாவுலக ஆர்வம் பற்றி...''

சட்டென அனார்கலி என் கையைத் தொட்டாள்.

''சினிமாவுலகம் மட்டும் வேண்டவே வேண்டாம் ஹரி...'' மிகவும் கெஞ்சலுடன் சொன்னாள்.

''இந்தி சினிமா ஆசை என்னை அலைக்கழிக்கிறது அனார்கலி''— நானும் கெஞ்சலுடன் சொன்னேன்.

''சினிமா ஆசை எனக்குள்ளும்தான் நிறைந்து கிடக்கிறது. ஆனால் சினிமா வேறு, சினிமாவைத் தயாரிக்கிற உலகம் வேறு... ஒரு உண்மையைச் சொல்கிறேன் - கவனமாகக் கேள். சினிமாவில் சினிமா உலகம் கிடையவே கிடையாது. அதே போல சினிமாவுலகத்தில் சினிமாவும் கிடையாது...''

அனார்கலி இதை மிகுந்த கோபத்துடன் சொன்னாள். நான் மௌனமாக இருந்தேன்.

''இன்னொன்றையும் சொல்லிவிடுகிறேன் ஹரி. சினிமாவுலகம் உனக்குக் கண்டிப்பாக வேண்டித்தான் இருக்கும் என்று நீ தீர்மானிக்கும் பட்சத்தில் இந்த வீட்டில் நீ தங்கிக் கொள்ள முடியாமல் போகிற நிலை ஏற்பட்டுவிடும்...''



இதைக் கேட்டு நான் சட்டென்று அனார்கலியின் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். அவளுடைய முகத்தின் வண்ணமே மாறிப் போயிருந்தது.

''என்ன சொல்கிறாய் ஹரி? உனக்கு எது வேண்டும் அல்லது யார் வேண்டும்? எல்லா ஆபாசங்களும் குவிந்த அந்த சினிமாவுலகம் வேண்டுமா... இல்லை, எல்லா வகையிலும் பரிசுத்தமான இந்த அனார்கலியின் அன்பு வேண்டுமா...?''

தாட்சண்யமே இல்லாமல் நின்ற அனார்கலியையே பார்த்தேன். ஏதோ ஒரு நாக கன்னிகை போலத் தெரிந்தாள். என் இந்தித் திரைப்படம் எதிர்பாராத திருப்பம் நேரப் போவதற்கான அதிர்வில் சற்றே உறைந்து சுழற்சியற்று நின்றது. இப்படியானதொரு கட்டத்தில் நடிகர் ராஜ் கபூர் எவ்விதமாக நடிப்பாரென்று என் சினிமா மனம் ஒரு கணம் (விவஸ்தை இல்லாமல்) யோசித்தது.

''என்ன அப்படி பேச்சு மூச்சு இல்லாமல் நிற்கிறாய்?''

''அப்படி நிற்க வைத்துவிட்டீர்களே!''

''உன்னுடைய நன்மைக்காகத்தான் சொல்கிறேன் ஹரி...''

ஒப்புக் கொள்கிறேன் அனார்கலி. ஆனால், அழகான ஒரு இந்திப் படத்தைப் பார்க்கும்போது நான் கிடந்து இம்சைப்படுகிறேன்... இத்தனை இம்சைகளை எனக்குள்ளேயே புதைத்து வைத்துக் கொண்டு என்ன செய்வேன் நான்? உலகத்துக்கு நான் ஒரு ராஜ்கபூராக, ஒரு திலீப் குமாராக, ஒரு சாந்தாராமாகத் தெரிய வேண்டும் அனார்கலி... இப்படி யாருக்குமே தெரியாத ஒரு மதராஸி இளைஞனாக வாழ்ந்து சாக எனக்குப் பயமாக இருக்கிறது. எனக்குச் சிறந்த அங்கீகாரம் வேண்டும். என்னுடைய லட்சியம் நிறைவேற வேண்டும். 'இதோ ஹரிராம் போகிறார்... இதோ ஹரிராம் போகிறார்' என்று மக்கள் எல்லோரும் என்னைப் பார்த்துப் பேசவேண்டும்...!''

—அதற்கு மேல் பேச முடியாமல் என் குரல் உடைந்து விட்டது. கஷ்டப்பட்டு என் உணர்வுப் பெருக்கைக் கட்டுப் படுத்திக் கொண்டு நின்றேன்... அனார்கலி செல்லமாக என் கன்னத்தில் ஒரு சிறு அறை கொடுத்தாள்.

''முட்டாள்! அதற்கேன் இத்தனை உணர்ச்சிவசப் பட்டுக் கத்துகிறாய்?'' என்றாள்.

''ஸாரி... மன்னித்துவிடுங்கள்...''

''மணி என்ன ஹரி?''

''பத்தரை! நாளைக்கு நீங்கள் லோனாவாலா போக வேண்டுமே...''

''அதனாலென்ன... பன்னிரண்டு மணி வரை பேசிக் கொண்டிருப்போம்...''

''இதுவரை நீங்கள் இன்று லால்ஜியைப் பற்றிக் கூறியதில் மிக முக்கியமான ஒன்று மட்டும் இன்னும் எனக்கு முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாததாய் இருக் கிறது... அதாவது— அவர் ஆண்மையற்றவர் என்று கூறி னீர்கள். ஆண்மையற்ற ஒரு ஆடவருக்கு ஆசைநாயகி எதற்காக?''

''மனைவி என்ற பந்தத்திலேயே ஒரு மனித ஜீவன் அவருக்குப் பாலுறவுத் தொடர்புகளுக்குத் தேவையற்றுப் போயிருந்த போது ஆசைநாயகியாக ஒரு ஜீவன் எப்படி அந்த மனிதருக்குத் தேவை இருக்கும்- சொல்... அதுவும் இல்லாமல் என்னிடம் பாலுறவு சுகங்களை எதிர்பார்த்த சினிமாவுலகத்து மனிதர்களிடம் இருந்தே என்னை விடு வித்துக் கொண்ட நான், வேறொரு மனிதனிடம் மட்டும் எப்படி அந்த நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்ட உறவுக்குச் சம்மதிப்பேன்? ஆசைநாயகி என்பவள் படுக்கையைப் பகிர்ந்து கொள்வதற்கு மட்டும் பொருத்திக் கொள்ளப்படுகிறவள் தானே— ஒரு சாதாரணமான மனி தனின் விஷயத்தில்...''



''ஆனால் லால்ஜி சாதாரணமான மனிதர் இல்லை...?''

''மிகப்பல விஷயங்களில் சாதாரணமான மனிதர்தான் அவர். ஆனால் என்னிடம் காட்டிய அன்பில், என்னிடம் அவர் எடுத்துக்கொண்ட உறவில்-லால்ஜி உண்மையில் ஓர் அசாதாரணமான மனிதர். நான் ஒரு காப்பாற்றப்பட வேண்டிய ஜீவன் என என்னை அவர் உண்மையாகவே அங்கீகரித்து வைத்திருந்தது மிகப் பெரிய விஷயம் ஹரி. சமூகத்தின் பார்வையில் இந்தச் சமூகத்தின் அங்கீகாரம் பெறுவதற்கான எந்தத் தகுதிகளும் அற்றவள் தான். என் னுடைய முதல் தகுதியின்மை—நான் உறவு முறையில் ஒரு கணவன் மனைவிக்குப் பிறவாதது! ஹரி...என் பிறப்பு ஒரு முறைகேடின் களங்கம். அந்தக் களங்கம் என் பதினெட்டு வருட லக்னோ வாழ்க்கை வரை அறுத்தெறிய முடியாத தொப்புள் கொடியாக என்னைச் சுற்றிப் பின்னிக்கிடந்தது. பதினெட்டு வயதுக்குப் பிறகு, சினிமாவில் நடிப்பதற்காக வீட்டைவிட்டு பம்பாய் சினிமாவுலகச் சேற்றை நோக்கி ஓடிவந்த பெண் என்ற புதிய களங்கம், புதிய தொப்புள் கொடியாக என்னை இறுக்கிக் கொண்டது.

சேற்றில் மலர்ந்து கிடந்தாலும்கூட தாமரை மலரில் சேற்றுத் துளிகள் ஒட்டாது என்ற உண்மை லால்ஜி என்ற சாதாரண ஒரு வியாபார மனிதரின் அறிவில் தோன்றி விட்டது... நானும் மிக எளிதாகச் சேற்றிலிருந்து காப்பாற்றப்பட்டு விட்டேன். லால்ஜி என்னை நேசித்தார். கருணை காட்டினார். தைரியம் கொடுத்தார். தங்க இடம் ஏற்படுத்தினார். என் செலவுக்குப் பணம் தந்தார்... ஆனால், அவற்றுக்கெல்லாம் ஈடாக என் உடம்பைக் கேட்பாரோ என்ற ஐயம் என் மனத்தில் ஏற்படத்தான் செய்தது.

யாருடனாக இருந்தாலும் சரி—பாலுறவு உண்மை யான நேசத்தின் அடிப்படையில் இயல்பாக நேர்வதாக இருக்க வேண்டும். நட்பின் நோக்கமே அதுவாக இருத்தல்

கூடாது இதை லால்ஜியிடம் நான் தெளிவாக விளக்கிய போதுதான் அவரைப் பற்றிய அந்த அந்தரங்க உண்மையை அவர் வெளியிட்டார். அந்த உண்மை வேறொரு விசித்திரமான உண்மையையும் எனக்கு எடுத்துக் காட்டியது ஹரி...

லால்ஜியின் வியாபார சமூகத்தின் பார்வைக்கு நான் அவருடைய ஆசைநாயகியாகப் புலப்பட்டு விட்டேன்...! உள்ளுக்குள் ஆண்மையற்ற நிலையின் தாழ்வு மனப்பான்மைப் புழுக்கத்தில் குனிந்திருந்த லால்ஜி, எதிர்பாராத இந்த அங்கீகாரத்தில் இனிய அதிர்வுடன் தலை நிமிர்ந்து விட்டார்! எதிர்பாராமல் கிடைத்த இந்த சிறப்புப் பட்டத்தை லால்ஜி தக்க வைத்துக் கொண்டார்... அந்தப் பட்டம் என்னைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வளையமாய்ச் சூழ்ந்து நின்றது. நான் ஒரு தனித்த பெண் என்ற எண்ணத்தில் கயவர்கள் என்னை நெருங்கும் அபாயம் என்னை விட்டு அகன்றது.

பத்திரமான வாழ்க்கையும் கிடைத்தது. நிறைய பணம் சேர்த்துக் கொடுத்தார். இந்தக் கட்டடத்தை என் பெயருக்கு எழுதித் தந்தார். என்னையும் ஒரு பணக்காரியாக மாற்றிவிட்டார். அதே நேரத்தில் சகலவிதமான சுதந்திரங்களையும் எனக்குத் தந்திருக்கிறார்..."

இப்போது நான் குறுக்கிட்டுச் சொன்னேன்; "உண்மை தெரியாததால்தான் சமூகப் பார்வை அவ்விதம் இருக்கிறது. ஆனால், லால்ஜியைப் பற்றிய உண்மை தெரிந்தவர்கள் உங்களை அவரின் ஆசை நாயகியாகப் பார்க்க மாட்டார்கள்... நினைக்கவும் மாட்டார்கள்..."

"இந்த உண்மை எங்களைத் தவிர மூன்றே மூன்று பேருக்குத்தான் தெரியும் ஹரி... இப்போது நான்காவது மனிதனாக உனக்குத் தெரியும்..."

"உண்மை தெரிந்த முதல் நபர்—லால்ஜியின் மனைவி தானே"'



"உண்மை நம் ஜமீலாவுக்குத் தெரியும்..."

"உண்மை தெரிந்த இன்னொரு நபர் பற்றிய விவரம் மட்டும் எனக்கு வேண்டாம் அனார்கலி..."

"சினிமாவுலகம் பற்றி நீ நினைத்துக் கூடப் பார்க்க மாட்டாயே..."

"மிஸ்டர் குருதத்தை மட்டும் ஒருமுறை சந்தித்து அவரிடம் உங்களைப் பற்றிச் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன். அதை வைத்து அருமையான படம் எடுத்து விடுவார்..."

## 11

அன்று இரவு பூராவுமே நான் தூங்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும். ஏதேதோ காட்சிகள் மனத்துக்குள் தொடர்போடும் தொடர்பில்லாமலும் ஓடிக்கொண்டே இருந்தன. மனித வாழ்வு பற்றி ஒருவிதமான மலைப்பு மனம் பூராவும் கவிந்திருந்தது. ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் மறைந்து கிடக்கிற சோகங்களும் துர்ப்பாக்கியங்களும் மனத்தைக் கசக்கச் செய்தன.

பட்டிவீரன்பட்டியில் நான் பிறந்து வளர்ந்த வாழ்க்கையெல்லாம் எத்தனை பாதுகாப்பானது என்பதைக் கொஞ்சம் நன்றியுடனே நினைத்துக் கொண்டேன். வீட்டை விட்டு விலகி ஓடிவிடுவதைக் கடலில் குதிப்பதற்கு ஒப்பானதாகத் தான் சொல்ல வேண்டும். கடலில் கூரிய பாறைகள் மறைந்து கிடக்கின்றன. திமிங்கலங்களும் சுறாமீன்களும் வால் அசைத்துத் திரிகின்றன. புயல்கள் மையம் கொண்டிருப்பதும் சமுத்திரங்களின் உள்ளேதானே... வீடுகளும் சமயங்களில் பழுதுபட்டுப் போகலாம். சூறைக்காற்றில் விழவும் நேரிடலாம்... ஆயினும், கடலில் உள்ள அபாயங்கள் வீடுகளில் கிடையாது.

அனார்கலியின் இந்தப் புராதன வீடு மட்டும் கிடைத்திருக்காவிட்டால் எத்தனை நாளைக்குத்தான் நான் பம்பாயில் தெருவில் தூங்கியிருப்பேன்? எப்படித்தான் நான் பூராவும் வெயிலிலும் மழையிலும் அலைந்து கொண்டிருப்பேன்? நினைத்துப் பார்க்கப் பார்க்கத்தான் என்னுடைய அறியாமை தெரிந்தது. சினிமா ஆசையில் பம்பாய் ஓடி வந்தது போன்ற முட்டாள்தனம் என்னுடைய அதுவரை வாழ்வில் வேறு எதுவுமே இருக்க முடியாது என்பதும் புரிந்தது. நல்லவேளை! பெரும் ஆபத்து நேரிடும்முன் அனார்கலியின் உருவில் கடவுள் வந்து என்னைக் காப்பாற்றி விட்டார்... அனார்கலியின் சந்திப்பும் நட்பும் நான் நினைத்துக்கூடப் பார்த்திராத இனிய விபத்துகள் போன்றவை தான். ஒரு தீவிரமான திரைக்கதைக்கான விநோதமான கனத்த சம்பவங்கள்தான். நிஜமாகவே இயக்குநர் குருதத்திடம் அனார்கலி பற்றியும் அவள் சார்ந்த இந்தச் சொற்ப சம்பவங்களையும் கோர்வையாக ஒரு கோடி காட்டினால் போதும், அருமையான திரைப் படத்தை உருவாக்கி விடுவார். அனார்கலி வேடத்தில் வஹிதா ரஹ்மான். லால்ஜி வேடத்தில் குருதத். ஹரிராம் என்ற மதராஸி இளைஞன் வேடத்தில் அதே ஹரிராம் என்ற மதராஸி இளைஞன்! அந்தத் திரைப்படம் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன். படம் வெற்றி பெறுமோ பெறாதோ... நிச்சயம் 'அவார்ட்' வாங்கும். ஒரு இயக்குநருக்கு அது போதாதா...? இப்பேர்ப்பட்ட திரைக் கதையை அமைக்கக் காரணமாக இருந்த கரு எது? அல்லது நபர் யாரென்று பத்திரிகைக்காரர்களெல்லாம் குருதத்தைப் பேட்டிகளின் போது கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுத் துளைத்தெடுப்பார்கள். 'இதோ இந்த மதராஸி இளைஞன் தான் என் திரைக்கதையின் காரணகர்த்தா! அதுமட்டுமில்லை— இந்தத் திரைக்கதை இந்த மதராஸி இளைஞனின் வாழ்க்கையில் நடந்த உண்மை நிகழ்ச்சி!' என்றெல்லாம் குருதத்தும் பேட்டிகளில் தயங்காமல் உண்மையைச் சொல்வார். அது போதாதா பத்திரிக்கைக்காரர்களுக்கு...? போட்டி போட்டுக் கொண்டு என்னுடைய பேட்டி கேட்டும் ஓடோடி வந்து வரிசையில் நிற்பார்கள்! உண்மைக் கதைகளின் மீது பத்திரிக்கைக்காரர்களுக்கு இருக்கும் மோகம் தான் தெரிந்த சமாசாரம் ஆயிற்றே...!



அதென்னமோ, எதைப் பற்றி யோசித்தாலும், சிந்தனை சினிமாவையே சூழ்ந்து கொள்கிறது. காலையில் லோனாவாலா கிளம்பியபோது அனார்கலியும் அதையே சுட்டிக் காட்டினாள்.

"எதற்கெடுத்தாலும் நடிகர்களையும் நடிகைகளையுமே நினைத்துக் கொண்டிராதே ஹரி... பத்திரமாக இரு. என்னை லால்ஜி எப்படிக் காப்பாற்றினாரோ அதேபோல நான் உன்னைக் காப்பாற்றப் பார்க்கிறேன். புரிகிறதா? 'நான் ஊரில் இல்லை என்றதும் ஆர். கே. ஸ்டுடியோ பக்கம் போனேன். சாதனா வீட்டுப் பக்கம் போனேன்' என்றெல்லாம் சுற்றிக் கொண்டிராதே... மழை பெய்யாமல் இருந்தால் கேட் வே ஆஃப் இண்டியா போய் உட்கார்ந்திரு. 'பாத் ஏக் ராட் கி' படம் பார்க்காமல் இருந்தால் போய்ப் பார் ராக்ஸி தியேட்டரில் ஓடுகிறது..."

"தேவ் ஆனந்த் நடித்த படம்தானே?"

"உனக்கு இந்தி வாசிக்கவும் தெரியும் தானே?"

"வேகமாய் வாசிக்க வராது."

"இந்தியில் மொழி பெயர்க்கப்பட்ட காண்டேகரின் மராட்டி நாவல்கள் என் அலமாரியில் இருக்கின்றன, எடுத்துப் படித்துப் பார்..."

"ஐயோ! எனக்கு நாவல்கள் வாசிப்பது என்றாலே அலர்ஜி அனார்கலி."

"பரவாயில்லை, காண்டேகரின் நாவல்களை மட்டுமாவது வாசி... குறிப்பாக, 'கிரௌஞ்ச வதம்'. 'புயலும் படகும்', 'இரு துருவங்கள்'..."

"முயற்சி செய்து பார்க்கிறேன். ஆனால், நான் படிக்காவிட்டால் அதற்காகத் திட்டாதீர்கள்..."

"அப்புறம் மிர்ஸா காலிப்பின் கவிதைகள் இருக்கின்றன. அவற்றையும் எடுத்துப் படி..."

"கண்டிப்பாக அவற்றைப் படிக்கிறேன்..."

"பத்திரமாக இரு. நான்கு நாட்கள் கழித்துப் பார்ப்போம்."

காரில் ஏறி அமர்ந்து கொள்ளும் முன் 'பத்திரமாக இரு' என்று நூறு தடவை சொல்லிவிட்டாள். அதீத அன்புகூட மனிதனைப் போட்டுக் கொஞ்சம் மூச்சுத் திணற வைத்துவிடும் போலும். அனார்கலி ஏறிக் கொண்ட கார் கிளம்பிப் போனதும் சற்று அப்பாடா என்றுதான் இருந்தது. ஆனால் இந்த ஆசுவாசம் மிகச் சில நிமிடங்களுக்குத் தான். அடுத்த நிமிடங்களிலேயே அனார்கலி இல்லாத சூழல் அகலமாகத் தெரிந்து விட்டது. அதுவும் ஜமீலாவுக்கு அனார்கலி இல்லாமல் இருக்கவே முடியவில்லை. பேசிப் பேசி என்னை அறுத்து எடுத்துவிட்டாள். அவளிடம் இருந்து தப்பித்தால் போதுமென்று வெளியில் ஓடியே விட்டேன்.

வெளியில் ஓடினாலும் நான் எங்கே போவேன்? நேராக கேட் வே ஆஃப் இண்டியாதான் போனேன். பின் ஃப்ளோரா ஃபௌண்டன் பக்கம் கொஞ்சம் சுற்றினேன்... ஜஹாங்கீர் ஆர்ட் காலரிக்குள் சென்று சில நிமிடங்கள் வேடிக்கை பார்த்தேன். க்ராஃபோர்ட் மார்க்கெட்டில் நுழைந்து விதை இல்லாத மாதுளம் பழங்கள் வாங்கி இஷ்டத்துக்குத் தின்றேன். அலங்கார் தியேட்டர் பக்கம் ஒரு நடை கொடுத்தேன். ஷம்மிகபூர் நடிக்கும் 'புரபஸர்' திரைப்படம் வரப்போகிறது என்ற சுவரொட்டிகள் ஒட்டியிருந்தார்கள். ஆர். கே. ஸ்டுடியோ பக்கம் போய்ப் பார்க்கலாம் என்று சும்மாதான் நினைத்துப் பார்த்தேன். நினைத்துப் பார்த்த நிமிஷமே அனார்கலி ஞாபகத்தில் வந்தாள். ஆகை



யால், பேசாமல் விக்டோரியா டெர்மினஸ் மாடிக்கு விரைந்தேன். பாவம், நெல்லை முருகேசன் என் வரவை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்திருக்கிறார்...

"வா, தம்பி... வா தம்பி" என்று உற்சாகத்துடன் வரவேற்றார். "என்ன சாப்பிடறே?" என்றார்.

"இன்னிக்கு எதுவும் சாப்பிடறதா இல்லைங்க அண்ணாச்சி" என்றேன்.

"அட, ரெண்டு ஆம்லெட்டாவது சாப்பிடு தம்பி! அப்பத்தானே உன் உடம்பு தேறும்... அப்பத்தானே நீயும் நாளைக்கு ஓடியாடி நடிகனா நல்லா நடிக்கவும் முடியும்... அப்பத்தானே நானும் உன் பேரைச் சொல்லி முன்னேற முடியும்..."

"நெஜமாவே எனக்குச் சாப்பிடறதுக்கு எதுவுமே வேண்டாம் அண்ணாச்சி. சும்மா உங்களைப் பார்த்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன்..."

"தம்பியோட விஷயமெல்லாம் எவ்வளவு தூரத்துல இருக்கு?"

"விஷயமெல்லாம் வேற மாதிரி போயிட்டிருக்குங்க அண்ணாச்சி..."

"எப்படியோ எல்லாம் நல்லபடியா முடிஞ்சா அது போதும் தம்பி."

அத்துடன் உரையாடலைக் கத்தரித்துவிட்டுக் கிளம்பி விட்டேன். அனார்கலி பற்றியெல்லாம் முருகேசன் போன்ற ஆசாமிகளிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லிவிடக் கூடாது. ஒரு வார்த்தை சொன்னாலே போதும்... அவர்களில் இஷ்டத்துக்குக் கதை கட்டி விடுவார்கள்.

இரவு வெகு சீக்கிரமே வீடு திரும்பி சாப்பாட்டை முடித்துக் கொண்டேன். ஜமீலாவின் அறுவைக்குப் பயந்து அனார்கலியின் அறையிலிருந்த அவளின் புத்தக அலமாரியைத் திறந்து வைத்துக்கொண்டு அடுக்கி வைக்கப்பட்

டிருந்த இந்தி மற்றும் உருதுப் புத்தகங்களை நோட்டமிட்டேன். காண்டேகர் என்பவரின் நாவல்களைப் பற்றித்தானே புகழ்ந்து பேசினாள். தேடி ஒரு நாவலை எடுத்தேன். உட்கார்ந்து படிக்க நாற்காலியைத் தேடியபோது தான் அனார்கலியின் அந்த அகன்ற கட்டில் என் கண்களில பட்டது. அனார்கலி இல்லாமல் அவளின் கட்டிலை மட்டும் நான் வெறுமையாகக் கண்டதே இல்லை. ஆகையால் விரித்து கிடந்த அந்தக் கட்டிலின் படுக்கையைச் சில விநாடிகள் கண்கொட்டாமல் பார்த்தேன் ஒரு பெண் உபயோகிக்கிற கட்டிலுக்கும் படுக்கைக்கும்கூட பெண்மையின் வசீகரம் வந்துவிடும் போலும்...! எனக்கு அனார்கலியிடம் இருக்கிற நட்போடும் வாஞ்சையோடும் அந்தப் படுக்கையை லேசாகத் தொட்டுப் பார்த்தேன். ஆனால், அதற்காகத் திரும்பத் திரும்பத் தொட்டுப் பார்க்கிற கிலேசமும் வந்துவிடவில்லை... ஏனெனில் அனார்கலி மேல் எனக்குள் இருந்த நட்பு ஓர் ஆழமான பயபக்திதானே அன்றி வேறெதுவும் இல்லை.

என்னுடைய இந்த பயபக்திக்கு அளிக்கப்பட்ட பரிசாகப் போற்றிக் கொள்ளத்தக்கதாய் ஒரு கடிதம். அனார்கலி லோனாவாலா புறப்பட்டுப் போன மூன்றாம் நாள் என் பெயருக்குத் தபாலில் வந்தது.

எனக்கு லெட்டர் வந்திருப்பதாகச் சொல்லி ரஹ்மான் ஒரு கவரைக் கொண்டு வந்து தந்தபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எனக்கு யார் இந்த முகவரிக்குக் கடிதம் எழுதியிருப்பார்கள்? நெல்லை முருகேசனுக்குக் கூட இந்த முகவரியை நான் தெரிவிக்கவில்லையே... ஏனோ அனார்கலி தான் எழுதியிருப்பாள் என்பதை என் மனம் நினைக்கவே இல்லை. லேசாகக் கைவிரல்கள் நடுங்க கவரைப் பிரித்தேன்.

மல்லிகை மொட்டுக்களைத் தொடுத்தாற்போல இந்தியில் எழுதப்பட்டிருந்த கடிதம் 'நண்பன் கறுப்பு ரோஜாவுக்கு...' என்று ஆரம்பமாகியிருந்ததைப் பார்த்ததுமே தெரிந்துவிட்டது யார் எழுதிய கடிதம் என்று!



ஐந்தே ஐந்து வரிகளை மட்டுமே கொண்டிருந்த அந்தக் கடிதத்தை எத்தனை முறை வாசித்தேன் என்பது நிஜமாகவே எனக்குத் தெரியாது. உணர்வு வயப்படும்படியாகவோ பிரமிக்கும் விதமாகவோ எந்த விஷயமும் கிடையாது. அந்தக் கடிதத்தில் ஆனாலும் நான் உணர்வு வயப்பட்டேன். அதற்குக் காரணம் அனார்கலிதான் என்று முழுமையாகச் சொல்லிவிட முடியாது. முதல் காரணம்—அந்தக் கடிதம்தான் ஒரு பெண்ணிடமிருந்து எனக்கு என் வாழ்க்கையிலேயே முதல் முதலாக வந்திருக்கும் கடிதம்.. பெண்ணொருத்தியிடம் இருந்து வருகிற கடிதம் எத்தகைய பரவசத்தைத் தரும் என்பதை உணர்த்திய கடிதம்...

என்னுடைய வாழ்க்கை மிகவும் தீவிரம் அடைந்திருந்தது. மிகக் கூர்மையான கவனம் என் பிரக்ஞை முழுவதும் சிலிர்த்திருந்தது. ஒரு திரைக்கதைக்கெல்லாம் அப்பாற்பட்ட வீச்சில் என் வாழ்க்கைக் கதை கரைபுரண்டோடத் துவங்கியிருந்தது சினிமாவைவிட வாழ்க்கை எத்தனை அழகாய் உயிர்மையின் பொலிவைப் பொதிந்து கொண்டிருக்கிறது என்பதையும்கூட என்னால் காண முடிந்தது. ஆயிரம் ராஜ்கபூர்கள் வந்தாலும்கூட இந்த மதராஸி இளைஞனின் இந்த நிமிட வாழ்க்கை நிலையைச் சித்திரித்துக் காட்ட முடியவே முடியாது என்றும் தோன்றியது.

"ஹரி பையா... உனக்கு யார் லெட்டர் போட்டிருக்கிறார்கள்..." —ஜமீலா கேட்டாள்.

"எனக்கு யார் லெட்டர் போடுவார்கள்— எல்லாம் நம் அனார்கலிதான்."

"பொய்யெல்லாம் சொல்லாதே..."

"இதில் போய் ஒருவன் பொய் சொல்வானா? சந்தேகமாக இருந்தால் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்..."

கடிதத்தை எடுத்து நீட்டினேன். ஜமீலாவும் ஆச்சரியப் பட்டுப் போனாள்.

''என்னால் நம்பவே முடியவில்லை. எனக்குத் தெரிந்து அவள் ஆயுளில் யாருக்குமே லெட்டர் எழுதியது கிடையாது. பாவம், ஒரு நல்ல நண்பனுக்காக அவளும் ஏங்கிக் கிடந்திருப்பாள் போலிருக்கிறது...''

''ஜமீலாஜி! அன்றைக்கு நீங்கள் சொன்னீர்களே— அனார்கலி கொஞ்சம் கடினமான பெண்ணென்று... நானும் இத்தனை நாள் பழகிவிட்டேன்— அப்படித் தெரியவே இல்லையே...?''

''இப்போதும் சொல்கிறேன்— அனார்கலி கடினமான பெண்தான்!''

''ஒருவேளை கடினமான மனிதர்களின் முன்னிலையில் அப்படி ஆகிவிடுவாளோ என்னவோ...''

''ஆனாலும் நீ ஜாக்கிரதையாகவே இரு ஹரி. நண்பனாக நினைக்கிறாள்... கறுப்பு ரோஜாவென்று அழைக்கிறாள் என்பதையெல்லாம் பார்த்து அவளை எளிதாக நினைத்துவிடாதே. இப்படி சந்தோஷமாக இருக்கின்ற நிமிடங்களில் தான் இந்தப் பகிர்வுகளெல்லாம் அவளிடம். துக்கமோ அதிர்ச்சியோ வருகிற சமயங்களில் உன்னால் நினைத்தே பார்க்க முடியாத அளவுக்குக் கடினமாகி விடுவாள். பிறந்ததில் இருந்தே அதிகமான கஷ்டங்களை அனுபவித்திருப்பவள் அவள். லால்ஜியின் அறிமுகம் கிடைத்திருக்கும் இந்தச் சில வருடங்களாகத் தான் சந்தோஷமாக இருக்கிறாள். ஆகையால், இந்தச் சந்தர்ப்பத்தில் சின்னஞ் சிறு பிரச்னை ஏற்பட்டால்கூட அனார்கலி அதிகமாய் எதிர்விளைவு காட்டுவாள். தன்னை அப்படியே சுருக்கிக் கொள்வாள்...''

''நாளைக் காலை லோனாவாலாவில் இருந்து புறப்படுகிறார்கள் போலிருக்கிறது...''



''மதிய உணவுக்கு முன் வந்து விடுவாள். அவள் வரும் போது நீ எங்கேயும் போய்விடாதே!''

''நான் ஏன் போகிறேன்...''

காலை பத்து மணியிலிருந்தே கீழ்வாசலில் நான் காத்துக் கொண்டிருந்தேன். மதிய உணவு வேளையும் வந்து விட்டது. அனார்கலி வரவில்லை. சாப்பிடாமலேயே அவளை எதிர்பார்த்து நின்றிருந்தேன்... பிற்பகல் மூன்று மணியளவில்— அனார்கலி வந்து கொண்டிருந்த கார் விபத்துக்குள்ளாகிவிட்ட செய்திதான் வந்தது.

## 12

லோனாவாலாவை விட்டுப் புறப்பட்ட ஏழெட்டு மைல் தூரத்திலேயே அந்த விபத்து நேர்ந்துவிட்டது. அந்த விபத்து நிகழ்வதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்புதான் லால்ஜி, டிரைவரை நகர்ந்துகொள்ளச் சொல்லிவிட்டு காரை தானே ஓட்டத் தொடங்கியிருக்கிறார். லோனாவாலாவின் பள்ளத்தாக்குகளில் வெளிப்புறப் படப்பிடிப்பு ஒன்றுக்கான ஜெனரேட்டர்களையும் இன்னும் பல அரங்கப் பொருட்களையும் நிரப்பிக் கொண்டிருந்த லாரி கட்டுமீறி ஓடத் துவங்கி எதிரில் வந்த லால்ஜியின் காரில் நேருக்கு நேர் மோதிவிட்டதில் லால்ஜி மட்டும் அந்த இடத்திலேயே இறந்து போனார். முன் ஸீட்டில் அமர்ந்திருந்த டிரைவருக்கும் நிறையக் காயங்கள். அனார்கலிக்கு மிகவும் சொற்பமான காயங்கள்தான் என்றாலும் அவளின் மனநிலை லால்ஜியின் மரணத்தால் பலத்த அதிர்ச்சிக்குள்ளாகி இருந்தது. போலீஸ் விசாரணையில் போது அவள் வாக்குமூலம் தந்ததைத் தவிர வேறு யாரோடும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

நான்தான் மார்பு படபடவென்று அடித்துக்கொள்ள ஆஸ்பத்திரியில் அவள் படுத்திருந்த அறைக்குள் ஓடினேன்.

அவன் பிரமை பிடித்தாற்போல் படுத்திருந்த கோலத்தைப் பார்த்து நான்தான் மனசுக்குள் பொருமினேன். என்னைப் பார்த்த பிரதிபலிப்பு அனார்கலியின் கண்களில் துளிக்கூடத் தெரியவில்லை. அவளின் விழிகள் என்னைப் பார்ப்பதாகத் தெரிந்தாலும் உண்மையில் அவை எங்கோ ஒரு சூனியத்தில் பொருந்தியிருந்தன. என்னை அவள் கண்டுகொள்ளவே இல்லை. எனக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. எவ்வளவு நேரம்தான் கையைப் பிசைந்து கொண்டு நிற்பது? சிறிது நேரம் வெளியில் போய் நின்றேன். மறுபடியும் உள்ளே போய் அவளையே பார்த்தேன். அவளில் எந்தச் சலனமும் இல்லை. சில சினிமாக்களில் இப்படியொரு விபத்தில் சிக்கிக் கொள்ளும் கதாநாயகிக்கு நடந்ததெல்லாம் மறந்து போய்விடுவதாகக் காட்டியிருக்கிறார்களே— அந்த ஞாபகம் வந்து எனக்குப் பயமாகிவிட்டது.

லால்ஜி இறந்துவிட்ட அதிர்ச்சியில் அனார்கலிக்கும் அப்படி ஏதேனும் ஆகிவிட்டதோ என்ற கவலை வந்தது. அப்படியே ஆகிவிட்டால் என்ன செய்வது என்று யோசித்துப் பார்த்தேன். தீர்மானமாக என்னால் எதையும் யோசிக்க முடியவில்லை... இம்மாதிரியான நிலைமைகள் எனக்கு மிகவும் புதிதாக இருந்தன. அனார்கலியின் இந்த நிலையை எப்படிக் கையாள்வது என்றெல்லாம் என்னால் திட்டவட்டமாகத் தீர்மானிக்கவும் முடியவில்லை... அதற்கான அனுபவங்களும் இல்லை. அத்தகைய அனுபவங்களைப் பெற்றிருப்பதுமான வயதும் எனக்கு வந்துவிடவில்லை...! உண்மையாகவே அந்த நிமிஷம் என்னுடைய வயதுப் பற்றாக்குறையை என்னுடைய அறிவு சற்றுக் கவனிக்கத்தான் செய்தது! ஆயினும் மனம் அந்த கவனிப்பை ஒப்புக்கொள்ள வெட்கம் கொண்டு அலட்சியப் படுத்தி விட்டது!

ஐந்தாம் நாள் அனார்கலியை ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள்... லால்ஜியின் குடும்பத்தைச்



சேர்ந்தவர்கள்தான் அனார்கலியை கார் ஒன்றின் மூலம் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள். எல்லா உதவிகளையும் அவர்கள்தான் பார்த்துப் பார்த்துச் செய்தார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு அலைந்தார்கள். சிதைந்துவிட்ட லால்ஜியின் 'பாடி'யைப் பெற்றுக் கொள்ளக் காத்துக் கிடந்தார்கள்... பலருக்கும் செய்தி அனுப்பினார்கள். அனார்கலிக்கு மாற்றி மாற்றி ஆறுதல் சொன்னார்கள். ஜமீலா உழைக்கும் வேலை சரியாக இருந்தது. எனக்குத் தான் எந்த வேலையும் இல்லை.

இந்த நிலை ஆஸ்பத்திரியில்தான் என்றில்லை. வீடு வந்து சேர்ந்த பிறகும் இதே நிலைதான். உண்மையைச் சொல்லப் போனால் வீட்டில் நிலைமை இன்னும் மோசம். வீடு திரும்பியதும் அனார்கலி அவளுடைய அறைக்குள் போய் அமர்ந்தவள் அமர்ந்தவள்தான்... யாரோடும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. எனக்கும் அவளுக்கு எதிரில் போய் நின்று நின்று அலுத்துப் போய் விட்டது. லால்ஜி திடீரென்று இறந்து போனது அவளுக்கு மிகப் பெரிய துக்கம்தான். தாங்கிக் கொள்ள முடியாத அதிர்ச்சிதான்... அதற்காக எத்தனை நாள்தான் இப்படியே ஒருத்தி பித்துப் பிடித்தாற் போலவே உட்கார்ந்திருப்பாள்... எழுந்து ஆக வேண்டியதைப் பார்க்க வேண்டாமா? லால்ஜி என்ன இனி மேல் திரும்பியா வரப் போகிறார்? துக்கத்தை உதறிவிட வேண்டியதுதான். அதிர்ச்சியில் இருந்து மீண்டு வந்துவிட வேண்டியதுதான். எவர் செத்தாலும் உலகம் ஸ்தம்பித்து நின்று போகாது... அது பாட்டுக்குச் சுழன்று கொண்டுதான் இருக்கும்.

எதிரில் தன்னுடைய நண்பன் ஹரி நிற்கிறான் என்ற கடுகளவு பிரக்ஞையாவது அவளுடைய கண்களில் தெரிந்தால் இதையெல்லாம் அனார்கலியிடம் எடுத்து விளங்கும்படி சொல்லலாம்... அவளோ கடந்த காலத்தையே முற்றிலுமாக இழந்துவிட்ட திரைக் கதாநாயகி போல் அல்லவா உட்கார்ந்திருக்கிறாள்! அப்பேர்ப்பட்டவளிடம் போய்

எதைச் சொல்வது? நல்லவேளை! ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்தபோது 'நான் எங்கிருக்கிறேன்?' என்று கேட்டு சினிமா கதாநாயகி போல ஒரு மாதிரி பேந்தப் பேந்த விழிக்காமல் இருந்தாளே... அதுவே பெரிய விஷயம்.

ஆனாலும் அனார்கலியின் மன இறுக்கம் என்னை மூன்று வாரங்களுக்கும் மேலாகவே அநியாயமாகச் சோதித்து விட்டது. இதெல்லாம் எனக்கு சரிப்பட்டு வராதென்று சொல்லிவிட்டு எங்கேயாவது தெருமுனைக்கு ஓடிப் போய் கோலி ஆடலாம் போல இருந்தது. ஆர். கே. ஸ்டூடியோ பக்கம் ஒரு நடை போய்விட்டு வரலாம் போலக் கூட இருந்தது. பின் என்ன? எத்தனை நாளைக்குத்தான் ஒரு மனுஷன் பிடித்து வைத்த கொழுக்கட்டை போல் உட்கார்ந்திருக்கும் ஒருத்தியின் இறுக்கமான முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பான்? அவனுக்கு மட்டுமென்ன உணர்ச்சிகளே இல்லையா? சொல்லப்போனால் அவனுக்குத் தான் உணர்ச்சிகள் அதிகம்!

ஆனாலும் என்ன செய்வது? அவனுடைய உணர்ச்சிகள் அனார்கலியைத் தொடவே இல்லை. அவள் பாட்டுக்கு அவளுடைய மௌன இறுக்கத்தின் வெற்றிநடை போடுகிற நான்காம் வாரத்தில் பிரவேசித்து விட்டாள்! நானும் என் பாட்டுக்கு போரடிக்கிற சினிமாவைப் பார்த்தாக வேண்டிய கட்டாயம் போல அனார்கலியின் தனிமையையும் இறுக்கத்தையும் வேறு வழி தெரியாமலேயே பார்த்துக் கிடந்தேன். எனக்குள் என்னுடைய திரைக்கதை திசை தெரியாமல் நின்று கொண்டிருந்தது. கதாநாயகியை மாற்றினால்தான் சரியாக இருக்கும் என்றுகூடத் தோன்றிவிட்டது. அப்படியென்றால் பார்த்துக் கொள்ளுங்கள்...!

சரி, இதையெல்லாம் யாரிடமாவது சொல்லி அழலாம் என்று பார்த்தால் அதற்கும் மனிதர்கள் இல்லை. நெல்லை முருகேசனிடம் போய் உட்கார்ந்து ஒருபாட்டம் அழலாம் நம்ம ஊர் மனுஷர்! வாழ்க்கையில் அடிபட்டவர் வேறு!



ஆனால் அவரிடம் போயும் மனம் திறந்து ஒப்பாரி வைத்துவிட முடியாது. அவருக்கு என்மேல் இருக்கிற 'இமேஜ்' உடைந்துவிடும்! நெல்லை முருகேசனுக்கு நான் ஒரு வருங்கால பெரிய இந்தித் திரைப்படத் தயாரிப்பாளர் ஆயிற்றே! அவரிடமா நான் போய் அழ முடியும்? அதனால் அவரிடமும் போய் என்னால் அழ முடியவில்லை. பேசாமல் வீட்டுக்குள்ளேயே அழுது வடிந்து கொண்டிருந்தேன்...

ஒரு நாள் இரவு வெளியில் மழை விளாசித் தள்ளிக் கொண்டிருந்தது... ஜன்னல் கம்பிகளைப் பிடித்தவாறு பம்பாயின் அசுர மழையை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். கதவருகில் ஏதோ நிழல் தெரிந்து திரும்பிப் பார்த்தேன். அனார்கலி...! பம்பாய் வானத்தில் மேகங்கள் முட்டி மோதி அதிர்ந்தன. கிளை கிளையாக மின்னல்கள் தெறித்தன. திகைப்புடன் நான் அவளையே பார்த்தேன். அனார்கலியும் என்னையே பார்த்தாள் என்று சொல்ல முடியாது. அந்த இருளில் ஒரு சிவலிங்கம் போல் தெரிந்தாள். இருவரும் எதிரெதிராக நின்றோம். வசனமே இல்லாத கணங்களாகக் காட்சி நீண்டு கொண்டிருந்தது. அனார்கலியின் உயரமும் வலிமையும் கோயிலின் ஸ்திரமான கொடிக் கம்பமாகத் தெரிந்தன. பல நிமிடங்கள் மௌனமாக நின்றபின் சொன்னாள்.

"என் அறைக்கு வா ஹரி..."

சொல்லிவிட்டு மெதுவாக நடந்தவளை நிழல் போன்றே தொடர்ந்தேன். அனார்கலியின் அறை அநேகமாக இருளில் மூழ்கிப் போயிருந்தது. அவள் அவளுடைய கட்டிலில் சாய்ந்து கொண்டது நிழலாகத் தெரிந்தது. போடப்படாத கொசு வலை மேகப் பொதி போல் சற்று மேலே விரிந்து தொய்ந்திருந்தது... அந்தக் காட்சி இருளில் தெரிகிற பாய்மரக் கப்பலை நினைப்பூட்டியது. மௌனமாக நின்றேன். அனார்கலி மௌனமாகச் சாய்ந்திருந்தாள். மௌனக் கப்பல் மெதுவாகக் குலுங்கிக் குலுங்கிச் சென்று

கொண்டிருந்தது... கப்பலுக்கு வெளியில் மழை கொட்டிக் கொண்டுதான் இருந்தது.

''அநேகமாக இது பம்பாய்ப் பருவ மழையின் முடிவுக் கால ஆரம்பம் ஹரி...'' — அனார்கலி மிகவும் மெலிந்த குரலில் சொன்னாள். எனக்கும் அனார்கலிக்கும் இடையே இருக்கிற உறவு முடிந்து போவதற்கான ஆரம்பமும் துவங்கிவிட்டாற்போலவே— நானே எதிர்பாராமல் எனக்குள் ஓர் அபசகுன எண்ணம் ஓடி மறைந்தது!

''என்ன சினிமால்லாம் பார்த்தாய்?'' என்றாள்.

இந்தக் கேள்வி எனக்கு அசந்தர்ப்பமாக இருந்தது. 'எந்த மாதிரி நேரத்தில் என்ன மாதிரி கேள்வி கேட்கிறாள்...? ஒருவேளை என்ன பேசுவதென்று தெரியாமல் இந்தக் கேள்வியைக் கேட்கிறாளோ...?'

''என்னை மன்னித்து விடு ஹரி. இம்மாதிரியான வேளைகளில் என்னால் யாரையும் நெருங்க முடியாது. அணுகவும் முடியாது. தொந்தரவே இல்லாத தனிமைதான் தேவைப்படும்...''

''அதற்காக இப்படியா நத்தை போல் சுருக்கிக் கொள்வீர்கள்?''

''உடனே என்னை விமரிசனம் செய்துவிடாதே. இவ்விதம் நான் நடந்து கொள்வதற்கு நீண்ட கடந்த காலப் பின்னணி இருக்கிறது...''

''நெருங்கிய நண்பனிடம் கூடவா பகிர்ந்து கொள்ளக் கூடாது?''

''கடந்த காலச் சின்னஞ்சிறு வயதில் நான் பட்ட அவமதிப்புகளையும் இன்னல்களையும் பகிர்ந்து கொள்ள யார் கிடைத்தார்கள்?''



''அதற்காக இத்தனை வருஷம் கழித்துப் பழிதீர்த்துக் கொள்ள வேண்டுமா... அதுவும் உங்களையே...?''

''பழிவாங்கல் இல்லை ஹரி. என் கடந்த காலத்தின் எதிரொலி இதெல்லாம்...''

''எனக்கு ஆர்.கே. ஸ்டுடியோ பக்கம் ஓடிவிடலாம் போலிருந்தது...''

'' 'கறுப்பு ரோஜா' என்று கூப்பிட்டால் திரும்ப வந்து விடலாம் போலிருக்கும்! அப்படித்தானே?''

இருளில் அனார்கலியின் முகம் தெளிவாகத் தெரியவில்லை. அதனால் அவளின் முகபாவனையை அறிந்து கொள்ள முடியவில்லை.

''உண்மையில் உங்களுடைய கடிதத்தைக் கனவிலும் நான் எதிர்பார்க்கவில்லை...என்னை என்னவோ பண்ணி விட்டது...''

''ஆனால் லால்ஜியின் மரணம் மட்டும் உன்னை எதுவும் பண்ணாது...''

''அப்படியில்லை... அந்தச் சூழ்நிலையில் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மிகவும் புதிரான அனுபவம் எனக்கு...''

''எவ்வளவு கோரமான விபத்து தெரியுமா ஹரி அது... நினைத்தாலே நடுங்குகிறது உடம்பெல்லாம். எல்லாம் சில நிமிடங்களில் முடிந்துவிட்டன. அதுவும் அத்தனை அழகான மலைச் சாலையில்...''

''அதிலும் பாருங்கள்— சினிமாவுலக லாரி வந்துதான் லால்ஜியின் உயிரைக் குடித்திருக்கிறது!''

''எப்படிப் பழிவாங்கல் நடந்திருக்கிறது பார்...''

''உங்களைக் கொல்ல நடந்த சதி என்றும் சொல்வீர்கள் போலிருக்கிறது!''

''இல்லை இல்லை, என் வயிற்றெரிச்சலில் சொன்னேன்... லால்ஜி இறந்தது. எவருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு ஹரி... என் அன்றாட வாழ்க்கையின் சம நிலையே தவறிப் போயிருக்கிறது.''

அனார்கலியின் குரல் கொஞ்சம் உணர்வு முண்டு அடைத்தாற் போலிருந்தது.

''சிறிது நேரம் விளக்கைப் போட்டுக் கொள்ளட்டுமா?'' என்று கேட்டேன்.

''என் வாழ்க்கையே இருண்டு போயிருக்கிறது ஹரி...''

''திருமணம் செய்து கொள்ளுங்கள்...'' என்று சொன்னேன். ஆனால், இதை என்னுடைய மனசாட்சிக்கு ஒப்பத் தான் சொன்னேனா என்பதுதான் தெரியவில்லை. எனக்குள் அனார்கலி பற்றி கல்மிஷம் ஏதும் நிச்சயமாக இல்லை. ஆனால்...

''என்னால் பொய் வெளிச்சங்களில் வாழ முடியாது ஹரி...!''

''திருமணம் செய்து கொண்டவர்களெல்லாம் பொய் வெளிச்சத்திலா வாழ்கிறார்கள்?''

''பின் ஏன் ஒருவருக்கொருவர் முட்டி மோதிக் கிடக்கிறார்கள்—வாழ்நாள் பூராவும்...''

நான் இதற்குப் பதில் சொல்லவில்லை. மௌனமாக நின்றேன்.

''என்ன, பதிலையே காணோம்?''

''மன்னித்துக் கொள்ளுங்கள். எனக்குப் பதில் தெரியவில்லை...''



''பேரமே இல்லாத உறவுக்குத்தான என்னால் கைகளையும் மனத்தையும் கொடுக்க முடியும் ஹரி. உறவே இல்லாத உரிமைக்குப் பணிய என்னால் முடியவே முடியாது...''

இதற்கும் எனக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை...''

''போனால் போகிறது. ஒரு பத்து நிமிஷம் இப்படி வந்து உட்கார்ந்து கொள்ளேன்... எனக்கு உன் மடியில் தலை வைத்துப் படுத்துக்கொள்ள வேண்டும்... அவ்வளவு களைப்பாக இருக்கிறது எனக்கு...''

—அவள் கேட்டது நிஜம்தானா என்று எனக்கே சந்தேகமாக இருந்தது. அதனால் நின்ற இடத்திலேயே நின்றேன்.

''தயவு செய்து வந்து உட்கார்ந்து கொள்ளேன்'' என்றாள் மறுபடியும்...

வேகமாகப் போய்க் கட்டிலில் அமர்ந்து கொண்டேன். அனார்கலி என் மடியில் தலை வைத்து நிமிர்ந்து இருளில் படுத்திருந்தாள். காலக் கடிகாரமே நிசப்தமாய் நின்று போயிருந்தது. அந்த இருளும் எனக்கு வசதியாகவே இருந்தது! வெறும் இருள் சுமையாக நீண்டு கிடந்த அனார்கலியையே பார்த்தேன். மிகவும் பிரியமுள்ள என் அண்ணி எந்த விகல்பமும் இன்றி என்னுடைய மடியில் சுதந்திரமாய்ப் படுத்திருப்பது போலத்தான் இருந்தது—அந்தக் காட்சி. அது மட்டுமில்லை. உலகத்தின் முப்பத்து முக்கோடி தேவர்களும் கூட அந்தக் காட்சியை ஆகாயத்தில் கூடிப் பார்ப்பது போலவும் இருந்தது!

## 13

பத்து நிமிடங்களுக்கு மேலேயே கழிந்திருக்கும். ஆயினும் அனார்கலி என் மடியில் இருந்து தலையை உயர்த்தவே இல்லை. சற்றே விழிகளைத் தாழ்த்திப் பார்த்தேன். கரையில் ஒதுங்கிய திமிங்கிலம் போல் கிடந்தாள். மென்மையாக அவளின் புஜங்களைத் தொட்டேன்.

''என்ன ஹரி?'' என்றாள்.

''கால் வலிக்கிறது எனக்கு...''

உடனே எழுந்து கொண்டு விட்டாள்.

''ஒரே நிமிஷத்தில் என்னை இமயமலை உயரத்துக்கு உயர்த்திக் கௌரவப்படுத்தி விட்டீர்கள்'' என்றேன்.

''உறவின் அர்த்தமே அதுதான் ஹரி...''

''இந்த ஒரு கணம் எனக்கு ஆணாக இருப்பதேகூடப் பெரிய இம்சையாகத் தெரிகிறது. உங்களுக்கு ஒரு தோழனாக இருப்பதைவிடத் தோழியாக இருந்து விடலாம்... நீங்கள் என் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தது அந்த அளவுக்கு என்னை ஞானஸ்நானம் செய்து விட்டது...''

''அப்படியானால் அதற்கு முன்னால் வரை அஞ்ஞானியாகத்தான் இருந்தாயா என்ன?''

''எனக்கே தெரியாமல் என்னிடம் கல்மிஷம் இருந்திருக்கலாமே...''

''எனக்கு அப்படித் தோன்றவில்லை...''

''லால்ஜியின் மரணம் நம்மை மிகவும் நெருக்கமடையச் செய்துவிட்டது அனார்கலி!''



''லால்ஜியை அருகில் வைத்துக் கொண்டுதான் 'நண்பன் கறுப்பு ரோஜாவுக்கு' என்ற கடிதத்தையே எழுதினேன்.''

''ஆனாலும் உங்களின் இத்தனை கனத்த உறவை அப்படியே என்னால் தாங்கிப் பெற்றுக் கொள்ள முடியுமா என்று எனக்கே சந்தேகமாக இருக்கிறது...''

''இதோ தாங்கித்தான் நின்று கொண்டிருக்கிறாயே...''

''உன்னுக்குள் எப்படி மூச்சுத் திணறுகிறது என்று எனக்குத்தானே தெரியும்...''

''அப்படியானால் இன்னும் நீ சின்னப் பையனாகத்தான் இருக்கிறாய்...''

''அதையும் என்னால் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ள முடியவில்லையே...''

''ஆனால் நீ சிறிய பையனோ பெரிய மனிதனோ— அதைப் பற்றி எனக்குக் கவலை கிடையாது. நீ எனக்குத் தோழன்... நான் உனக்குத் தோழி! என்னுடைய வீடுதான் உன்னுடைய வீடு... உன்னுடைய வீடுதான் என்னுடைய வீடு...''

''அப்படியானால் உங்களுடைய துக்கங்களை என்னுடைய துக்கங்களாகவும் பகிர்ந்து கொள்ள வேண்டும் நீங்கள்... வருத்தங்கள் வரும்போது அப்படி விலகித் தனிமைப்படக் கூடாது...''

''உடனடியாக என் மனநிலையில் அந்த மாறுதலைக் கொண்டு வந்துவிட முடியாது ஹரி... என்னுடைய கடந்த காலக் கவலைகளும் அவமதிப்புகளும் இன்னும் ஆறாத காயங்கள்... அதுவும் யாராலும் எந்த மருந்தும் இடப்படாத காயங்கள்...''

''அவை காயங்கள் இல்லை. உங்களுடைய கோபங்கள்...!''

''முட்டாள்! அநியாயமான காயங்களால்தான் நியாயமான கோபங்களே ஏற்பட்டன...!''

''அந்தக் கோபங்கள் நம் உறவில் வர வேண்டாம்...''

''அதுதான் சொன்னேனே— என் மனநிலையில் அந்த மாறுதலை உடனே கொண்டு வந்துவிட முடியாது என்று...''

''நான்கு வாரங்கள் என்னை நீங்கள் நிமிர்ந்துகூடப் பாராதது என்னைச் சித்ரவதை செய்துவிட்டது...''

''சித்ரவதை உனக்கு மட்டுமில்லை... அதைப் புரிந்து கொள்...''

''ஓ...! இதை நான் இப்போது வேறு மாதிரி புரிந்து கொள்கிறேன்... நீங்கள் அடைந்த சித்ரவதையை எனக்கும் தந்து விட்டீர்கள்...''

''அப்படியும் வைத்துக் கொள்...''

''துக்கங்களைப் பகிர்ந்து கொள்கிற உங்களின் பாணி அசாதாரணமானது அனார்கலி...''

''கறுப்பு ரோஜாவென்று அழைக்கிற பாணியும் அசாதாரணமானது தான்!''

''மறுக்கவில்லை...''

''என் உறவுக்குக் கை கொடுக்கிறாய் தானே?'' —அனார்கலி கேட்டாள்.

''கௌரவத்துடன் கொடுக்கிறேன். ஆனாலும் உங்கள் கைகளில் இருக்கும் வலிமை என்னுடைய கைகளில் கிடையாது...''



''வலிமையை நான் தருவேன்...''

''அனார்கலி, உங்களின் வலது புறங்கையில் இருக்கும் அந்தச் சிவப்பு நிறப்படையை அந்த ஆஸ்பத்திரியின் டாக்டர்களிடம் காட்டினீர்களா?''

''ஏய், அதைப் போய் காட்டுகிற நிலையிலா அப்போது நான் இருந்தேன்?''

''தோல் வியாதிகளை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று ஊரில் எங்கள் டாக்டர் சொல்வார்...''

''காலில்கூட இப்போது அந்தச் சிவப்புப் படை லேசாக வந்திருக்கிறது.''

''பார்த்தீர்களா... சீக்கிரம் கவனியுங்கள் அதை...''

''ஒருநாள் நீயும் வா. டாக்டரிடம் போய் வரலாம்...''

''சினிமாவுலகத்தையெல்லாம் நான் மறந்திட வேண்டியதுதானே...?''

''சந்தேகமே வேண்டாம்!''

''ஆயிரம்தான் சொன்னாலும் சினிமா உலகம் எனக்கு நிறைவேறாத— கைகூடாத லட்சியம்தான்...''

''பல்லாயிரக்கணக்கானவர்களுக்கும் அது கைகூடாத லட்சியம்தான் ஹரி...''

''அந்த லட்சியத்துக்காகத்தானே ஆயிரம் மைல் ஓடி வந்தேன்...''

''அதற்கான பரிசுதான் அனார்கலியின் உறவு...''

''அனார்கலியென்ற பெயர் நீங்களே உங்களுக்கு வைத்துக் கொண்ட பெயராமே...?''

''அக்பர் காலத்து அனார்கலி பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா ஹரி?''

"'மொகல்-ஏ-ஆஸம்' படத்தையே பல தடவை பார்த்திருக்கிறேனே..."

"அந்தக் கதாபாத்திரம் எனக்கு மிகவும் இஷ்டமானது..."

"எனக்கு அக்பர் மிகவும் பிடிக்கும்..."

"'மொகல்-ஏ-ஆஸம்' படத்தில் மதுபாலா ஆடும் அந்தப் பாடல் காட்சி ஞாபகமிருக்கிறதா உனக்கு?"

"'ப்யார்கி யாதே தர்னா க்யா' பாடலைத்தானே சொல்கிறீர்கள்?"

"அந்த ஒரு பாடல் காட்சிக்காகவே பல முறை படத்தைப் பார்த்திருக்கிறேன்..."

"வெளியில் மழை விட்டுவிட்டது அனார்கலி..."

"பம்பாயில் மழைக்காலம் முடிகிற நேரம் வந்துவிட்டது ஹரி..."

"உண்மையிலேயே இந்த மழைக் காலத்தை என்னால் மறக்க முடியாது..."

"ஒரு 'பர்ஸாத் கி ராட்'தான் உன்னை எனக்கு அறிமுகம் செய்தது."

"மதுபாலாவின் அந்தப் படம் பார்த்திருக்கிறீர்களா அனார்கலி?"

"அந்தப் பாடல் ஒன்றுக்காகவே நூறு தடவை பார்க்கலாம்..."

"என்ன இனிமையான பாடல்கள்..."

"லதாஜி பாடிய அந்தப் பாடலைப் பாடிக் காட்டவா இப்போது?"



"அத்தனை அதிர்ஷ்டக்காரனா நான்?"

மழை பெய்து ஓய்ந்திருந்த பின்னிரவின் இருளில் 'பர்ஸாத் கி ராட்' படத்தின் அருமையான பாடல் அந்த அறைக்குள் எனக்காக ஒலித்தது.

நன்றிக்காக 'ஏக் முசாஃபிர் ஏக் ஹஸினா' படத்தின் 'பகுத் சுக்ரியா' பாடலை நான் பாடினேன்.

திருப்பி 'மஹல்' படத்தின் 'ஆயேகா' பாடலை அனார்கலி பாட...

அந்த இரவு ஒரு மெல்லிசை இரவாக நீடித்து விடிந்தது. தொடர்ந்த பல இரவுகளும் அத்தகைய இன்னிசை இரவாகவே நீண்டன. அதுமட்டுமில்லை, பல நடிகர்களின் நடிப்பு விதங்களையெல்லாம் அனார்கலிக்கு நான் நடித்தே காட்டினேன்... காதல் பாடல் காட்சிகளில் தேவ்ஆனந்த் எப்படி வேகமாக ஸ்டைலாக நடிப்பார்... ஷம்மிகபூர் எப்படி எப்போதுமே கோணல்மாணலாக முகத்தையும் முதுகையும் திருப்பிக் கொண்டு நடிப்பார் என்பதையெல்லாம் கொஞ்சம் கூடப் பிசகாமல் செய்து காட்டினேன்... அனார்கலி விழுந்து விழுந்து சிரித்தாள்.

"தேவ் ஆனந்தின் ஸ்டைல் எல்லாம் ஹாலிவுட் நடிகர் க்ரிகெரிபெக்கின் பாணி ஹரி..." அனார்கலி சொன்னாள்.

"அப்படியா?"

"அதேமாதிரி ராஜ்கபூரின் நடை உடை பாவனைகள் எல்லாம் சற்று சார்லி சாப்ளினின் பாணி."

"நான் சாப்ளின் படம் பார்த்தது கிடையாது..."

"ஏதாவது படம் வரட்டும்— இரண்டு பேரும் போவோம்..."

"கொஞ்ச நாளைக்குப் புதுப் படங்கள் அதிகமாக வராதாம்..."

''என்னாம்?'' அனார்கலி கேட்டாள்.

''சீனா - இந்தியா யுத்தம் தீவிரம் அடைந்திருக்கிறதாமே...''

''இந்த யுத்தம் தீவிரம் அடைவதற்கு முன் போய் வந்து விடலாம் என்றுதான் அன்று அத்தனை அவசரமாக லால்ஜி லோனாவாலா கிளம்பினார்...''

''இங்கே இருக்கிற லோனாவாலாவுக்கும் சீனாக்காரன் சண்டைக்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குப் புரியவில்லை...''

''யுத்தம் வந்தால் எல்லாப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு வரும் ஹரி. தட்டுப்பாடு வந்தால் வியாபாரிகளுக்கு கொள்ளை லாபம்தானே...''

''ஆனால் பாவம் லால்ஜி தன் முதலையே இழந்து விட்டார்...''

''யுத்தம் தீவிரமாகிவிட்டால் இந்த வருஷம்- பம்பாயில் தீபாவளியின் வெளிச்சத்தைக் குறைத்துவிடுவார்கள்...''

''இந்த வருஷம்தான் லால்ஜியின் மரணத்தால் நமக்குத் தீபாவளி கிடையாதே'' என்றேன்.

''நீ ஒரு நிகரில்லாத நண்பன்டா ஹரி...''

—மனம் நெகிழ்ந்து போய்ச் சொன்ன அனார்கலி என்னை மிக மேன்மையான வாஞ்சையுடன் மெலிதாக அணைத்துக் கொண்டாள். நான் அவளுடைய புஜங்களின் உயரத்துக்குத்தான் இருந்தேன். பிரியத்துடன் சிரமம் இல்லாமல் என் உச்சந்தலையில் அனார்கலி ஒரு முத்தமும் இட்டாள்...அப்படியே நெகிழ்ந்து அவளோடு அவளாகக் கரைந்து போய் விடலாமா என்றிருந்தது எனக்கு. அவள் அணைப்பு உண்மையிலேயே ஒரு பெண்ணின் அணைப்பாகவே தோன்றவில்லை எனக்கு. எல்லா சீலமும்



கொண்ட ஓர் அருமையான மானிட ஜீவனின் அரவணைப் பாசத்தான் தெரிந்தது. சில விநாடிகள் கழித்து அனார்கலியின் அணைப்பில் இருந்து என்னை விடுவித்துக் கொண்டேன்.

''நாளை சௌபாத்தி கடற்கரையில் இந்திய—சீன யுத்தம் பற்றி கிருஷ்ணமேனன் பேசுகிறாராம்'' என்றாள் அனார்கலி.

''அப்படியா?''

''மரமண்டை! அப்படியா என்று கேட்கிறாயே...உனக்கு சினிமாவை விட்டால் வேறெதுவும் தெரியாது...''

''கிருஷ்ணமேனன் யார்?''

''பாதுகாப்பு அமைச்சரோ அல்லது வெளியுறவு அமைச்சரோ... சரியாகத் தெரியவில்லை...''

''உங்களுக்கே சரியாகத் தெரியவில்லை...என்னைச் சொல்லிவிட்டீர்கள்...''

''நாளை சௌபாத்தியில் கூட்டம் ஏராளமாகக் கூடும்...''

''போய்ப் பார்த்துவிட்டு வருவோமா?''

''நாளை மாலை லால்ஜியின் மனைவி என்னைப் பார்க்க வருவதாகச் சொல்லி அனுப்பியிருக்கிறார்.''

''ஆஸ்பத்திரியில்கூட உங்களுடன் பேசினார்கள் போலிருக்கிறதே!''

''மிக உயர்ந்த மனுஷிடா ஹரி. 'எனக்குத் தேவையான பணவசதியெல்லாம் இருக்கிறதா' என்று எத்தனை அக்கறையுடன் கேட்டாள் தெரியுமா...''

''மனிதர்கள் எல்லோருமே நல்லவர்களாக மாறி வருகிறார்கள் போல் தெரிகிறது...!''

''நல்ல மனிதனாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள் என்றார்கள்...''

''அவர்களுக்கு என்ன பதில் சொன்னீர்கள்...?''

''அவர்களுடைய அக்கறையைச் சொன்னார்கள்... அதற்கெல்லாமா ஒருத்தி பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியும்?''

என்னுடைய பம்பாய் நகர வாழ்க்கையின் முதல் தீபாவளி, யுத்த நிலைமையால் மிகவும் ஒளி குன்றிக் கொண்டாடப் பட்டிருந்தது. யுத்தமும் மிகவும் மோசமடையாத நிலையிலேயே தயங்கி நின்று கொண்டிருந்தது. ஆனால் அந்த யுத்தமே இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் மனிதநேயக் கனவுகளை உடைத்து நொறுக்கிவிட்டிருந்தது. போரினால் இந்திய தேச மக்கள் பாதிக்கப் பட்டார்களோ இல்லையோ, நேருவின் மனம் அதிகமாகவே பாதிக்கப்பட்டு விட்டது. இந்தச் செய்தியில் மட்டும்தான் எனக்கு என் அப்பாவின் நினைவு வந்தது.

என்னுடைய அப்பா, ஜவஹர்லால் நேருவின் அபிமானி... இந்தச் சம்பவத்தைத் தவிர வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் எனக்கு அப்பாவின் ஞாபகமோ பட்டி வீரன் பட்டி பற்றிய நினைவுகளோ மனத்தில் ஏற்படவே இல்லை. சினிமா உலகம் பற்றிய கனவுகளும்கூடக் கொஞ்சம் கொஞ்சமாய் அழிந்துவிட்டிருந்தன. என்னுடைய ஒவ்வொரு நாளின் அன்றாட வாழ்க்கையும் அனார்கலியுடன் இரண்டறக் கலந்திருந்தன. எல்லாமே இனிதாகத்தான் நடந்தேறிக் கொண்டிருந்தன—நவம்பர் இரண்டாம் வாரம் வரை...

## 14

பம்பாயின் இரண்டாவது கோடை காலம் என்று சொல்லத்தக்க நவம்பர் மாதத்தின் இரண்டாம் வாரத்தில் ஒரு நாள்.



ஷம்மிகபூர், புதுமுகம் கல்பனா சேர்ந்து நடித்த 'புரொபசர்' படம் பார்த்துவிட்டு சனிங் பஜாரில் ஒரு கடையின் முன் நின்று சில பொருட்களை அனார்கலியும் நானும் பேரம் பேசிக் கொண்டிருந்தபோது என் பிடரியில் ஷர்ட் காலரைச் சேர்த்துக் கொத்தாக இறுக்கிப் பிடித்தது ஒரு முரட்டுக் கை... என்னால் திரும்பிக்கூடப் பார்க்க முடியவில்லை. அத்தனை முரட்டுத்தனமாக அந்தக் கை என் பிடரியைப் பற்றியிருந்தது.

''திருட்டுப் பயலே... மாட்டிக்கிட்டியா என்கிட்ட...''

என் முதுகின் பின்னால் ஒலித்த அந்தக் குரல் என்னுடைய மாமா தியாகராஜனின் குரல் என்று உடனே எனக்குத் தெரிந்துவிட்டது.

''என்னை விடுங்க மாமா, முதல்ல என்னை விடுங்க'' என்று கூறி நான் திமிறினேன்.

அனார்கலியும் அவரைப் பார்த்து ''யார் நீங்கள்? ஏன் இவனை இப்படிப் பிடிக்கிறீர்கள்'' என்று கோபத்துடன் இந்தியில் கத்தினாள்.

மாமா பிடியைத் தளர்த்தி என்னை அவர் பக்கமாகத் திரும்ப வைத்து, பின் சட்டென என் இரண்டு கைகளையும் இறுக்கிப் பிடித்துக் கொண்டார். சில நிமிஷங்களுக்கு அனார்கலியை அவர் லட்சியமே பண்ணவில்லை.

''எனக்குத் தெரியும்டா கண்ணா...நீ இந்த பம்பாயைத்தான் சுத்திட்டு இருப்பேன்னு... எத்தனை நாளா உன்னை இந்த ஊர்ல வலைபோட்டு நான் தேடி அலையறேன் தெரியுமா ராஸ்கல்! ஒழுங்கா மரியாதையா என்கூடக் கிளம்பி ஊர் வந்து சேரு...''

''நீங்கள் யார்...? முதலில் அதைச் சொல்லுங்கள்...? —அனார்கலி இந்தியில் குறுக்கிட்டாள்.

மாமா என்னிடம் தமிழிலேயே பேசினார்: "இவ யார்டா...?"

"அவங்க என்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட்..."

"அடேங்கப்பா! இவரு பெரிய புல் தடுக்கிப் பயில்வான் இவருக்கு ஒரு ஃப்ரெண்ட்... இந்த வயசுல என்னடா பொம்பளை ஃப்ரெண்ட்...?!"—மாமா எகத்தாளமாகக் கேட்டார்.

எனக்கு எரிச்சலாக வந்தது. ஆனால், எதுவும் செய்ய முடியாமல் வெறுமே பற்களைக் கடித்தேன். மாமாவின் கவனம் அனார்கலியின் பக்கம் திரும்பியது. அவளிடம் இந்தியில் பேசினார்...

"நீ யார் பெண்ணே?" என்று கேட்டார்.

"முதலில் நீங்கள் யார் என்பதைச் சொல்லுங்கள்."

"பெரிய ராங்கி எடுத்தவளா இருப்பா போலிருக்கு" என்று என்னைப் பார்த்து தமிழில் முனகிக் கொண்டார். அற்ப மனிதர்களுக்கு இவ்விதம் தெரியாத மொழியில் இஷ்டத்துக்குப் பேசித் திட்டிக் கொள்வதில் ஒரு சந்தோஷம்...

"என் பெயர் தியாகராஜன்... உன் பேரென்ன?"

—மறுபடியும் அனார்கலியிடம் இந்தியில் கேட்டார்.

"என் பெயர் அனார்கலி... நீங்கள் எங்கேயிருந்து வருகிறீர்கள்?"

"நான் சிவகாசியிலிருந்து வருகிறேன். ஹரி என்னுடைய சகோதரி மகன்..."

"இப்போது உங்களுக்கு என்ன வேண்டும்?"



"இவனை உடனே ஊருக்கு அழைத்துப் போக வேண்டும்..."

"நான் ஊருக்கெல்லாம் வருவதாக இல்லை..." —நானும் இந்தியிலேயே குறுக்கிட்டுச் சொன்னேன்.

"இவரு பெரிய ராஜ்கபூரு...! இந்தியில் பேசறாரு என்கிட்டே...! வாயை மூட்றா..."

அனார்கலி ஒரு நிமிடம் யோசனை செய்துவிட்டுச் சொன்னாள்.

"சரி, இப்போது உங்களுக்கு என்ன பேச வேண்டுமோ அதை எங்களுடைய வீட்டில் வந்து பேசுங்கள்... இப்படித் தெருவில் நின்று கத்த வேண்டாம்..."

"'எங்கள் வீடு' என்று சொல்கிறாயே... அப்படியென்றால்?"— மாமா கேட்டார்.

"நானும் ஹரியும் சேர்ந்து வாழ்கிற இடம்..."

ஓஹோ... சேர்ந்து வாழ்கிற வரைக்கும் வந்து விட்டீர்களா? சரி வருகிறேன்..."

ஒரு டாக்ஸி கொண்டு வரப்பட்டது. அதில் மூவரும் அனார்கலி வீட்டை நோக்கிப் பயணமானோம்.

வீடு போய்ச் சேர்ந்ததும் அனார்கலியின் அறையில் அமர்ந்தோம்.

"இதற்கு என்ன வாடகை?" - மாமா, அனார்கலியைப் பார்த்துக் கேட்டார்.

"இது என் சொந்த வீடு..." - அனார்கலி படு அலட்சியமாகச் சொன்னாள்.

"பயல் பெரிய புளியங்கொம்பா பார்த்துத்தான் பிடிச்சிருக்கான்..." - மாமா தமிழில் சொல்லிக் கொண்டார்.

“மாமா, எதையும் இந்தியில் சொல்லுங்கள்... அவர்களுக்கும் புரிய வேண்டும். அதுவுமில்லாமல் உங்கள் இஷ்டத்துக்குக் கண்டபடியெல்லாம் பேசாதீர்கள். சொல்லிவிட்டேன்...!— மாமாவிடம் நான் இந்தியிலேயே சொன்னேன்...

“ராஸ்கல்! கையும் களவுமாகப் பிடித்திருக்கிறேன் உன்னை... கண்டபடியெல்லாம் பேசாதே என்று பெரிதாய் என்னைக் குறை சொல்கிறாயே... நீ மட்டும் உன் இஷ்டத்துக்குக் கண்டபடி சுற்றிக் கொண்டிருப்பாய்... நாங்கள் வாயை மூடிக்கொண்டு, பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்...”— மாமாவும் இந்தியில் பேசினார்.

“நான் கண்டபடி சுற்றிக் கொண்டிருப்பதாக யார் சொன்னார்கள் உங்களிடம்?”

“கையும் களவுமாக பிடித்ததாகச் சொல்கிறீர்களே... நாங்கள் என்ன உங்கள் வீட்டில் வந்து திருடினோமா இல்லை கொள்ளையடித்தோமா?” அனார்கலியும் மாமாவைக் கேட்டாள்.

“இதோ பதினெட்டு வயதுகூட நிறையாத ஒரு பையனை இழுத்துக்கொண்டு சுற்றிக் கொண்டிருக்கிறாயே... இதற்கு என்ன அர்த்தமாம்...?”

“அவனுக்குப் பதினெட்டு வயசா இருபது வயசா என்பதெல்லாம் எனக்குத் தேவையே இல்லாத விஷயங்கள் பெரியவரே...!”

“ஓஹோ! அப்போ உனக்கு எதுதான் தேவையோ?”

“ஹரிராம் மிகவும் நல்ல பையன். எனக்குத் தேவை அவ்வளவுதான்...

“அவனுக்கு இருக்கும் காபித் தோட்டங்களெல்லாம் உனக்குத் தேவையே இல்லை... அப்படித்தானே...?”



“நிஜமாகவே தேவையில்லை. எனக்குத் தேவை கல்மிஷம் இல்லாத மனம் மட்டுமே...”

“அப்படியென்ன கல்மிஷம் இல்லாத நட்போ ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே...?”

“உங்கள் வாழ்க்கையில் அப்படிப்பட்ட நட்பு சாத்தியம் இல்லாததாக இருக்கலாம்... அதற்காக எங்கள் வாழ்க்கையிலும் அது சாத்தியமற்றதாக ஆகிவிடாது...”

“ஆண் - பெண் இயல்பில் அது சாத்தியமே அற்றதுதான்... ஆணும் பெண்ணும் தனியாக இப்படித் தங்கி இருந்தால் உணர்வு மீறல்கள் ஏற்படுவது இயல்பானது... அதை இல்லையென்று சொன்னால் நீ பொய் பேசுவதாகத்தான் அர்த்தம்...’

“எங்கள் உறவு அந்த உணர்வு நிலைகளைச் சார்ந்தது இல்லை என்கிறேன்... எங்கள் நட்பிலும் அதற்கான நோக்கங்கள் கிடையாது. நட்புக்கும் உறவுக்கும் பாலுணர்வு நிலைகளே நோக்கமாக இருந்திருக்குமானால், அதுவே அடிப்படையாகவும் இருந்திருக்க நேரிட்டிருந்தால் இப்படியொரு பழைய காலத்துக் கட்டடத்தில் வாழ்ந்து கொண்டிருக்க மாட்டேன் நான். சினிமாவுலகத்தின் முடிசூடா ராணியாகவே மலபார் ஹில்ஸில் வாழ்ந்து கொண்டிருந்திருப்பேன்... ஆனால், இந்த அனார்கலியின் வாழ்க்கை முறைகளில் அம்மாதிரியான விபசாரங்களுக்கு இடம் கிடையவே கிடையாது...”

“சரி, நீ பெரிய தர்மபத்தினியாகவே இரு! அதைப் பற்றி எனக்குக் கவலை கிடையாது. எங்களுக்கு எங்களுடைய பையன் வேண்டும். அவனை நான் ஊருக்கு அழைத்துப் போகப் போகிறேன்...”

“அதை நீங்கள் அவனிடம்தான் பேசிக் கொள்ள வேண்டும். ஆனால் எங்கள் இருவருடைய நட்பைப் பற்றி

மட்டும் தப்பாகப் பேசாதீர்கள், அதற்கான தகுதி உங்களுக்கு இல்லை...''

''நான் அனார்கலியை விட்டுவிட்டு ஊருக்கு வருவதாக இல்லை...'' - உறுதியான குரலில் நான் சொன்னேன்.

''படவா ராஸ்கல்... ஏதோ சினிமா ஆசை வந்துச்சி... ஓடியும் வந்துட்டே பம்பாய்க்கு... மூணு மாசமோ நாலு மாசமோ ட்ரை பண்ணிப் பார்த்துட்டு ஒண்ணும் நடக்கலைன்னா பேசாமே ஊர் வந்து சேருவியா... எவகூடவோ ஒரே வீட்ல குடித்தனம் பண்ணிக்கிட்டு... கேட்டா— வாய்கிழிய என்னமோ பேசறியே பெரிசா... இப்பப் போய் போலீஸ் ஸ்டேஷன்ல 'இந்த மாதிரி இவ ஒரு மைனர் பையனைத் தப்பான உறவுக்குப் பிடிச்சு வெச்சிருக்கா'ன்னு ஒரு கம்ப்ளெயிண்ட் குடுத்துட்டு வந்தேன்னு வெச்சுக்க— தம்பி என்னனும் இவ... ஞாபகம் வெச்சுக்க, நெனைச்சா சட்டப்படியே இவளைப் பத்து எண்ணறதுக்குள்ளே மடக்கிடுவேன். எதுக்கு அந்த அளவுக்குப் போகணும்னுதான் பேசாம இருக்கேன்.'' மாமா தமிழில் கூறினார்.

எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

''என்ன சொல்றே...? ஒழுங்கா ஊருக்குக் கிளம்பறியா... இல்லை சட்டப்படி ஆக்ஷன் எடுக்கட்டுமா?''

''உன் மாமா என்ன சொல்கிறார் ஹரி?'' - தமிழ் புரியாததால் அனார்கலி என்னைப் பார்த்துக் கேட்டாள். நான் மாமா சொன்னதையெல்லாம் அவளுக்கு இந்தியில் சொன்னேன்.

''சரி, அவருக்கு நீ என்ன பதில் சொல்கிறாய்?'' - அனார்கலி கேட்டாள்.

''என் உயிரே போவதாக இருந்தாலும் சரி... ஊருக்கு மட்டும் நான் போவதாக இல்லை...''



''காதில் விழுந்ததா பெரியவரே? போங்க... போய்ச் சட்டப்படி நடவடிக்கை எடுங்க... சட்டத்துக்குப் பதில் சொல்ல நாங்கள் தயாராவே இருக்கோம்.''

''நன்றாக யோசித்துக்கொள் பெண்ணே... போலீஸ் ஸ்டேஷன் ஒண்ணும் கிராண்ட் ரோடு கிடையாது...''

''நன்றாக யோசித்தேதான் சொல்கிறேன்... ஹரி இங்கே எப்படி வந்து சேர்ந்தான் என்பது இந்தக் கட்டடத்தில் தங்கியிருக்கும் அத்தனை பேருக்கும் தெரியும். எனக்கும் இவனுக்கும் உள்ள உறவு பற்றியும் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் அனைவருமே வந்து எனக்குச் சாதகமாகத்தான் சாட்சி சொல்வார்கள். அதுமட்டுமில்லை, வேண்டுமென்றே என்னை அவமானப்படுத்தும் நோக்கத்தோடு நடந்து கொண்டீர்கள் என்று சொல்லி நான் உங்கள் மீது மானநஷ்ட வழக்கு தொடர்வேன்...'' - அனார்கலி இப்படிப் பேசியதும் மாமாவின் முகத்தில் ஈயாடவில்லை... தலையையும் முதுகையும் சொறிந்து கொண்டார். மானநஷ்ட வழக்கெல்லாம் தொடர்ந்தால் மாமா தாங்க மாட்டார். எனக்குத் தெரியும், மாமாவின் எல்லைகள். இருபது வருடங்களாக அவர் ஏதோவொரு சிவகாசி காலண்டர் கம்பெனியின் ஏஜெண்ட், வருடம் பூராவும் காலண்டர்கள் ஆர்டர் வாங்க பம்பாய், டெல்லி, கல்கத்தா என்று அலைந்து கொண்டிருப்பவர். சதா பேசிப் பேசி சவடால் பேர்வழி ஆனவர். ஆனால், கட்டையைத் தூக்கினால் தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு ஓடிவிடக் கூடியவர்...

''ஏன் பெரியவரே... போலீஸில் போய்ப் புகார் கொடுக்கிறீர்களா?''— அனார்கலி கேட்டாள்.

''இதோ பாரும்மா... எனக்கென்ன உன்னை முன்னே பின்னே தெரியுமா... இல்லை — உனக்கும் எனக்கும் ஏதாவது முன்விரோதமா? ஏதோ எங்கள் குடும்பத்துப்

பையன் சினிமா ஆசையில் வீட்டை விட்டு ஓடி வந்து விட்டான். அந்தக் கவலை எங்களுக்கு. இந்த ஹரி ரொம்பவும் பெரிய இடத்துப் பையன். நன்றாகப் படித்து முன்னுக்கு வர வேண்டியவன். அவன் வந்து இப்படி இந்தச் சின்ன வயசில் யாரோ வயதுக்கு மீறிய ஒரு பெண்ணுடன் சுற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் என்னைப் போன்ற ஒரு சாதாரண மனிதனுக்கு மனத்தில் என்ன தோன்றும் சொல்...''- மாமா அடங்கிப் போய்க் கேட்டார்.

''அதெப்படி வேறு யாருக்கும் தோன்றாத கோணத்தில் உங்களுக்கு மட்டும் பார்த்த மாத்திரத்தில் நினைக்கத் தோன்றியது...?''— அனார்கலி கேட்டாள்-

''தப்புத்தான். மன்னித்துக் கொள்... இவனை மட்டும் எப்படியாவது ஊருக்கு அனுப்பி வைத்துவிடு... உனக்குக் கோடி புண்ணியம் உண்டு...''

''மன்னிக்க வேண்டும். அந்த விஷயத்தில் நான் தலையிடுவதற்கில்லை. நான் அவனுக்குத் தோழிதானே தவிர எஜமானி இல்லை... ஹரி ஊருக்குப் புறப்படுவதும் புறப்படாததும் அவன் பாடு, உங்கள் பாடு...''

மாமா பெருமூச்சு விட்டார். என்ன செய்வதென்று தெரியாமல் என்னைப் பார்த்தார் - 'என்ன சொல்கிறாய்?' என்ற பொருளில்...

''நான்தான் சொல்லிவிட்டேனே மாமா...'' என்றேன்.

''சரி நானும் இதற்குமேல் ஒன்றும் செய்யறதுக்கு இல்லை. உன் அப்பாவுக்கு டிரங்கால் போட்டு வரச் சொல்றேன்... அவர் வந்ததும் உன்னை அவர்கிட்டே ஒப்படைச்சுடறேன். அவர்கிட்டே பேசிக்க. ஏதோ எதிர்பாராமே என் கண்ல பட்டே... என் கண்ல பட்டதுக்கான கடமையை நான் செஞ்சாகணும் இல்லையா...''



''உங்க கடமையை நீங்க செய்யுங்க மாமா... நானென்ன வேண்டாம்னா சொன்னேன்! அதுக்காக எடுத்த எடுப்பிலேயே கன்னாபின்னான்னு பேச ஆரம்பிச்சிங்கன்னா என்ன அர்த்தம்...?''

''மன்னிச்சுடுடாப்பா!''

''எங்கே தங்கியிருக்கீங்க மாமா?''

''ஜி. பி. ஓ. பக்கத்தில் இருக்கிற நேஷனல் ஓட்டல்லதான்... வேற எங்க தங்குவேன்? சிவகாசிக்காரனுங்க பூராவும் பம்பாய் வந்தா அங்கேதான் தங்குவானுங்க. ஆனா ஒண்ணை மட்டும் சொல்லிடறேன் நல்லா கேட்டுக்க... உங்கப்பா வர்றவரைக்கும் இந்தக் கட்டடத்தை விட்டு நீ எங்கும் போகக் கூடாது...''

''எங்கும் ஓடிப்போக மாட்டேன்... இது சத்தியம்'' என்றேன் இந்தியில், அனார்கலியைப் பார்த்தபடி.

''பயப்படவே பயப்படாதீர்கள். ஹரி எங்கேயும் ஓட மாட்டான் என்பதற்கு நான் உத்தரவாதம்... வீணாக எங்களைச் சந்தேகப்பட்டு இம்சை பண்ணாதீர்கள்...''

## 15

சிவகாசி தியாகராஜ மாமாவை அடக்கி அனுப்பியாகி விட்டது. வரப்போகும் அப்பாவை ஜெயித்தாக வேண்டும். அதுதான் பெரிய விஷயம். அப்பாவை வெற்றி பெறுவது கடினமானது. அதுவுமில்லாமல் அப்பா தனியாக வருகிறாரோ, துணைக்கு இரண்டு பேரைக் கூடவே அழைத்துக் கொண்டு வருகிறாரோ...?

''என்ன ஹரி... ஒரு மாதிரி யோசித்தபடி உட்கார்ந்து விட்டாய்?''- அனார்கலி கேட்டாள்.

"அப்பா வரப்போவதை நினைத்தால் கொஞ்சம் பயமாக இருக்கிறது."

"தைரியமாகப் பேசு. அப்புறம் நடப்பது நடக்கட்டும்..."

"நான் இன்னும் பதினெட்டு வயது நிறையாத மைனர் பையன் என்ற சட்டக் குறிப்புதான் என்னைக் கவலைப்பட வைக்கிறது."

"பதினெட்டு வயசு முடிய இன்னும் எத்தனை நாள் இருக்கிறது?"

"மூன்று மாதங்கள் இருக்கின்றன."

"அதற்குள் இத்தனை ஆட்டம் ஆடிவிட்டாய்... பெரிய ஆள் தான் நீ!"

"என்னவோ நினைத்து பம்பாய் ஓடி வந்தேன்... ஆனால், நான் நினைத்ததற்கும் மேலாக நடந்திருக்கிறது..."

"லால்ஜி இறந்தும் எத்தனை நாட்களாகிவிட்டன பார்..."

"நாட்கள் பறக்கத்தான் செய்கின்றன..."

"இன்னொரு விஷயம் என்னைக் கொஞ்சம் கவலைப்பட வைக்கிறது ஹரி."

"எந்த விஷயம்?"

"இதோ இந்த சிவப்புப் படை முதலில் ஒரு காலில் தோன்றியது. இப்போது இன்னொரு கால் விரலிலும் வந்திருக்கிறது."

"அதற்குத்தான் அன்றைக்கே சொன்னேன்— உடனே டாக்டரிடம் காட்டுங்கள் என்று..."



"லால்ஜியின் குடும்ப டாக்டர் குப்தா இருக்கிறார். முதலில் அவரிடம் போய்க் காட்டுவோம்... அப்புறம் தேவை இருந்தால் பெரிய தோல் நிபுணரையும் பார்ப்போம்..."

காலையில் டாக்டர் குப்தாவைப் பார்க்க நானும் அனார்கலியும் ஒரு டாக்ஸி பிடித்து ஆஸ்பத்திரிக்கு விரைந்தோம்.

அனார்கலியின் கையிலும் கால்களிலும் தோன்றியிருந்த சிவப்புப் படைகளைச் சோதனை செய்த டாக்டர் குப்தாவின் முகத்தில் கவலையின் ரேகைகள் படர்ந்தன. உடனே பிரேம்சந்த் என்ற வேறொரு பிரபல தோல் வியாதி நிபுணரிடம் அவரே உடனடியாக என்னையும் அனார்கலியையும் அழைத்துப் போனார். மிகத் துரிதமாக எல்லாச் சோதனைகளும் நடந்தன.

அனார்கலியின் உடம்பில் தோன்றியிருந்த சிவப்பு நிறப் படைகள் தொழுநோயின் ஆரம்ப நிலையென்று மருத்துவச் சோதனைகளின் இறுதி அறிக்கை தெரிவித்தது.

உடல்நலக் குறைவு ஏற்படுகிற சமயங்களில் யாரையும் அருகில் வரக்கூட விடாத ஏகாந்தத்தில் தன்னை ஆழ்த்திக் கொள்வாள். ஏதேனும் கொடிய துக்கம் வரும் வேளையில் எவரின் அருகாமையைக்கூட விரும்பாத தனிமையில் தன்னை அமிழ்த்துக் கொள்வாள் என்றெல்லாம் அனார்கலியின் முக்கியமான மனத்தன்மைகள் பற்றி ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன்... ஆனால், அவளுடைய உடம்பில் தோன்றியிருந்த சிவப்புப் படைகள் தொழுநோயின் ஆரம்ப நிலை என்ற மருத்துவ அறிக்கை அவளுக்கு உடல்நலக் குறைவு என்ற நிலைக்கெல்லாம் அப்பாற்பட்டது. துக்கம் என்ற சொல்லின் பொருளையெல்லாம் பொருளற்றதாக ஆக்கியிருந்தது. மிகக் கொடிய ஆயுதமாய் ஒரே விநாடியில் ஒரே ஆழத்தில் எங்களைத் தாக்கியிருந்த அந்த மருத்துவ அறிக்கை எங்கள் இருவரையுமே கண்

களுக்கு எட்டாத பாதாளங்களின் நிசப்தங்களில் தூக்கி வீசியடித்திருந்தது.

தொழுநோய் எளிதில் தொற்றக் கூடியதா இல்லையா? எளிதில் கட்டுப்படுத்த முடியுமா? மருந்துகளால் குணப்படுத்த முடியுமா? என்ற அரசாங்கத் தகவல்களெல்லாம் பேருந்துகளிலும் செய்தித்தாள்களிலும் விளம்பரப்படுத்தப்படாத 1962 அது. தொழுநோய் என்றதும் கை கால்களெல்லாம் கரைந்து போய், அங்கங்கள் நசிந்து தூர் உருவங்கள் மட்டுமே உணர்வுகளில் பதிவாகியிருந்த அறியாமை மிகுந்த காலம் அது.

ஒரு வார்த்தைகூடப் பேசத் தோன்றாமல் டாக்ஸி பயணம் நெடுக மௌனமாகவே இருந்தோம். தலைகள் கவிழ்ந்து வீட்டின் மாடிப் படிகளில் ஏறினோம். அனார்கலி சரேலென அவளுடைய அறைக்குள் மறைந்தாள். நான் என்னுடைய அறைக்குள்ளே சிறைக் கைதி போல் நின்று கொண்டிருந்தேன். எங்கள் இருவரின் ஊடே உருவாகியிருந்த ஆனந்தமான உலகம் அஸ்தமித்துப் போயிருந்தது. ஏதோ ஒன்றின் கரிய நிழல் எங்கும் படிந்திருந்தது. யாருடைய கேள்விக்கும் நான் பதில் சொல்லவில்லை. அனார்கலியும் பதில் பேசவில்லை. அவள் அவளுடைய தனிமையில். நான், என்னுடைய தனிமையில்... ஒற்றைப் பிரக்ஞையில் மட்டுமே நான் உயிர் கொண்டிருந்தேன். எப்படி இயங்க வேண்டும். அனார்கலியை எப்படி இயக்க வேண்டும் என்ற சிந்தனைக்கே வளம் இன்றி வெறும் சூனியத்தில் நின்றேன்— அன்றிரவு நெடுநேரமாகிய பின் அனைவருமே தூக்கத்தில் ஆழ்ந்திருந்த போது வேறுலக ஆவியென மிக அந்நியமான ஸ்தூலத்துடன் அனார்கலி என் அறைக்கு வந்தாள். பல நிமிடங்களுக்கு இருவருமே மௌனமாக இருந்தோம்.

பின் அனார்கலி மிகவும் சன்னமான குரலில் சொன்னாள் :



“என் உலகம் தொலைந்து விட்டது ஹரி... என்னுடைய சந்தோஷம், உல்லாசம், பாதுகாப்பு, நம்பிக்கை எல்லாமே சிதறி உருக்குலைந்து போய்விட்டன. என் மனவெளியின் அத்தனை காட்சிகளும் அழிந்து ஒழிந்தன எல்லா நிமிடமும் என் அறிவில் தெரிவது எனக்கு ஏற்பட்டிருக்கும் நோய்தான் வேறு எதுவுமே இல்லை. என் உலகத்தில், இனி என் வாழ்க்கை அந்த நோயுடன் மட்டும்தான் எனக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நோய் முற்றிலும் குணமாகுமா... அதற்கான மருந்துகள், வைத்திய முறைகள் இருக்கின்றனவா என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. இந்த நோய் எனக்கு வந்திருக்கிறது என்பதே எனக்குப் போதுமானது. இங்கு என் மன வாழ்க்கை முற்றிலுமாக முற்றுப்பெற்றுவிட்டது. வெறும் பௌதிக இயக்கம் மட்டும்தான் எனக்கு வாழ்க்கை. என்னுடைய அறை மட்டும்தான் என் உலகம். எனக்கு யாரும் வேண்டாம். எதுவும் வேண்டாம். இந்த நோயிலேயே, இந்தத் துக்கத்திலேயே அமிழ்ந்து புதைந்து போகப் போகிறேன். உனக்குத் தெரியும்- சந்தோஷங்களையும் இன்பங்களையும்தான் என்னால் பகிர்ந்து கொள்ள முடியும்... எனவே, என்னைவிட்டு நீ விலகி விடலாம், சிறு சிறு உதவிகளுக்காக மட்டும் ஓரிருவர் இங்கே இந்தத் தளத்தில் இனி தங்கிக் கொள்ளலாமே தவிர... உறவு, நட்பு என்ற அடையாளங்களில் எவருக்குமே இடம் கிடையாது. நோயைத் தாங்கிக் கொண்டு உயிர் போகிற காலம் வரைக்கும் நான் வாழத்தான் போகிறேன். ஆனால், எவரின் அன்பையும் இரக்கத்தையும் ஏற்று நான் வாழ்வதாக இல்லை. அப்படியொரு வாழ்க்கை எனக்குச் சாத்தியமும் இல்லை. எனவே, நீ இந்தக் கட்டடத்தை விட்டு நீங்கி விடலாம்... நீ உன் மாமாவுடன் உன்னுடைய ஊருக்குப் போவாயோ இல்லை போக மாட்டாயோ- அதைப் பற்றி எனக்குக் கவலை கிடையாது. என் மனம் இழந்து விட்ட என்னுள் அழிந்துவிட்ட உலகத்தில் நீயும் தான் அடக்கம். அதனால் உன்னிடமும் நான் விடை பெற்றுக் கொள்கிறேன். இதற்குமேல் இனி எந்தக் காரணம்

கொண்டும் என்னைப் பார்க்கவோ என்னைச் சமாதானப்படுத்தவோ தயவு செய்து நீ முயற்சிக்க வேண்டாம். அது என்னுடைய இழப்பின் கொடுமையைத்தான் பிரதிபலித்துக் காட்டும் என்னால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியாது ஹரி... எனவே, அந்த நிலையை மட்டும் எனக்குத் தந்து விடாதே. என்னுடைய இந்த முடிவுக்காக நீ கவலைப் படலாம். வேதனைப்படலாம். கோபமும் படலாம்... அதற்காக என்னை மன்னித்துவிடு. எனக்கு என்னுடைய கவலையும் வலியும் கோபமும்தான் முக்கியம். வேறு யாருடையதும் இல்லை. இன்றுடன் இந்த நிமிடத்துடன் நம் நட்பு, உறவு, சந்திப்பு எல்லாம் முடிந்தன... வருகிறேன்.''

அனார்கலிக்குத் தொழுநோயின் ஆரம்ப நிலை என்ற அறிக்கையிலேயே மொத்தமாக ஸ்தம்பித்து இயக்கமற்ற நிலையில் கிடந்த என்னை அனார்கலியின் முடிவு எதுவுமே பண்ணவில்லை. எல்லாம் ஏற்கெனவே ஸ்தம்பித்து மடிந்து விட்ட பிறகு மேலும் ஸ்தம்பிக்கவும், மடியவும் என்ன இருக்கிறது? எனவே, நான் எந்த விதத்திலும் செயல்படவே இல்லை. செயல்படுகிற வலிமையும் எனக்கு இல்லை. உடனே இயலாவிட்டாலும், ஓரிரு வாரங்களிலாவது அனார்கலியின் தீர்ப்பையெல்லாம் புறக்கணித்து அவளுக்கு என்னுடைய நட்பின் வலிமையை, அன்பின் கவனிப்பைச் செயல்படுத்தி ஆண்மையுடன் அவளை வென்று ஆக்கிரமித்து அவளுடனேயே என் உறவையும் வாழ்க்கையையும் நீடிக்கவும் நிரந்தரமாக்கவும் செய்திருக்கலாம்... அதை நான் செய்யவில்லை. செய்வதற்கான பலமும் இல்லை என்பது நீண்ட நாட்களுக்கு அப்புறம்தான் எனக்குப் புரிந்தது. அனார்கலியின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுகிற, பணிந்து போகிற வயதுக் குறைவில்தான் நான் அந்த நிமிடங்களில் இருந்திருக்கிறேன். அதனால் தான் அன்று இரவு அனார்கலி என்னைத் தனிமைப்படுத்தி விடைபெற்றுக் கொண்டதும் என்னுடைய மிகப் பல



பிரமைகளும் கற்பனைகளும் நம்பிக்கைகளும் வேர் இழந்து சாய்ந்தன. எனக்கு நானே போட்டிருந்த கதாநாயக வேஷமும் கிழிந்து கந்தல் கந்தலாகத் தொங்கியது! இனி எனக்குப் போக்கிடமும் கிடையாது.

அதனால்தான் அப்பா வந்தபோது அவரின் முன் வெறும் பதினெட்டு வயதுப் பையனாகத் தலைகுனிந்து நின்றேன். எனக்குள் ராஜ்கபூரும் இல்லை, சாந்தாராமும் இல்லை. ஹரிராம் என்ற பட்டிவீரன் பட்டிப் பையன் தான் அப்பாவியாக அநாதையாக நின்று கொண்டிருந்தான்!

அனார்கலியுடன் மிகப் பெரிய சண்டைக்கே தயாராக இருந்த என் அப்பா, நான் முழுவதுமாகச் சரணாகதி அடைந்துவிட்ட தோற்றத்தில் நின்றதைப் பார்த்ததும் தடுமாறிப் போய்விட்டார். மாமாவுக்கு நம்பவே முடியவில்லை. என்ன நடந்திருக்கும் ஏது நடந்திருக்கும் என்பதை அவரால் அனுமானிக்கவே முடியவில்லை. நான் ஏன் சொல்கிறேன் அனார்கலிக்கு வந்திருக்கும் நோய் பற்றி... சொன்னால் அவர்களுக்கு உற்சாகமாகி விடும்... கடவுளாகப் பார்த்துத்தான் அவளுக்கு இந்தத் தண்டனையைக் கொடுத்திருப்பதாகப் பிரசங்கம் செய்யவே ஆரம்பித்து விடுவார்கள்.

ஊர் திரும்ப எனக்கும் சேர்த்து அவசர அவசரமாக டிக்கெட் வாங்கிவிட்டார்கள். மனதுக்குள் எப்படி இருந்தாலும் மாமா ஒரே ஒரு முறை அனார்கலியைப் பார்த்து நன்றி சொல்ல ஆசைப்பட்டார்... அப்பாவுக்கும் கூட ஆசை. ஒரே ஒரு தடவை அவள் எப்படி இருக்கிறாள் என்பதைப் பார்த்துவிட! ஆனால், அவர்கள் இருவரின் ஆசைகளுமே நிறைவேறவில்லை. எனக்கே திறந்து கொள்ளாத அனார்கலியின் அறைக் கதவுகள் அவர்களுக்கு மட்டும் திறந்துவிடுமா என்ன...?

கொட்டும் மழையில் வெளிச்சத்தோடு தன்னந்தனியாகப் பெரிய மனிதன் போல் சில மாதங்களுக்கு முன்னால் பம்பாய் வந்திறங்கிய நான், மாமாவும் அப்பாவுக்கும் ஆளுக்கொரு பக்கம் இருக்க மழையில்லாத இரவில் பம்பாய் விக்டோரியா டெர்மினலில் சென்னை போகிற ரயிலில் சின்னஞ்சிறு பையனைப்போல ஒருவித பயத்துடன் உட்கார்ந்திருந்தேன். சிறிதும் எதிர்பாராமல் ரயில் நிலைய ஜன சமுத்திரத்தில் தொழுநோய் முற்றிய ஒருவரைப் பார்த்ததும் என் உணர்வுகள் அதிர்ந்து குலுங்கின... ஒரு காலத்தில் அனார்கலிக்கும் இந்த நிலை வந்துவிடுமோ என்ற பயத்தில் உடம்பே நடுங்கியது. அவளுக்கு அப்படிப் பட்ட சீரழிவெல்லாம் வந்துவிடக் கூடாது என்று மனத்துள் வேதனையுடன் பிரார்த்தனை செய்தேன்.

அப்போது என் காதில் விழுந்துவிடக்கூடாதென்ற நினைப்பில் மாமா, அப்பாவிடம் தணிவான குரலில் சொல்லிக் கொண்டிருந்தார் :

''அந்தப் பொம்பளை நெஜமாவே நல்லவளோ பொல்லாதவளோ- நமக்குத் தெரியாது மச்சான். ஆனா, ஆளு கலர்னா கலர் அப்படியொரு கலர். சினிமாக்காரி தோத்துருவா...''

''நானும் ஒருவாட்டியாவது அவ எப்படித்தான் இருக்கான்னு பாத்துரணும்னு பார்த்தேன்... முடியலை.''

''அவளுக்குப் போய் எப்படி இந்தப் பயல்கிட்டே அப்படியொரு சிநேகிதம்னு தான் புரியவே மாட்டேங்குது.''

''எப்படியோ பெரிய விவகாரம் பண்ணாமே நம்ம பயலை இத்தோட விட்டாளே...''

''தப்பிச்சீங்க...! நாளைக்கு அவபாட்டுக்கு வந்து பட்டிவீரன்பட்டியில உக்காந்துக்கிட்டு காபி எஸ்டேட்ல



பங்கு குடுங்கடான்னு கேட்டா என்ன பண்ணுவீங்க சொல்லுங்க...?''

''வெங்கடேச பகவான்தான் காப்பாத்தினார்...''

என்னுடைய செயல்பாடு எதுவுமே இல்லாமல் அவர்களுடன் நானும் பட்டிவீரன்பட்டி திரும்பிவிட்டேன். ஏதோ ஒரு மாதிரியான விடுமுறை முடிந்திருப்பது போலிருந்தது. மீண்டும் என் படிப்பைத் தொடரச் சொன்னார்கள். மறுத்து விட்டேன். ஆனால், என்னால் பட்டிவீரன்பட்டி வீட்டிலும் இருக்க முடியவில்லை. உறவினர்களும் நண்பர்களும் தேடி வந்து நான் பம்பாய் போன சம்பவங்களை என் வாயால் சொல்லச் சொல்லி உயிரை வாங்கினார்கள். ஆனால், நான் யாருக்கும் எதையுமே சொல்லவில்லை. அனார்கலி என்ற பெயர் அவர்கள் எல்லோரின் மத்தியிலும் பரவியே இருந்தது. அவள் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள ஒவ்வொருத்தரும் என்னைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள்... அதனாலேயே நான் அவர்களிடமிருந்து விலகியே இருந்தேன். யாரிடத்திலும் எனக்கு ஒட்டுதலே வரவில்லை. இந்தி சினிமா என்ற பிரக்ஞைகூட வரவில்லை. காபித் தோட்டங்கள் இருந்த மலைச்சரிவுகளிலேயே நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தேன்.

ஆறு வருடங்கள் ஓடிவிட்டன. திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தினார்கள். இயந்திரம் போல் பண்ணிக் கொண்டேன், ''சீக்கிரம் பிள்ளைகள் பெற்றுக் கொள்'' என்றார்கள். பிள்ளைகளையும் பெற்றுக் கொண்டேன். வருடங்கள் ஓடிக் கொண்டிருந்தன. தினம் நூறு தடவையாவது அனார்கலியை நினைத்துப் பார்த்துக் கொண்டேனே தவிர ஒரு முறை பம்பாய் போய் அவளைப் பார்த்து விட்டு வரலாம் என்ற எண்ணம் மட்டும் வரவே இல்லை. காரணம் பயம். அனார்கலி நோய் முற்றி உருக்குலைந்து போயிருந்தால்? - அந்த அவலத்தைப் பார்க்கும் தைரியம்

எனக்குக் கிடையாது. ஆனால், சரியாகப் பன்னிரண்டு வருடங்கள் கழித்து, தவிர்க்கவே முடியாத அலுவல் ஒன்றின் விஷயமாக நான் பம்பாய் போக வேண்டியிருந்தது. எந்த உணர்வு மேலீடுகளும் இன்றி பம்பாய் புறப்பட்டேன். மூன்று நாட்களில் என் அலுவல்கள் முடிந்தன. நான்காம் நாள் வெகுநேரம் தியான நிலையில் அமர்ந்திருந்த பின், டாக்ஸி ஒன்றில் ஏறி ஸாவரி பஜார் சென்று அந்தக் குறுகிய தெருவை அடைந்தேன். பழைய புராதனக் கட்டடங்கள் எதுவுமே இல்லை. எல்லாமே இடிக்கப்பட்டு புதிய மோஸ்தரில் கட்டடங்கள் எழும்பியிருந்தன. ஊகம் செய்து கொண்டு நாலைந்து கட்டடங்களின் எல்லாத் தளங்களுக்கும் போய் அனார்கலியின் பெயரைச் சொல்லி விசாரித்துப் பார்த்தேன். யாருக்குமே தெரியவில்லை. சில நிமிடங்கள் திசை தெரியாமல் விழித்தேன். குஜராத்திப் பாணியில் புடவை உடுத்திச் சென்று கொண்டிருந்த பெண்களைப் பார்த்தபடி சிறிது நேரம் நின்றேன். பின் டாக்ஸியில் ஏறி 'கேட் வே ஆஃப் இண்டியா' போனேன். அதே திண்மையுடன் கேட் வே ஆஃப் இண்டியா நின்று கொண்டிருந்தது. அனார்கலி சம்பந்தப்பட்ட அத்தனை காட்சிகளும் திரைப்படம் போல் என்னுள் விரிந்தன. சற்று உணர்வு மூண்டு நெஞ்சை அடைத்தது. முதன் முதலாக எந்த இடத்தில் அயர்த்து என்னைக் கறுப்பு ரோஜா என்று அழைத்தாளோ- அந்த இடத்தில் போய் உட்கார்ந்தேன். அரபிக்கடலில் சில துளிகள் என் கண்ணீர் உதிர்ந்தன. கேட் வே ஆஃப் இண்டியா எனக்கு அனார்கலி பற்றிய நினைவுச் சின்னம் மட்டுமல்ல; என் சினிமாவுலகக் கனவுகளின் மேல் முதல் கல்லை வீசி என்னைக் காயப்படுத்திய சம்பவத்தின் ஞாபகச் சின்னமும் கூட...!

□□□

# கடல் ஆழத்துத் தாவரங்கள்

ஜமுனா— ராமகிருஷ்ணனுக்கு சித்தி முறை.

ஆனால் அவள், ராமகிருஷ்ணனின் அம்மாவுக்கு உடன் பிறந்த சகோதரி இல்லை. அவனின் அம்மாவுக்கு ஜமுனா சித்தி பெண். இந்தத் தலைமுறையின்படி பார்த்தால் ஜமுனா அவனுக்குக் கொஞ்சம் தூரத்து உறவுதான். அவர்கள் வேறு வேறு ஊர்களிலோ அல்லது ஏதோவொரு மிகப் பெரிய நகரத்திலோ வாழ்ந்து கொண்டிருந்தால் அவர்களின் உறவின் நெருக்கமும் தூரத்து உறவாக மிகவும் விலகித்தான் போயிருக்கும். ஆனால், கொஞ்சம் சிறிய நகரம்தான் என்று சொல்லும்படியான ஒரு ஊரில்- அதுவும் பக்கத்துப் பக்கத்துத் தெருக்களில் வாழ்ந்து கொண்டிருந்த அவர்களின் குடும்பங்களில் உறவின் அந்நியோந்நியம் மிக நெருக்கமாகவே இழையோடி இருந்தது. அக்குடும்பங்களில இழையோடிய அதே நெருக்கம், அதனால்தான் ஜமுனாவுக்கும் ராமகிருஷ்ணனுக்கும் இடையேயும் மிக அழகாகவும் ஆழமாகவும் வேரோடிப் போயிருந்தது

ராமகிருஷ்ணனுக்கும் ஜமுனாவுக்கும் அநேகமாக சம வயது. மிக பால்யத்திலேயே ராமகிருஷ்ணன் ஜமுனாவை ஒருநாள் கூடப் பார்க்காமல் இருந்ததில்லை. இருக்க முடிந்ததும் இல்லை. விளையாட்டில் மட்டுமில்லாமல் படிப்பிலும் ஜமுனா, ராமகிருஷ்ணனுக்குத் தோழியாகத்தான் இருந்தாள். அவர்கள் வேறு வேறு பள்ளிகளில் படித்துக் கொண்டிருந்தாலும் ஒரே படிவத்தில் ஒரே பாடங்களைக் கற்று வந்தார்கள்.

"கிருஷ்ணா வர ஞாயிற்றுக்கிழமை எனக்கு நீ ஒரு உதவி செய்வியா?"

"என்ன உதவி செய்யணும், சொல்..."

"நீயே சொல்லேன் பார்க்கலாம்."

"ஹஹ! உன் மனசில இருக்கிறது எனக்கு எப்படித் தெரியும்?"

"கொஞ்சம் யோசி, தெரிஞ்சிடும்."

"காத்தாடி செஞ்சு தரணுமா?"

"தப்பு."

"அது இல்லையா? வேற என்ன உதவி... வார்னிஷ் பேப்பர்ல ராஜா ராணி கப்பல் செஞ்சு தரணுமா?"

"போடா, தப்புத் தப்பா சொல்றே..."

"போடி. தெரியலை எனக்கு. நீயே சொல்லிடு."

இப்படி ராமகிருஷ்ணன் சொன்னதும் ஜமுனாவுக்கு ரொம்பத்தான் சந்தோஷமாக இருக்கும். "வேற ஒண்ணும் இல்லை. வர ஞாயிற்றுக்கிழமை எனக்கு நீ எப்படியாவது கொஞ்சம் புளியங்காய் பறிச்சுத் தரணும்..."

"சே! இவ்வளவுதானா? நீ என்னமோ கேக்கப் போறேன்னு நெனைச்சேன். ஆனா எனக்கு ஞாயிற்றுக் கிழமை கொஞ்சம் வேலை இருக்கு ஜமுனா..."— ராம கிருஷ்ணன் பிகு செய்வான்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. கண்டிப்பா எனக்கு நீ புளியங்காய் பறிச்சுக் குடுத்தாத்தான். இல்லேன்னா, உன்கூட பேசமாட்டேன்... போ."

பேசமாட்டேனென்று சொன்னதும் அதை அப்படியே ராமகிருஷ்ணனும் நம்பிவிடுவான். உடனே பயந்து விடுவான்!

"இல்லை இல்லை. கண்டிப்பா உனக்குப் புளியங்கா பறிச்சுத் தரேன், போதுமா?"



"ரொம்ப தாங்க்ஸ்!"

புளியம்பழமோ அல்லது புளியம்பிஞ்சோ... இரண்டுமே ராமகிருஷ்ணனுக்குப் பிடிக்காது. ஆனால், ஜமுனாவுக்கு இரண்டுமே பிடிக்குமே! உயிராச்சே அவளுக்கு. அது போதாதா அவனுக்கு? ஞாயிற்றுக்கிழமை வந்ததும் மறக்காமல் கிளம்பி விடுவான்.

ஊருக்கு வெளியில் ஓங்கி வளர்ந்திருக்கும் புளியமரங்களைத் தேடி ராமகிருஷ்ணன் தனியாகவே போவான். ஓணான் முதுகு போலிருக்கும் கிளைகளில் கவனமாகத் தவழ்ந்து தவழ்ந்து ஏறுவான். புளியம் பிஞ்சுகளைப் பறித்துக் கால் சட்டையின் இரண்டு பைகளிலும் நிரப்பிக் கொள்வான்.

ஓடி வந்து ஜமுனாவின் காலடியில் அந்தப் புளியம் பிஞ்சுகளை அவன் கொட்டும்போது அவளுடைய கண்களில் தெரியும் பரவசமான உவகையும் அதை ஒரு பெருமையுடன் ஏற்றுக் கொள்கிற ராமகிருஷ்ணனின் நட்பும்— சொற்களால் விவரிப்பதற்கு அப்பாற்பட்டவை.

ஜமுனா இருக்கிறாளே— அவளும் அந்தப் புளியம்பிஞ்சுகளை அப்படியே தின்றுவிட மாட்டாள். அவளின் அக்காவிடம் கொடுத்து மிளகாய்த் தூள், கருப்பட்டி கலந்து அம்மியில் புளியம் பிஞ்சுகளையும் வைத்துக் கட்டிவாகத் துவையல் மாதிரி அரைத்து வாங்கிக் கொள்வாள். பின், அதைச் சிறு சிறு உருண்டைகளாக உருட்டி ஏதாவது குச்சியில் செருகிக் கொண்டு ஒரு நாள் பூராவும் தின்பாள். அப்படி அந்த உருண்டைகளைத் தின்று தீர்ப்பதன் பலனையும் கடைசியில் அவள்தான் அனுபவிப்பாள். சாதம் ஒரு வாய் கூட உண்ணமுடியாமல் அவளின் தொண்டை, நாக்கு எல்லாம் ஒரே ரணமாகிப் போயிருக்கும். அது அவளாகவே தெரிந்து வரவழைத்துக் கொண்ட கஷ்டம்தானே! அதனால் யாருமே அவளுக்காக இரக்கப்பட மாட்டார்கள். ஜமுனாவின் அம்மா அவளைத்தான் செம்மையாக உதைப்பாள். அவளும் அழுது கொண்டே இனிமேல் சத்தியமாகப்

புளியங்காயே திங்க மாட்டேனென்று சத்தியம் செய்வாள். அந்த உதையும் அழுகையும் சில வாரங்களிலேயே ஜமுனா வுக்கு மறந்து போகும்.

ரகசியமாக ராமகிருஷ்ணனிடம் வருவாள்.

''கிருஷ்ணா. இன்னிக்கு ஒரே ஒரு தடவை மட்டும் பறிச்சிக் குடுடா. அப்புறம் சத்தியமா கேக்க மாட்டேன்.''

''வாயெல்லாம் புண்ணாப் போயிடும் ஜமுனா.''

''என் வாய்தானே புண்ணாப் போகும். ஆனா ஆயிட்டுப் போகட்டும்...''

''பாட்டி உதைப்பாங்கடி...''

''உன்னையா உதைக்கப் போறாங்க? என்னைத்தானே உதைச்சா உதைச்சிட்டுப் போகட்டும்...''

''அப்புறம் நீதான் அழுவே.''

''இதோ பார். உன்னால பறிச்சுத் தர முடியுமா முடியாதான்னு சொல்லு...'' — எரிச்சலுடன் கேட்பாள்.

''அப்ப இரு. இப்பவே போய்ப் பறிச்சுட்டு வரேன்...''

—ஓடிப் போய் அரை மணியில் மடி நிறையப் புளியம் பிஞ்சுகளுடன் திரும்பி வந்து ஜமுனாவின் காலடியில் கொட்டுவான். ஜமுனா, ராமகிருஷ்ணனுக்கு வெறும் சித்தி மட்டும் அல்லவே...!

ராமகிருஷ்ணனும் ஜமுனாவும் வேறு வேறு பள்ளிகளில் படித்துக் கொண்டிருந்தாலும் ஒரே படிவத்தில் தான் பயின்று வந்தார்கள். அதனால் அவர்களுடைய பாட முறைகள் எல்லாமே அநேகமாக ஒன்றாகவே இருந்தன. இதனால் பல சமயங்களில் இருவரும் ஒன்றாகப் பாடங் களைப் படிக்கப் போகிறோம் என்ற சாக்கில் இரவில் கூட ராமகிருஷ்ணன் தன் பாட்டி வீட்டிலேயே தங்கி விடுவான்.

ஆனால் ஒன்று. பாடங்களை வாசித்துக் கொண் டிருக்கிற நேரத்தில் மட்டும் ஜமுனா அநாவசியமாக ஒரு வார்த்தைக்கூடப் பேச மாட்டாள். ராமகிருஷ்ணனைக் கொஞ்சம் கூட லட்சியம் செய்யாதவள் போலத்தான் இருப்



பாள். அவளுடைய முழு கவனமும் பாடங்களில்தான் இருக்கும். இரண்டு மணி நேரம்கூடப் பாடங்களில் முழுமை யாக ஆழ்ந்திருப்பாள். அதற்காக ராமகிருஷ்ணன் மனம் சலித்துவிட மாட்டான். அவளுக்கு அருகில் அவனும் அமர்ந்து வாசித்துக் கொண்டிருப்பதே அவனுக்கு ஆனந்த மாக இருக்கும்.

அவளுடைய வகுப்பில் ஜமுனாதான் எப்போதுமே முதல் மாணவி. ஆனால், ராமகிருஷ்ணன் அவனுடைய வகுப்பில் பத்தாவது அல்லது பன்னிரண்டாவது மாணவ னாகத்தான் இருந்து வந்தான். முதல் மாணவியாக இருந்த திலும் அவனைக் காட்டிலும் படிப்பில் கெட்டிக்காரியாக இருந்ததிலும் ஜமுனாவுக்கு ஒரு பெருமிதம் இருந்தது. கொஞ்சம் இலை மறைவான கர்வம் கூட இருந்தது. ஆனால், கல்வித் திறனில் அவளை விடத் தாழ்ந்து இருந்த தில் ராமகிருஷ்ணனுக்கு அவள் மேல் பொறாமையோ, தாழ்வு மனப்பான்மையோ சிறிதளவும் ஏற்பட்டதில்லை. அப்படி அவள் அவனைவிட உயர்ந்த ஸ்தானத்தில் நின்றதில் ஒரு நியாயம் இருந்ததாகக் கூட அவன் நினைத் தான். அது மட்டுமில்லை, கல்வித் தேர்ச்சியின் கனத்த பிரக்ஞையில், மற்ற கோணங்களிலும் கூட அவள்தான் அவனைக் காட்டிலும் உயர்ந்தவள் என்கிற தொனி யோடும் கண்டிப்போடும் அவனை அவள் நடத்தி வந் தாளே— அதற்காகக் கூட ராமகிருஷ்ணன் வருத்தப் பட்டது கிடையாது. ஜமுனாவின் சுபாவத்துக்கேற்ப நடந்து கொள்வதில் உண்மையாகவே அவன் இணக்கம் காட்டினான். இந்த இணக்கம்தான், அவனின் தனிப் பெரும் கருணை.

''கிருஷ்ணா, நேத்து நீ எங்கடா போனே?''

''ஏன்?...''

''பாட்டி நேத்து புட்டு செஞ்சாங்க, நீதான் வரலையே. எவ்வளவு ஜோரா இருந்துச்சி தெரியுமா புட்டு...?''

''புட்டு எனக்கு ஒண்ணாவது எடுத்து வச்சிருக்கியா?''

"உனக்கு ஏன் நான் எடுத்து வைக்கிறேன்— அதுவும் வராதவனுக்கு!"

"அதான் இன்னிக்கி வந்துட்டேனே..."

"நேத்து வரலையே... எங்க போனே...?"

"கமலு கூப்பிட்டா. அவகூட விளையாடிக்கிட்டிருந்தேன்..."

இதை ராமகிருஷ்ணன் ஜமுனாவிடம் சொல்லியிருக்கவே கூடாது. எத்தனை வயதிலும் பெண் பெண்தான் கமலு என்ற கமலாவுடன் விளையாடிக் கொண்டிருந்தேனென்று ராமகிருஷ்ணன் சொன்னதும் ஜமுனா அவனைப் பார்த்த பார்வை, ஒரு பெரிய மாமியார்க்காரி தன் மருமகளைப் பார்ப்பது போன்ற அபாயகரமான ஒரு பார்வையை அவன் மேல் வீசிய வீசலில் அவனும் பரம சாதுவான மருமகள் மாதிரிதான் பயந்து நடுங்கி விட்டான். ஜமுனாவும் ஒரு வருங்கால மாமியார் தானே...!

கால்சட்டைப் பைகளில் கைகளை விட்டபடி ராமகிருஷ்ணன் கப்சிப்பென்று சப்தமில்லாமல் நின்றான். உள்ளுக்குள் அவனுக்குக் கொஞ்சம் பயமாகவும் இருந்தது. பயம் இல்லாதது போலவும் இருந்தது. ஜமுனாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"உன்கிட்ட அன்னைக்கே நான் என்ன சொல்லியிருக்கேன்?" ரொம்பவும் அதிகாரத்துடன் கேட்டாள்.

ராமகிருஷ்ணன் மிகவும் அடக்கமாகத் திருப்பிக் கேட்டான்: "என்ன சொன்னே?"

"என்ன சொன்னேனா: மறந்து போச்சா அதுக்குள்ளே. அந்தக் கமலுப் பிசாசுகூட விளையாடாதேன்னு அன்னிக்கே நான் சொன்னேனா இல்லையா?"

—ஜமுனா இப்படிக் கேட்டதும் ராமகிருஷ்ணனுக்கே அவன்மேல் ரொம்பவும் பரிதாபமாக இருந்தது. சே! எப்படிப் போய் அவளிடம் மாட்டிக் கொண்டான். இனி



என்ன செய்ய முடியும். ஷர்ட்டின் காலரை வாயில் வைத்துக் கடித்தபடி கூண்டு இல்லாத குற்றவாளியாக நின்றான்!

"உனக்கு அறிவே கெடையாதாடா! திருப்பித் திருப்பிச் சொல்லணுமா உனக்கு— அந்தக் கழுதைகூட விளையாடாதேன்னு..."

"ஏன் விளையாடின்னா என்ன?" — ராமகிருஷ்ணன் கொஞ்சம் சீண்டினான்!

"விளையாடாதேன்னா விளையாடாதே! அவ்வளவுதான் சொல்வேன். அப்புறம் உன் இஷ்டம்!"

அவனுடைய இஷ்டம் என்று ஜமுனா சொல்லிவிட்ட பின்புகூட ராமகிருஷ்ணனுக்குத் தனது இஷ்டம் எதுவென்று கண்டு கொள்ள முடியாது. தலையைச் சொறிவான். கழுத்தைச் சொறிவான். கையைச் சொறிவான்...

"ஏன் நிறுத்திட்ட. கொஞ்சம் காலையும் சொறி!" —என்ன கேலி அந்தச் சின்னப் பெண்ணுக்குத் தான்!

"கடைசியா சொல்றேன். அந்த எலி வால் ஜடைக்காரிக்கிட்டே பேசாதேன்னா பேசாதே..."

ராமகிருஷ்ணனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாது குழம்பிப் போய் நிற்பான்.

"அவகூடப் பேசறதா இருந்தா என்கூடப்பேசாதே...!"

இன்னும் அவன் தயங்கிக் கொண்டே இருப்பான்.

"தயவுப் பண்ணி சொல்லிடுப்பா! உனக்கு அந்த ஆந்தைக் கண்காரிகூட விளையாடணுமா, இல்லே என் கூட விளையாடணுமா— சீக்கிரமா சொல்லு. எனக்கு வேலை இருக்கு!"

அந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே ஒரு பெண்ணுக்கே உரிய அத்தனை தனிமங்களும் ஜமுனாவில் செயல்பட்டிருந்தது அதிசயமில்லை. ஆனால், அவ்வயதிலேயே ஒரு பெண்ணின் உள்மனத்தைக் காணக்கூடிய ஆண்மையின் விழிப்பு ராமகிருஷ்ணனில் அரும்பி இருந்ததுதான்

ஆச்சரியம். அவளோடு மட்டும்தான் அவன் விளையாட வேண்டுமென்று விரும்புகிறாள் ஜமுனா. இது பெண்மையின் நியாயம்தானே!

''என்னடா சொல்றே... சொல்லு சீக்கிரம்...?''

''இனிமே உன்கூடவே விளையாடறேன்.''

''அப்படி வா வழிக்கு. நான் இங்க இவருக்காகப் புட்டை வச்சிக்கிட்டு 'வருவாரு வருவாரு'ன்னு காத்துச் கிட்டிருந்தா இவரு பெரிய கமலுகூட விளையாடப் போயிட்டாராம்... கமலு கூட!''

''சரி, எனக்குப் புட்டு எடுத்து வச்சிருக்கியா, இல்லையா?''

''பாவம்னு ஒண்ணே ஒண்ணு எடுத்து வச்சிருக்கேன், வா...!''

அந்த நிமிஷம்— ஜமுனாவுக்கு மேல்; அவள் கொடுத்த அந்த ஒரே ஒரு புட்டுக்கு மேல் பெரிய விஷயம் ராமகிருஷ்ண னுக்கு எதுவுமே இல்லை. அப்போதைய அவனுடைய உலகமே அந்த இனிப்பான புட்டும் அதைக் கொடுத்த இனிமையான ஜமுனாவும் தான்.

ஒரு நாள்...

அப்போது ராமகிருஷ்ணனுக்கு வயது பதிமூன்று இருக்க லாம். இரவு மணி எட்டாகி இருந்தது. படிப்பதாகச் சொல்லிக் கொண்டு புத்தகத்தைக் கையில் வைத்தபடி எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தான். பாட்டி வீட்டுக்குப் போய் வந்திருந்த அவனுடைய அம்மா, அவனின் அப்பாவிடம் ஜமுனா பற்றி என்னமோ சந்தோஷ மாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

வேகமாக எழுந்து போய்க் கேட்டான். ''ஜமுனாவுக்கு என்ன?''

''ஜமுனாவுக்கு ஒண்ணுமில்ல. நீ போய் உன் பாடத் தைப் படி...''



—அம்மாவின் அலட்சியமான பதிலைக் கேட்டதும் ராமகிருஷ்ணனுக்கு எரிச்சலாக இருந்தது. சிறிது ஆச்சரிய மாகவும் இருந்தது. ஜமுனா பற்றிய சிறு விஷயமாக இருந் தால்கூட அவனிடம் சொல்லி விடுவார்கள். இன்றைக்கு அவனிடமே மறைக்கிறார்களே!

ராமகிருஷ்ணன் 'என்னவோ விஷயம்' ஜமுனா பற்றி இருப்பதாகப் புரிந்து கொண்டான். அம்மாவிடம் நேரடி யாகக் கேட்டால் விஷயம் வெளிவராது என்றும் உணர்ந்து கொண்டான் கொஞ்சங்கூடக் கண்டு கொள்ளாதவன் போல் இருந்து கொண்டே விஷயத்தைக் கண்டு கொள்ள வேண்டுமென்று கணக்கிட்டுக் கொண்டான். அதனால் அலட்டிக் கொள்ளாமல் மறுபடியும் புத்தகத்தில் ஆழ்ந்து விட்ட பாவனையில் கூர்மையாக உட்கார்ந்திருந்தான்.

ஆனால், அவன் அத்தனை கூர்மையாக பாவனை காட்டிக் கொண்டிருக்கத் தேவையற்றுப் போய்விட்டது. ராமகிருஷ்ணனின் அம்மா அடுத்த வீட்டில் இருந்த அவர் களின் உறவுப் பெண்மணியிடம் 'ஜமுனா பெரிய பெண் ணாகி விட்டாள்' என பலத்த குரலில் ஜன்னல் வழியாகச் சொல்லிக் கொண்டிருந்தது அவனுடைய எலிக் காதுகளில் சுத்தமாகக் கேட்டது!

உடனே ராமகிருஷ்ணன் உஷாராகி விட்டான்! அம்மா தொடர்ந்து ஜன்னல் வழியாக என்ன பேசுகிறார்கள் என்றறிய காதுகளைத் தீட்டியபடி உட்கார்ந்திருந்தான். ஆனால், அவனுடைய அம்மா அவனைக் காட்டிலும் பெண்மணி உஷார். தொடர்ந்து அவர்கள் அடுத்த வீட்டுப் ராமகிருஷ்ணனின் யிடம் பேசியதில் ஒரு வார்த்தை கூட காதுகளில் விழவில்லை.

புத்தகத்தை மூடி வைத்துவிட்டான். திடீரென்று அவனைச் சுற்றி ஏதோ மர்மம் கவியத் துவங்கிவிட்டாற் போலிருந்தது. எழுந்து போய் நான்கு டம்ளர் தண்ணீர் குடித்துவிட்டு வந்தான். முற்றத்தில் நின்று யோசித்தான். அதென்ன அது? ஜமுனா பெரிய பெண்ணாகி விட்டா

ளாமே அப்படியென்றால்? ராமகிருஷ்ணனுக்கு அவ்விஷயத்தை யோசிக்கத் தெரியவில்லை. மொட்டை மாடியில் போய்ப் பிடரியில் கைகளைக் கோர்த்தபடி நின்றான். வானம் இருட்டாக இருந்தது போல, ஜமுனா பெரிய பெண்ணாகி விட்ட விஷயமும் இருட்டாகவே இருந்தது.

ராமகிருஷ்ணன் நகம் கடித்தான். ஜமுனா பெரிய பெண்ணாகி விட்டாள் என்ற செய்தி காதில் விழுந்தபோது முதலில் ஒரு சன்னமான ஆச்சரிய உணர்வு அவனில் எழும்பியதே— அந்த உணர்வு துளித் துளியாக வடிந்து விட்டது. இதற்கு முன்புகூட எத்தனையோ உறவுக்காரப் பெண்கள் பெரிய மனுஷியாகி இருக்கிற செய்திகளை அவன் கேட்டதுண்டு. ஆனால், அச்செய்திகள் அவன் மனத்தை வருடியதில்லை. ஆனால், ஜமுனா பெரியவளாகிவிட்டாளென்ற இந்த செய்தி மட்டும் என்னவோ செய்தது. புரிந்து கொள்ள இயலாத திகைப்பை ஏற்படுத்தியது.

உண்மையில் என்ன அது? — அதுதான், ஒரு பெண் பெரியவளாக ஆவது என்ற விஷயம்:

எப்படியெல்லாம் யோசனை செய்து பார்த்தும் அந்தக் கேள்விக்கான பதிலை ராமகிருஷ்ணனால் கண்டுபிடிக்க முடியவில்லை. பள்ளிக்கூடத்தில் சில பையன்களுடன் அது என்ன என்பது பற்றிப் பெரிய பெரிய சர்ச்சையெல்லாம் செய்து பார்த்தும்கூட அந்த மர்மத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனாலும் அடிப்படையில் அந்த மர்மம் என்னவென்று தெரியாவிட்டாலும் கூட வேறு சில வெளிப்படையான சமாசாரங்கள் மட்டும் அப்போதைய அறிவிலேயே அறிமுகமாகி இருந்தன. பெரிய மனுஷியாகிற விஷயம் ஒரு பெண்ணை ஆணிடமிருந்து சிறிது தனிமைப் படுத்துகிறது என்பதை ராமகிருஷ்ணன் புரிந்து கொண்டிருந்தான். அதனால்தான் மனசில் திடுமெனத் தனிமை உணர்வு கவிந்துவிட்டது.

'ஜமுனா பெரிய மனுஷியாகி விட்டாள். ஆனால், நான் இன்னும் பெரிய மனுஷன் ஆகவில்லையே! இப்படிக் குள்ள



மாக அரை டிராயர் போட்டுக் கொண்டுதானே நிற்கிறேன்.'

இப்படியே ராமகிருஷ்ணன் திரும்பத் திரும்ப எண்ணியபடி நின்று கொண்டிருந்தான். இனிமேல் ஜமுனா தன்னோடு பேசுவாளோ மாட்டாளோ என்ற பயம் வேறு வந்தது. 'சே! என்ன அநியாயம் இது...! சாயந்திரம் ஆறு மணிவரை அவளோடு விளையாடிவிட்டு வந்திருக்கிறேன். அதற்குள் பெரிய மனுஷியாகி விட்டாள்...!''

நினைக்க நினைக்க இரவு அவனுக்குத் தூக்கம்கூட வரவில்லை.

மறுநாள் மாலை— என்றும் போகிற வழக்கப்படி ராமகிருஷ்ணன் ஜமுனாவைப் பார்க்க பாட்டி வீட்டுக்குப் போகவில்லை. எப்படிப் போவான்! தனியாகப் பள்ளிக்கூட மைதானத்தில் நின்று கொண்டிருந்தான்.

அப்போது அவனின் உறவுக்காரப் பையன் கணேசன் வந்தான். இருவருக்கும் எப்போதுமே ஒத்துக் கொள்ளாது. அதனால் ராமகிருஷ்ணன் அவனைக் கண்டு கொள்ளாமல் அலட்சியமாக நின்றான்.

கணேசன் கேட்டான் : ''ஜமுனா பெரியவளாகி விட்டாளாம்டா, தெரியுமா உனக்கு?''

அவனுக்குப் பதில் சொல்ல ராமகிருஷ்ணனுக்கு வெறுப்பாக இருந்தது. அவனே பெரிய எரிச்சலுடன் நின்று கொண்டிருக்கிறான் இவன் வேற...?

கசப்புடன் பதில் சொன்னான் : ''தெரியாதே!'!

''ஏய், பொய் சொல்லாத. உனக்குத் தெரியுமா அது ..''

ராமகிருஷ்ணனுக்குக் கோபம் வந்துவிட்டது. ''எனக்குத் தெரிஞ்சா தெரியாட்டா உனக்கென்னடா?'' - கேட்டபடியே கணேசனை முறைத்தான்.

''கேட்டா அதுக்கு ஏன்டா முறைக்கிறே?''— கணேசனும் அவனை முறைத்தான்.

சிறிது நேரத்துக்கு இருவருமே ஒருவரையொருவர் முறைத்தபடி நின்றார்கள்.

''இனிமே உன்கூடல்லாம் ஜமுனா விளையாட மாட்டா. தெரிஞ்சிக்க!''— சொல்லிவிட்டு கணேசன் வேகமாக ஓடி விட்டான். நின்றால் ஆபத்தாயிற்றே...!

ராமகிருஷ்ணனுக்கு இன்னும் பயம் அதிகமாகி விட்டது. என்னதான் மனத்தைச் சமாதானம் செய்து கொண்டாலும் கூட கணேசன் சொன்ன மாதிரி ஜமுனா இனி தன்னுடன் விளையாட மாட்டாளோ என்ற அந்தப் பயம் அவனுடைய மனத்தில் ஒரு சிறிய சிம்னீ விளக்கின் சுடர்போல மெலிதாக எரிந்து கொண்டே இருந்தது.

ராமகிருஷ்ணன் ஜமுனாவின் வீட்டுப் பக்கம் ஒரு வாரமாகத் தலை வைத்துக்கூடப் படுக்கவில்லை. ஆனால், பாவம் மனசு மட்டும் அந்தத் திசையிலேயே நினைவு கொண்டிருந்தது.

சில தினங்கள் சென்றன. ராமகிருஷ்ணனின் வீட்டுக்கு ஜமுனாவின் பெரிய அண்ணாவும் அண்ணியும் வந்தார்கள். ஜமுனா பெரிய மனுஷியாகிவிட்ட மங்கள நிகழ்ச்சிக்கான வைபவத்திலும் விருந்திலும் கலந்து கொள்ள அழைத்து அழைப்பிதழும் கொடுத்து விட்டுப் போனார்கள்.

பெரிய கல்யாண அழைப்பிதழ் போலிருந்த அதைக் கையில் எடுத்துப் பார்த்தான் ராமகிருஷ்ணன். யாரோ காணாமல்போன விளம்பரத்தைப் பார்ப்பது போலிருந்தது அவனுக்கு! பெரிய புனித நீராட்டு விழா அவனுக்குப் பொறாமையாக இருந்தது. அந்த விருந்துக்குப் போகக் கூடாது என்று நினைத்தான். ஆனால் விருந்துக்குப் போனால் ஜமுனாவைப் பார்க்கலாமே என்ற ஆசையும் வந்தது. அதே சமயத்தில் பெரிய பெண்ணாகி விட்ட ஜமுனாவின் எதிரில் போய் நிற்க சங்கோஜமாகவும் இருந்தது. ராமகிருஷ்ணன் தயங்கிக் கொண்டே இருந்தான்.



வைபவ நாளும் வந்தது. இன்று பெய்த மழை நீர் மறு நாள் காய்ந்து போவது போல அவனுடைய மனத்தில் தேங்கிக் கிடந்த தயக்கமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் வறண்டு விட்டது. அம்மா அப்பாவோடு முதல் ஆளாகக் கிளம்பி விட்டான்.

வருஷம் பூராவும் போகும் பாட்டி வீடுதான். அன்றைக்கு என்னவோ அந்தப் பாட்டியின் வீடு ஏதோ மாயா பஜார் போலத்தான் இருந்தது. ராமகிருஷ்ணன் வீட்டுக்குள் போகவில்லை. ஆண்கள் எல்லோரும் வெளி வராந்தாவிலேயே உட்கார்ந்திருந்தார்கள். ராமகிருஷ்ணனும் வராந்தாவிலேயே நின்று கொண்டான். திருவிழா கூட்டத்தில் காணாமல் போய்த் தனியாக நிற்பது போலிருந்தது அவனுக்கு.

ராமகிருஷ்ணன் வராந்தாவின் மூலையில் இருந்த ஜன்னலை நோக்கி ஷர்ட்டின் காலரைக் கடித்தபடியே நகர்ந்தான். அதிசயத்தைப் பார்ப்பது போல ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தான்,

அகலமாக விரித்திருந்த புத்தம் புதிய ஜமுக்காளத்தில் பெண்களும் குழந்தைகளும் சூழ்ந்திருக்க, ஒரு கல்யாணப் பெண் மாதிரியே ஜமுனா உட்கார்ந்திருந்தாள். குழந்தைகளுடன் தணிந்த குரலில் என்னவோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள். ஜமுனாவைப் பார்த்துப் பிரமித்து விட்டான் ராமகிருஷ்ணன். நிஜமாகவே ஜமுனா பெரிய மனுஷி போலத்தான் இருந்தாள்.

கத்திரிப்பூ வண்ணத்தில் அழகான பட்டுப் புடவை கட்டியிருந்தாள். காதுகளில் பெரிய பெரிய ஜிமிக்கிகள். தலையில் பெரிய நிலா அளவுக்கு மல்லிகைப் பூ. கண்களில் அழகாக மை...

பார்க்கப் பார்க்க ராமகிருஷ்ணனுக்குத் தாங்கவில்லை. ஓடிப்போய் அவளின் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ள வேண்டும் போலிருந்தது. தன்னை ஒரு தடவையாவது திரும்பிப் பார்க்க மாட்டாளா என்று இருந்தது. ஜன்னல்

வழியாகப் பார்த்துக் கொண்டே இருந்தான். எதிர் பாராமல் அவளின் பார்வை ஜன்னல் பக்கம் திரும்பியது. ஆனால், யாரோ பரிச்சயமே இல்லாத ஒருவனைப் பார்த்த வெறுமையான பாவனையில் அவளின் பார்வை கடந்து விட்டது. ராமகிருஷ்ணனைக் கண்ட அழகான எதிர் விளைவு ஜமுனாவின் கண்களில் கடுகளவுகூடப் பிரதிபலிக்க வில்லை.

ராமகிருஷ்ணனின் மனம் அறையப் பட்டுவிட்டது. வெகு தூரத்துக்குத் தூக்கிஎறியப்பட்டு விட்டது.

அந்த ஜன்னலின் கீழேயே சரிந்து உட்கார்ந்து விட்டான். மிகுந்த விசனத்துடன் விருந்துச் சாப்பாட்டில் கை நனைத்துவிட்டு வந்தவன் தான்— அப்புறம் ராமகிருஷ்ணன் அந்தப் பாட்டி வீட்டுப் பக்கம் போகவே இல்லை.

அந்த ஜமுனாதான் பார்வையாலேயே அவனைத் தவிர்த்து விட்டாளே! பெரிய மனுஷியாக வேறு ஆகி விட்டாளே! தன்னை எல்லாம் பார்ப்பாளா, தன்னோ டெல்லாம் பேசுவாளா என்றெல்லாம் ராமகிருஷ்ணன் மனத்துக்குள்ளேயே குமைந்து கொண்டிருந்தான். ஊருக்கு வெளியில் இருந்த புளிய மரங்களில் ஏறி அமர்ந்தபடி புளியங்காய்களைப் பறித்துப் பறித்து வீணாக எறிந்து கொண்டிருந்தான்.

இப்படியே பதினைந்து நாட்களுக்கு மேல் சென்று விட்டன.

ஒருநாள் ஜமுனா வீட்டில் வேலை பார்க்கும் பெண், ராமகிருஷ்ணனின் வீட்டுக்கு வந்தாள்.

''கிருஷ்ணனை ஜமுனா கூட்டியாரச் சொல்லுச்சி'' என்றாள்.

அவ்வளவுதான். தண்ணீருக்குள் முழுக வைக்கப்பட் டிருந்த காற்று நிரம்பிய பலூன் தளைகள் நீங்கிப் பளிச் சென நீர் மட்டத்தில் மிதந்தாற் போன்ற உணர்வில், ராம



கிருஷ்ணன் அமிழ்ந்து கிடந்த ஏதோ ஒன்றிலிருந்து விடு பட்டு மிதந்தான்.

''சரி சரி, நீ போ. அஞ்சு நிமிஷத்துல வர்றேன்.''

சுறுசுறுப்புடன் மொட்டை மாடிக்கு ஓடினான். பரவசம் தாங்காமல் தலைகீழாக நடந்தான். அவனின் எல்லா உணர்வுகளும் துரிதமாக இயங்கின. ஆடையை மாற்றிக் கொண்டு கண்ணாடியில் ஒரு நிமிஷம் முகத்தைப் பார்த்துவிட்டு எடுத்தான் ஓட்டம், பாட்டியின் வீட்டை நோக்கி!

வீட்டின் பின்புறத் தோட்டத்தில் ஒரு சிறிய ஸ்டூலில் ஏறி நின்றபடி பப்பாளி மரங்களில் உலர்ந்திருந்த இலை களைக் கத்தியால் நறுக்கி அப்புறப்படுத்திக் கொண்டிருந் தாள் ஜமுனா.

ராமகிருஷ்ணன் வந்ததை அவள் கவனிக்கவில்லை. அருகில் போகாமல் தூரத்தில் நின்றபடியே அவளைப் பார்த்தான். மழை பெய்யும் சமயங்களில் கண்ணாடி ஜன்னல்களில் ஒரு நுண்ணிய படிமம் படியுமே, அது மாதிரி ஜமுனாவின் முகத்தில் ஏதோவொரு அழகு மிக மெலிதாக நைலான் நெரிசலாகப் படிந்திருந்தது.

உலர்ந்து போயிருந்த உதடுகளை லேசாக எச்சில் படுத்திக் கொண்டு கூப்பிட்டான்: ''ஜமுனா?''

ஜமுனா உடனே திரும்பிப் பார்த்தாள். ராமகிருஷ்ண னின் பார்வையில் இருந்த மயக்கமும் உணர்வு மூட்டமும் அவளின் பார்வையில் இல்லை.

''என்னடா கிருஷ்ணா, ரொம்ப நாளா உன்னை ஆளையே காணோம்...?''— அவள் மிகமிகச் சாதாரண மாகத்தான் கேட்டாள். அவனுக்குத்தான் பதில் சொல்ல வெட்கமாக இருந்தது.

''உன்னைத் தான் கேக்கறேன். எங்கே போனே இத் தனை நாளா?''

"சும்மா ஸ்கூல் க்ரவுண்ட்ல பால் விளையாடப் போயிட்டேன்..."

"நல்லதா பப்பாளிப் பழம் பறிச்சுத் தரேன். திங்கறியா?"

"பழமா இருக்கா, எல்லாம் காயா தெரியுதே?"

"கடைசி மரத்துல ஒண்ணே ஒண்ணு நல்லா பழுத்திருக்கு. வா, பறிச்சுத் தரேன்."

அது மிகவும் சிறிய பழம். முழுவதையும் அவனையே சாப்பிடச் சொல்லிக் கொடுத்து விட்டாள். ராமகிருஷ்ணன் ஆசையுடன் வாங்கிக் கொண்டான்,

"உனக்குக் கொஞ்சம் வேணுமா?"

"இல்லை, நீயே சாப்பிடு."

முழுப் பழத்தையும் தானே சாப்பிட்டது ராமகிருஷ்ணனுக்கு என்னவோ போலிருந்தது.

திடீரென்று ஜமுனா கேட்டாள் : "ஆமா, அன்னிக்கு ராத்திரி விருந்துக்கு நீ வந்தியா?"

இப்படி அவள் கேட்டதும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அன்றைக்கு அவன் ஜன்னலின் பக்கத்தில் நின்று கொண்டிருந்ததை ஜமுனா பார்க்கவில்லையா? நிஜம் தானா? ஒரு நிமிஷம் ராமகிருஷ்ணன் தன்னைக் கண்ணாடித் தொட்டிக்குள் நீந்திப் போகும் தங்க மீன் போல உணர்ந்தான்.

"நான் கேக்கறேன் ஒண்ணுமே பதில் சொல்லாம நிக்கறே?"

ராமகிருஷ்ணன் ஒன்றுமே தெரியாதவன் போலக் கேட்டான் : "என்னிக்கு ராத்திரி? என்ன விருந்து?"

—சட்டென ஜமுனாவின் கண்கள் தாழ்ந்து கொண்டன. அவளின் முகம் சிறிது பிரகாசமாகியது. அழகான நாணம் அவளுடைய முகத்தைக் கடந்து சென்றது.



"சரி. உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சேன்னு தான் கூட்டிட்டு வரச் சொன்னேன். நீ போ கிருஷ்ணா, நான் தையல் கிளாஸுக்குப் போகணும்..." என்றாள்.

ராமகிருஷ்ணனுக்குக் கொஞ்சம் ரோசம் வந்துவிட்டது. அழைத்து வரச் சொல்லிவிட்டு, பத்தே நிமிஷத்தில் போ என்று சொல்கிறாளே என்ற எரிச்சல் ஏற்பட்டது. இனி இவள் கூப்பிட்டனுப்பினாலும் வரக்கூடாதென்று ஆத்திரத்துடன் வேகமாகக் கிளம்பி வாசல்வரை வந்துவிட்டான்.

ஜமுனா வேகமாக ஓடி வந்தாள் : "கிருஷ்ணா கிருஷ்ணா... கொஞ்சம் நில்லேன்..."

ராமகிருஷ்ணன், ஏர்-ப்ரேக்' போட்டவனாக, பாதங்கள் தேய நின்று விட்டான்.

ஜமுனா மிகவும் தணிந்த குரலில் சொன்னாள் : "வர ஞாயிற்றுக்கிழமை எனக்குச் கொஞ்சம் புளியம்பழம் பறிச்சுத் தாயேன்."

ராமகிருஷ்ணனின் முகத்தில் கோபம் இருந்த சுவடையே காணோம். "கொஞ்சமா ஒரு மூட்டை வேணும்னாலும் பறிச்சுட்டு வந்து தரேன்" என்றான்.

அந்த ஞாயிற்றுக்கிழமை ஐந்து பையன்களை அழைத்துக் கொண்டு போய் நிஜமாகவே ஒரு மூட்டை புளியம்பழம் பறித்து வந்து கொட்டிவிட்டான்!

இந்த முறை பாட்டி ஜமுனாவை உதைக்கவில்லை. ராமகிருஷ்ணனைத்தான் உதைத்தாள்.

"இனிமே அவ கேட்டான்னா பறிச்சாந்து இங்க கொண்டு வந்து போடு— உன் முதுகுத் தோலை உரிக்கிறேன்" என்று திட்டி அவனை விரட்டி விரட்டி உதைத்தாள்.

அதனாலென்ன? பாட்டிதானே...!

—இதைத் தொடர்ந்து ஜமுனாவின் தோற்றத்தில் மிக வேகமாக மாற்றங்கள் ஏற்படலாயின. ராமகிருஷ்ணனை

விட வளர்ந்து விட்டாள். ஆனால், அவன் மட்டும் அப்படியே அரை டிராயர் போட்டுக் கொண்டு சிறு பையன் போலவே இருந்தான். அதே மாதிரி அவனின் விளையாட்டுக் குணங்களிலும் எந்த மாற்றமும் இல்லை. மரங்களில் ஏறுவது காற்றாடி விடுவது... எல்லாம் அதேதான்!

ஜமுனாதான் முற்றிலுமாக மாறிவிட்டிருந்தாள். காற்றாடி விடக் கூப்பிட்டால் எனக்கு வேறு வேலை இல்லையா என்று கேட்டாள். காற்றாடி விடுவதைத் தவிர வேறு என்ன பெரிய வேலை இருக்கிறதென்று யோசித்தான் ராமகிருஷ்ணன். ஆனால் ஜமுனாவுக்கு அதைவிடப் பெரிய வேலைகள் நிறைய இருந்தன.

ஓயாமல் அவளுக்கு வாரப் பத்திரிகைகள் படிக்க வேண்டியிருந்தது. அவற்றில் ஒரு கதை விடாமல் படிக்க வேண்டியிருந்தது. அடிக்கடி ஜன்னல் வழியாக, தெருவில் போவோர் வருவோரை பார்க்க வேண்டியிருந்தது. இந்த ஒன்றுதான் ராமகிருஷ்ணனுக்கு ஜமுனாவிடம் பிடிக்க வில்லை! சதா தெருவை என்ன பார்ப்பது என்று அவளை ஒருநாள் கேட்டு விடலாமா என்றுகூட நினைத்தான்! ஆனாலும் கேட்கவில்லை. இப்போது கேட்க முடியாதே. ஜமுனா தாவணி போட்டு விட்டாளே! அவன் இன்னும் அரை டிராயர்தானே! பெரியவனாகி வளர்ந்த அப்புறம் தானே இருக்கிறது விஷயம்... அதுவரை பொறுமையாக இருக்க வேண்டியதுதான்— ராமகிருஷ்ணன் பொறுமையாக இருந்தான்.

ஆனால், காலம் ராமகிருஷ்ணனின் பொறுமையைச் சோதித்தது. அப்படியும் இப்படியுமாக வயது அவனுக்குப் பதினாறு ஆகிவிட்டது. ஆனால், ஆள்தான் வளரவில்லை. ஜமுனா நேர் எதிர் குதிரை மாதிரி வளர்ந்து விட்டாள். தாவணி போய் புடவை வந்துவிட்டது. ராமகிருஷ்ணனை அவள் கண்டு கொள்வதே இல்லை.

''இன்னிக்கு நாம ரெண்டு பேரும் சேர்ந்து படிக்கலாமா ஜமுனா?''— ஆசையுடன் கேட்டுப் பார்ப்பான்.



''போதும் போதும் சேர்ந்து படிச்சது!''— சட்டென மறுத்து விடுவாள்.

ராமகிருஷ்ணன் என்றால் அத்தனை அலட்சியம். இத்தனைக்கும் அவனும் அவள் மாதிரியே எஸ்.எஸ்.எல்.ஸி. தான் படித்துக் கொண்டிருந்தான். ஆனால், அவனின் அந்தப் படிப்புக்கேற்ற மரியாதையைக்கூட ஜமுனா ராமகிருஷ்ணனுக்குத் தரவில்லை! என்னமோ அவன் முதலாம் வகுப்புப் படிக்கிறவன் போலத்தான் பார்த்தாள்.

இதற்கு என்ன செய்யலாமென்று ராமகிருஷ்ணன் மிகவும் வருத்தத்துடன் யோசித்தான். ஏதாவது செய்தே ஆகவேண்டுமென்றும் முடிவு செய்தான்.

ராமகிருஷ்ணனின் எண்ணத்தில் எஸ். எஸ். எல். ஸி தேர்வு திடீரெனக் கண்கண்ட கடவுளாகத் தரிசனம் தந்தது. நெருங்கி கொண்டிருக்கும் அந்தத் தேர்வில் தன்னுடைய சூரத்தனம் முழுவதையும் காட்டினால் என்ன வென்ற புதிய எண்ணம் அவனின் மனத்தில் மிக உயரத்துப் பருந்து போல வட்டமடித்தது. ஜமுனாவைவிட வளர்வது அவனுடைய கையில் இல்லை. அது கடவுளுடைய கையில்! ஆனால், தேர்வில் ஜமுனாவைவிட அதிக மதிப்பெண்கள் வாங்குவது அவனுடைய கையில் தானே இருந்தது. ஒரே ஒரு மதிப்பெண் அவளைவிட அதிகம் வாங்கிவிட்டால்கூடப் போதும், 'ஜமுனா அம்பேல்...!'

இரண்டு மாதம் வீட்டு வாசலைவிட்டு இறங்காமல் எல்லா பாடங்களையும் கண்ணை மூடிக்கொண்டு ஒரு வரி பாக்கிவிடாமல் மனப்பாடம் செய்துவிடுவதென்று ராமகிருஷ்ணன் முடிவு செய்துவிட்டான். ஆனால், தான் அப்படித் தீவிரமாக மனப்பாடம் செய்து கொண்டிருக்கிற விஷயம் மட்டும் ஜமுனாவுக்குத் தெரியக் கூடாதென்று நினைத்தான்.

''அம்மா, நீங்க என்னிக்குப் பாட்டி வீட்டுக்குப் போவீங்க?''— அம்மாவைக் கேட்டான்.

''என்னடாப்பா சங்கதி?''

PUBLIC
4 - FEB

''எனக்கு எக்ஸாம் வருது.''

''அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே?''

''ரொம்ப சீரியஸா படிக்கப் போறேன்.''

''பரவாயில்லை. நல்ல புத்தி வந்திருக்கு...''

''நெஜமாவே விழுந்து விழுந்து படிக்கப் போறேன்.''

''நல்லா படிப்பா. நானா வேண்டாம்னு சொல்றேன்...''

''ஆனா நான் இப்படி விழுந்து விழுந்து படிக்கிறதை மட்டும் ஒங்க சித்தி மக ஜமுனாகிட்டே சொல்லிடவே கூடாது.''

ராமகிருஷ்ணனின் அம்மாவுக்குப் புரிந்தது. ''ஆனா அவ கேப்பாளே?''

''அவன் படிக்காம ஊரைச் சுத்திக்கிட்டு இருக்கான்னு சொல்லிடுங்க. நீங்க சொன்னா ஜமுனா நம்பிடுவா! அவளைவிட நான் ரொம்ப ரொம்பக் கம்மியா மார்க் வாங்குவேன்னு கேர்லெஸ்ஸா படிப்பா. ஈஸியா நான் அவளை பீட் பண்ணிடுவேன்...!''

ராமகிருஷ்ணனின் அம்மா அவனுடைய 'டைரக்ஷனில்' அவன் சொல்லிக் கொடுத்த மாதிரியே ஜமுனாவிடம் ஆக்ட் பண்ணிவிட்டாள். நிஜமாகவே அவன் ஊரைச் சுற்றிக் கொண்டிருப்பதாகத்தான் ஜமுனா நினைத்து ஜாலியாக இருப்பதாக ராமகிருஷ்ணனுக்கு ரகசியச் செய்திகூட வந்தது! அதனால் அவன் இன்னும் படு உஷாராகி விட்டான்.

தேர்வும் வந்தது. ஒரு நாள் ரிஸல்ட்டும் வந்தது. ஜமுனா 500-க்கு 410 வாங்கி இருப்பதாகச் செய்தி வந்து விட்டது. ராமகிருஷ்ணன் கைகள் நடுங்க தனது சான்றிதழ் புத்தகத்தைப் பிரித்தான். 446. சந்தோஷத்தைத் தாங்க முடியுமா அவனால்? உற்சாகத்தைக் கட்டுப்படுத்த இயலுமா அவனால்? வானத்துக்கும் பூமிக்குமாகக் குதித்தான். கிணற்றில் குதித்து ஆனந்த நீச்சல் அடித்தான்.



தனது சான்றிதழை எடுத்துக் கொண்டு ஜமுனாவைப் பார்க்கத் தன் மானசீக விமானத்தில் படுவேகமாகப் பறந்தான்.

பெரிய மனுஷி ரொம்ப அலட்சியமாகத்தான் கேட்டாள் : ''என்ன கிருஷ்ணா, எப்படியோ பாஸாயிட்டே! எவ்வளவு மார்க் வாங்கியிருக்கே?''

''நீ எத்தனை மார்க்?''- தெரியாதது போலக் கேட்டான்.

''410... நீ...?''

''நம்மால் உன்கிட்டக்கூட வரமுடியாது. 250 தான் வாங்கியிருக்கேன்!''

ஜமுனாவுக்கு ரொம்ப திருப்தி, பரம சந்தோஷம்.

''சும்மா விளையாடிக்கிட்டிருந்தா அவ்வளவுதான் கெடைக்கும்! எங்கே, காட்டு...''

ராமகிருஷ்ணன் சான்றிதழை அலட்சியமாக நீட்டினான். ஜமுனாவும் அதே அலட்சியத்தோடு வாங்கினாள். சிரித்துக் கொண்டே புத்தகத்தைப் பிரித்தாள். சில விநாடிகள் அவளின் முகம் விசித்திரமாகக் குழம்பியது. மறு நிமிஷம் குப்பென்று முகம் சிவந்தது. அவ்வளவுதான். சான்றுப் புத்தகத்தைத் தூக்கி எறிந்துவிட்டுக் கொல்லைப் புறத்துக்கு ஓடிப்போய் துவைக்கும் கல்லில் உட்கார்ந்து 'ஓ'வென்று அழத் தொடங்கி விட்டாள்.

ராமகிருஷ்ணனுக்கு முதலில் அவளின் அழுகையைப் பார்க்க சந்தோஷமாகத்தான் இருந்தது. மிகப் பெரிய கர்வ பங்கம்தானே! காண்பதற்குத் திருப்தியாகத்தான் இருந்தது. ஆனால் இந்த சந்தோஷமும் திருப்தியும் சில நிமிஷங்களுக்குத்தான். அப்புறம் ஜமுனாவின் அடங்காத அழுகையைப் பார்க்கப் பார்க்க அதெல்லாம் அவனில் அடங்கி வடிந்து விட்டது. பெரிய சங்கடமாகி விட்டது. எவ்வளவு பெரிய மனுஷி இப்படிச் சின்னப் பொண்ணு மாதிரி அழுகிறாளே என்ற துக்கம் ஏற்பட்டது, உண்மை

யிலேயே ராமகிருஷ்ணனுக்கு ஏண்டா அவளைவிட அதிக மார்க் வாங்கினோம் என்றுதான் ஆகிவிட்டது. பேசாமல் நிஜமாகவே ஊர் சுற்றிக் கொண்டிருந்திருக்கலாம் என்று தோன்றியது.

ராமகிருஷ்ணன் எப்படி எப்படியெல்லாமோ ஜமுனாவைச் சமாதானம் செய்து பார்த்தான்— ஒரு பெரிய மனுஷன் மாதிரி! ஊஹூம். அவள் சமாதானமும் ஆகவில்லை. அழுகையை நிறுத்தவும் இல்லை. அதற்கு மேல் அந்தச் சின்னப் பையனும் என்னதான் பண்ணுவான். அவன் அழுகையை நகம் கடித்தபடி மௌனமாகப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

அந்தச் சமயத்தில் அவர்களுடைய ஊரில் ஆண்களுக்கான கல்லூரி மட்டும்தான் இருந்தது. அதனால் ஜமுனாவை மதுரையில் பெண்கள் கல்லூரி ஒன்றில் சேர்க்க அவளின் அண்ணா ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்.

ராமகிருஷ்ணனும் மதுரையில் ஆண்களுக்கான ஏதாவது ஒரு கல்லூரியில் சேர்ந்து படிக்க விருப்பப்பட்டான். ஆனால், அவனுடைய அப்பா அதற்குச் சம்மதிக்கவில்லை.

''மதுரையில் போய்ப் படிக்கப் போறானாம்— துரை! காசுக்குப் பிடிச்ச கேடான்னு கேக்கறேன். அழகா நம்ம ஊர்லயே தர்மசத்திரம் மாதிரி பெரிசா கட்டிப் போட்டுக் கெடக்கு...''

''ஜமுனா மதுரையில போய்ப் படிக்கப் போறா.''

''அவ கெணத்துல விழுந்தா நீயும்போய் கெணத்துல விழுவியாடா?''

அவனுடைய அப்பா இப்படித்தான் கேட்பார். பதில் சொல்ல முடியாத கேள்வியாகத்தான் கேட்பார். ராமகிருஷ்ணன் கெஞ்சிப் பார்த்தான். அழுது பார்த்தான். அவனின் அப்பா மசியவே இல்லை. துக்கம் தாங்க முடியவில்லை அவனுக்கு. ஜமுனாவிடம் போய் இதைச் சொன்னபோதே கண்ணில் நீர் வந்துவிட்டது.



ஜமுனா என்னவோ யோசித்தாள். ''இரு நான் வந்து உங்க அப்பாகிட்டே பேசறேன்'' என்றாள்

ராமகிருஷ்ணனுக்கு ஒரே ஆச்சரியம்! ஜமுனா போய் என்னதான் பேசினாளோ?

இவனுடைய அப்பா இவனும் மதுரையில் போய்ப் படிக்கச் சம்மதித்து விட்டார்.

''கன்னாபின்னான்னு காசைச் செலவழிக்காம ஒழுங்கா படி. இந்தப் பொண்ணு அவ்வளவு தூரம் வந்து சொன்னதுக்காகத்தான் சம்மதிச்சேன். ஜாக்கிரதை...''

ராமகிருஷ்ணனும் மதுரையில் ஆண்களுக்கான ஒரு கல்லூரியில் சேர்ந்து விட்டான்.

ஜமுனாவை, பெண்கள் கல்லூரியில் சேர்க்க வந்திருந்த ராமகிருஷ்ணனின் மாமா இவனையும் அவனுடைய ஹாஸ்டலுக்கு அழைத்துப் போனார். இவன் ஒரு பதினாலு வயதுப் பையன் போல்தானே இருந்தான். அதனால் எந்த ஆட்சேபணையும் இல்லை.

ராமகிருஷ்ணனின் மாமா அவனை ஹாஸ்டல் வார்டனுக்கு அறிமுகம் செய்தார்.

''இந்தப் பையன் நம்ம ஒண்ணுவிட்ட அக்கா மகனுங்க. வாரா வாரம் சனிக்கிழமை சாயங்காலம் எங்க தங்கச்சி ஜமுனாவை இந்தப் பையன் வந்து வெளியில் எங்கேயாவது அழைச்சிட்டுப் போறதுக்கு நீங்க அனுமதி தரணும்...'' என்று வார்டனிடம் சொன்னார்.

''ஓயெஸ்! நல்லா அழைச்சிட்டுப் போகட்டும், சின்னப் பையன்தானே...!'' என்றார் வார்டன்.

ராமகிருஷ்ணனுக்கு அந்த வார்த்தை கொஞ்சம் சுருக்கென்றிருந்தது. காலேஜில் சேர்ந்துவிட்டான். அவனும் 'சின்னப் பையனாமே...'— இலேசாக உள்ளுக்குள் பொருமினான். சரி, சொன்னால் சொல்லிவிட்டுப் போகட்டும். ஜமுனாவை ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளியில்

அழைத்துச் செல்ல வரம் கொடுத்திருக்கிறார்களே! என்ன வேண்டுமானாலும் சொல்லிவிட்டுப் போகட்டும் என அமைதியாக இருந்து விட்டான்.

ராமகிருஷ்ணன் கல்லூரியில் சேர்ந்ததுமே முதல் முறையாக நிறைய பாண்ட் தைத்துக் கொண்டான். வேறு வேறு வர்ணங்களில் நைலான் பெல்ட். ஹீல் மிக உயரமாக வைத்த காலணிகள். ஏதாவது விசேஷங்களுக்குக் கட்டிக் கொள்வதற்காக பச்சை கலரில் ஒரே ஒரு டை...! அவனுடைய கல்லூரி வாழ்க்கையின் அறியாமை துவங்கியது. அதே நேரத்தில் தான் வளரவே இல்லையோ என்ற தாழ்வு மனப்பான்மையும்— அச்சமயத்தில்தான் ராமகிருஷ்ணனை வாட்டி வதைத்தது.

முதல் நாள் பேராசிரியர் கேட்டார்: "பள்ளிக்குச் செல்ல வேண்டிய சிறுவன் வழி தவறிக் கல்லூரியில் நுழைந்து விட்டானா?"

கேட்டவர் முத்தமிழ்ப் பேராசிரியர் ராமகிருஷ்ணன்! விருட்டென்று எழுந்து தன்னுடைய மதிப்பெண்களை உரத்த குரலில் சொன்னான்.

"நன்று நன்று. மூர்த்தி சிறியது என்றாலும் கீர்த்தி பெரிது அமருங்கள்"— பேராசிரியர் வஞ்சப் புகழ்ச்சியில் பாராட்டினார்! வகுப்பறையே கரகோஷமிட்டது—மகிழ்ச்சியில். ஆனால், ராமகிருஷ்ணனுக்கு மட்டும் உள்ளூர வேதனையாகத்தான் இருந்தது. வேதனையைப் பொறுக்க மாட்டாமல் ஜமுனாவிடம் ஒருநாள் அழுதுவிட்டான்.

"சொன்னா சொல்லிட்டுப் போறாங்க சுரைக்காய்க்கு உப்பு இல்லேன்னு சொல்லிட்டு சும்மா இரு. இதுக்குப் போய் அழுவுறியே..." என்றாள் ஜமுனா.

"நான் இப்படி வளராமலேயே இருக்கேனே—அசிங்கமா இருக்கே பாக்கறதுக்கு!"

"நோ நோ! நீ இப்படி இருக்கறதுதான் எனக்குப் பிடிக்குது தெரியுமா?"



"பொய் சொல்லாதே!"

"ஐயோ! ப்ராமிஸா சொல்றேன் கிருஷ்ணா. குள்ளமா இருக்கறதாலதான் நீ ஜோராயிருக்கே!"

ராமகிருஷ்ணனுக்கு ஜமுனாவின் வார்த்தையில் நம்பிக்கை வரவில்லை. அவன் அழகான பையன் என்பது அவனுக்குத் தெரியும்தான். ஆனால், ஆள் வளரவில்லையே! வளர்ந்தால்தானே இன்னும் அழகாக இருக்கலாம்...!

ஆனால், ராமகிருஷ்ணனின் இந்த வேதனைக்கு அரு மருந்தாக இருந்தது— ஒவ்வொரு வார சனிக்கிழமைதான். ஒவ்வொரு சனிக்கிழமையையும் மாலை ஜமுனாவை வெளியில் எங்கேயாவது அழைத்துப் போகிற வரம் கிடைத் திருந்ததே! அதனால் சனிக்கிழமை எப்போதுடா வருமென்று இருக்கும்... பிற்பகல் மூன்று மணி ஆனதுமே அருமையான உடையணிந்து ஹை ஹீல் வைத்த ஷூ அணிந்து தலைக்கு ப்ரில்க்ரீம் தடவி டிப்டாப்பாகக் கிளம்பி விடுவான். வீதியில் ஜமுனாவோடு சேர்ந்து நடந்துபோவதே பெரிய சாதனையாகத் தெரியும்.

பொதுவாக, அவர்கள் இருவரும் வெளியில் போனால், முதலில் கோயிலுக்குத்தான் போவார்கள். கோயில்வாசலில் எப்போதுமே ஜமுனா பூவாங்கித் தலையில் வைத்துக்கொள் வாள். அவள் வாங்கும் பூவுக்கு எப்போதுமே ராம கிருஷ்ணன்தான் காசு கொடுப்பான்— தன்னுடைய பர்ஸில் இருந்து! அப்படிக் காசு கொடுக்கும்போது நெஞ்சு கொள் ளாத பெருமையுடன் சுற்றிலும் ஒரு தடவை பார்த்துக் கொள்வான். ஒரு அழகான கல்லூரி மாணவிக்குப் பூ வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறானே! அந்த மலர்க் காட்சியைத் தன்னுடைய கிளாஸ்மேட் யாராவது பார்க்க மாட்டானா என்று ராமகிருஷ்ணனுக்கு மனம் கிடந்து அடித்துக் கொள்ளும். அப்படி ஒரு சமயம் அவனின் வகுப்பு மாணவன் அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டான். கேட்க

வேண்டுமா ராமகிருஷ்ணனுக்கு? மீனாட்சியம்மன் கோயிலின் கோபுர உச்சியில்தான் நின்றான்!

மறுநாளே அந்தப் பையன், ராமகிருஷ்ணனைப் பிடித்துக் கொண்டான்.

"டேய் ராமகிருஷ்ணா, ஆள் நீ படு குள்ளமா இருந்துக்கிட்டு படு ஜோரான வேலையெல்லாம் பண்றியே... யார்டா அவ?"

"ஸாரி! அதை மட்டும் கேக்காத!"

"எனக்கு மட்டும் சொல்லுடாப்பா. யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன்"

"ஸாரி ப்ரதர்!"

"சரி; எங்கே பிடிச்சே— அதையாவது சொல்லு!"

"கேக்காதேன்னு சொல்லிட்டேனே!"

"ரொம்ப டாப்பா இருந்தா!"

ராமகிருஷ்ணன் பெருமையுடன் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான். கோயில் வாசலில் ஒரு பெண்ணுக்கு அவன் பூ வாங்கிக் கொடுத்த விஷயம் ஹாஸ்டல் பூராவும் ஒரே நிமிஷத்தில் பரவியதோ இல்லையோ, ராமகிருஷ்ணனுக்கு ஒரே நாளில் ஒரு அடி வளர்ந்துவிட்டாற்போல இருந்தது. குள்ளமாக இருக்கிறோமே என்ற கவலையெல்லாம் அடுத்த நிமிஷமே கரைந்துவிட்டது.

ஆனால், இந்தக் கட்டத்தில்தான் ஏதோ ஓர் இனம் புரியாத தாவரம் அவனின் உணர்வுகளில் அரும்புவிட்டது. ஜமுனாவுடன் வெளியில் போகிற சனிக்கிழமை மாலை மட்டும்தான் அவன் சந்தோஷமாக இருந்தான். மற்ற சமயங்களில் எல்லாம் அந்த சாயங்காலத்தின் நினைவாகவே இருந்தான். வேறு யாருடனும் பேசவோ, விளையாடவோ பிடிக்காதவனாக இருந்தான். அதிகமாகத் தனிமையில் இருக்கவே விருப்பப்பட்டான். இந்தச் சமயத்தில்தான்



சிகரெட் புகைக்கும் பழக்கத்தை ஒருவிதச் செருக்குடன் மேற்கொள்ளத் துவங்கினான்.

ஆனால், ஜமுனாவுடன் போகும்போது அவன் சிகரெட் என்ற வார்த்தையை மறந்தும்கூட உச்சரித்துவிட மாட்டான். பொதுவாக, அவர்கள் கோவிலுக்குப் போனால் பொற்றாமரைக் குளப்படிகளில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். டவுன் ஹால் ரோடு காலேஜ் ஹவுஸில் ஏதாவது டிபன் சாப்பிடுவார்கள். அந்த பில்லுக்கும் ராமகிருஷ்ணன்தான் பணம் கொடுப்பான். சில சமயங்களில் ஜமுனா அவளுக்கு வேண்டிய சோப், ரிப்பன், பவுடர் முதலியவை வாங்குவாள். அதற்கும் பணம் கொடுப்பதற்காக ராமகிருஷ்ணன் தன் பர்ஸை எடுப்பான். அதற்கு அவன் பணம் தருவதை மட்டும் ஜமுனா நிராகரித்து விடுவாள். அவனும் ஒவ்வொரு தடவையும் அவள் வாங்குகிற ஹேர் ஆயில், ஸ்நோ போன்ற பொருட்களுக்குப் பணம் தர முயற்சி செய்வான்.

ஒருநாள் அதே மாதிரி சில பொருட்களை வாங்கிக் கொண்டு கடையை விட்டு வெளியில் வந்ததும் ஜமுனா சிரித்துக் கொண்டே சொன்னாள்:

"நீ கல்யாணமெல்லாம் பண்ணி உனக்கு ஒருத்தி வந்து சேருவா பார்—அப்ப அவ வாங்கற சோப்புக்கும் பவுடருக்கும் நீ பணம் குடு. இப்ப எனக்குக் குடுக்க வேண்டாம்."

சரக்கென்று இந்தச் சொல் ராமகிருஷ்ணனின் மனத்தைக் கீறிவிட்டது. ஜமுனா மிகவும் சாதாரணமாகத்தான் சொன்னாள். ஆனாலும் அதன் யதார்த்தம் அவனைத் திகைக்க வைத்துவிட்டது. அவன் திருமணம் செய்து கொள்ளும் பெண்ணுக்குத்தான் அவன் சோப்பும் ரிப்பனும் வாங்கித் தரவேண்டுமென்ற அந்தச் சொல் அவனுள் ஒரு கல்மிஷத்தை விதைத்து விட்டது. அவனில் ஒளிர்ந்து கொண்டிருந்த ஏதோ ஓர் அறியாமையை அச்சொல் களைந்து விட்டது.

அன்று இரவு ராமகிருஷ்ணன் வேறொரு ராமகிருஷ்ணனாக இருந்தான். அவனுடைய மனப் பருந்து வட்டமிட்டுக் கொண்டே இருந்தது. 'ஏன் நான் அவள் வாங்கும் ரிப்பனுக்குக் காசு கொடுக்கக் கூடாது?' என்ற கேள்வியை, தொடர்ச்சியாக சிகரெட் மாற்றி சிகரெட் புகைத்தபடி மனத்தில் கேட்டுக் கொண்டே இருந்தான், திடீரென அவனுக்குக் கோபம் வந்து விட்டது. 'அப்படியென்றால் அவள் கோயில் வாசலில் வாங்கும் பூவுக்கு மட்டும் நான் காசு கொடுக்கலாமோ?' என்று எரிச்சலோடு முனகினான்.

குப்புறப் படுத்துக் கொண்டு ஜமுனாவைத் திட்டினான். 'பூவுக்குக் காசு தர மட்டும் உரிமை இருக்கிறது. சோப் வாங்கித் தர மட்டும் உரிமை இல்லையோ' என்று பொருமினான். இனி அவள் வாங்கும் பூவுக்கும் காசு தரப்போவதில்லை என்று முடிவு செய்தான்.

'நானும் மனுஷன்தானே! எனக்கும் மனசு ஒன்று இருக்கிறதே' என்று கண் கலங்கினான். அடுத்து வரும் சனிக்கிழமைக்கு வன்மத்துடன் காத்திருந்தான்.

எப்போதும் போல சனிக்கிழமை வந்தது. எப்போதும் போல ஜமுனா கோயில் வாசலில் மல்லிகைப்பூ வாங்கினாள் ஆனால், ராமகிருஷ்ணன் எப்போதும் போல அந்தப் பூவுக்குக் காசை எடுத்துக் கொடுக்கவில்லை! வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டிருப்பது போலப் பாசாங்கு செய்தபடி நின்றான்!

இதைச் சிறிதும் எதிர்பாராத ஜமுனா அப்படியே அதிர்ந்து முகம் சிவந்துவிட்டாள். கோபத்துடன் ராமகிருஷ்ணனை ஒரு பார்வை பார்த்தாள்!

''ஸாரி, எங்கேயோ பராக்குப் பார்த்துட்டு இருந்துட்டேன். இரு, இரு இதோ காசு தரேன்'' என்று அவசரமாக மணிபர்ஸை எடுத்தான்! ஆனால், அவனுடைய ஜாலமெல்லாம் ஜமுனாவிடம் பலிக்கவில்லை.



''நீ ஒண்ணும் தர வேண்டாம்!'' என்று சொல்லியபடி அவளுடைய பர்ஸிலிருந்து காசை எடுத்துக் கொடுத்து விட்டாள். முள்ளை முன்னாலேயே குத்தி விட்டாள். பொற்றாமரைக் குளத்துப் படிகளில் உட்கார்ந்திருந்த போது இருவரும் ஒரு வார்த்தைகூடப் பேசிக் கொள்ளவில்லை. ஏனோ மிகப் பெரிய அவமதிப்புக்கு ஆளானவள் போல ஜமுனா முகம் சிவந்து இறுகிப் போயிருந்தாள்.

இதற்குப் போய் ஏன் இவ்வளவு முகம் சிவக்க வேண்டுமென்று ராமகிருஷ்ணனுக்குப் புரியவில்லை. 'எதற்காக இப்படி இறுகிப் போய் உட்கார்ந்திருக்க வேண்டும்? எல்லாம் ஒரு விளையாட்டுத்தானே...' என்றெல்லாம் மனத்துக்குள் நினைத்துக் கொண்டானே தவிர, வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. 'ஸாரி, நான் செய்தது தப்பு என்றால் மன்னித்து விடு' என்ற சொல்கூட வாய் வரை வந்துவிட்டது. ஆனால், வாய்க்குள்ளேயே அந்த வார்த்தையையும் அடக்கிக் கொண்டான். பாவம் அவனுக்குள்ளும் ஒரு சுய மரியாதை உணர்வு...!

''போலாமா?''— மிகவும் வறண்ட குரலில் கேட்டாள்.

இருவரும் எழுந்து நடந்தார்கள். ஆனால், அதே நிசப்தம். அதே இறுக்கம். இவை இரண்டும் ராமகிருஷ்ணனுக்குள் சுருண்டு கிடந்த ஒரு பாம்பைச் சீண்டி விட்டன. அந்தப் பாம்பின் சிரம் படமெடுத்தது. பாம்பை அடக்கப் பார்த்தான்.

''சரி வா, ஓட்டலுக்குப் போய் சாப்பிடலாம்!'' ஜமுனாவைக் கூப்பிட்டான்.

''நான் வரலை. நீ வேணா போய் சாப்பிடு.''

''அப்ப வேற ஏதாவது ஃப்ரூட்ஸ் வாங்கித் தரட்டுமா?''

''எல்லாம் எங்களுக்கு வாங்கிக்கத் தெரியும்!''

ஜமுனாவின் பார்வையும் சொல்லும் ஊசியாகக் குத்தின. ஒரு சின்ன விஷயத்துக்குப் போய் இப்படி

அலட்டிக் கொள்கிறாளே என்ற ஆத்திரம் வந்துவிட்டது ராமகிருஷ்ணனுக்கு. தன்மானம் அவனுள் புகையத் துவங்கி எரிய ஆரம்பித்தது! அவனுடைய கை பாண்ட் பாக்கெட்டில் இருந்த சிகரெட்டைத் தொட்டுப் பார்த்தது! தன்னுடைய பெரிய மனுஷத்தனத்தைக் காட்டிவிட வேண்டியது தானென்ற முடிவுக்கு வந்தான்.

ராமகிருஷ்ணன் ஓரக் கண்ணால் ஜமுனாவைப் பார்த்தான். அவன் சிகரெட் குடிக்கும் விஷயமெல்லாம் அவளுக்குத் தெரியாத விஷயமாயிற்றே! ஜமுனாவைப் பொறுத்த வரையில் அது படுபயங்கரமான விஷயம்கூட!

அதற்கு மேல் ராமகிருஷ்ணன் யோசிக்கவே இல்லை. விருட்டென ஒரு சிகரெட்டை எடுத்து எதிரில் வந்த ஒருவரிடம் தீப்பெட்டி கேட்டு வாங்கி ஸ்டைலாக அதைப் பற்ற வைத்து விட்டான்!

ஜமுனா அதிர்ந்து ஒரு நிமிஷம் அப்படியே நின்றுவிட்டாள்! அவளின் முகம் ரத்தமாகச் சிவந்துவிட்டது. அவனை விட்டுப் பிரிந்து போக விரும்புகிறவள் போல, மிகவும் வேகமாக நடக்கத் துவங்கினாள். ராமகிருஷ்ணனும் சிகரெட் புகையை கப்கப்பென்று விட்டபடி வேகமாக நடந்தான்,

சட்டென ஜமுனா தணிந்த குரலில் சொன்னாள்: ''இனிமே ஒரு நாளும் உன்கூட எங்கேயும் வரமாட்டேன், தெரிஞ்சிக்க...''

அவள் சொன்னது காதில் விழாதவன் போல ராமகிருஷ்ணன் சென்றான், அப்புறம் ஜமுனாவும் பேசவில்லை. அவனும் பேசவில்லை.

ஜமுனாவின் ஹாஸ்டல் நெருங்கிக் கொண்டிருந்தது. அதற்கு மேலும் அவளுடன் அந்த யுத்தத்தை நடத்த ராமகிருஷ்ணனால் முடியவில்லை. சிகரெட்டைத் தூக்கியெறிந்தான். ஜமுனா அதை லட்சியமே பண்ணவில்லை. அவனிடமிருந்து தப்பித்தால் போதுமென்ற நிலையில் விரைந்து நடந்து கொண்டிருந்தாள். ராமகிருஷ்ணனால் அவளின் பாராமுகத்தைத் தாங்க முடியவில்லை.



''ஸாரி ஜமுனா! சத்தியமா இனிமே நான் சிகரெட் குடிக்க மாட்டேன்!'' என்றான் பொருமியபடி.

''நீ சிகரெட் குடிச்சாலென்ன, குடிக்காட்டாத்தான் எனக்கென்ன? இனிமே உன்கூட எங்கேயும் வெளியில வர மாட்டேன். எக்ஸாம் நெருங்கிடுச்சு. நான் படிக்க ஆரம்பிக்கணும்.''

''என் மேல கோவமா?''— கேட்கும் போதே ராமகிருஷ்ணனுக்குத் தொண்டையை அடைத்தது.

''உன்னைக் கோவிச்சுக்கறதுக்கு நான் யார்?''

''நீ என்னோட ஃப்ரெண்ட்!''— பல்லைக் கடித்தபடி சொன்னான்.

ஜமுனா பதிலே பேசவில்லை. அவளின் கண்களில் எதிர்பாராத சூனியம் வந்திருந்தது.

அவளுடைய ஹாஸ்டல் காம்பவுண்டின் உயர்ந்த கதவை கூர்க்கா ஜமுனாவுக்காகத் திறந்து விட்டான்.

வறட்சியான, உயிரே இல்லாத குரலில் ஜமுனா ராமகிருஷ்ணனிடம் விடை பெற்றாள்.

''என்னைப் பார்க்கறதுக்கு இனிமே நீ வரவேணாம், நான் எக்ஸாம்க்குப் படிக்க ஆரம்பிக்கணும்...''

பார்வையில் இருந்து மறையும்வரை ராமகிருஷ்ணன் நின்றான்.

இரவு பூராவும் அவனுக்கு நிம்மதியே இல்லை. ஒரு பூவுக்குக் காசு கொடுக்காமல் சிறிது ஊடல் செய்யப் போய் இப்படியெல்லாம் நிகழ்ந்து விட்டதே என்று மனம் துடித்துக் கொண்டே இருந்தது. அவனைக் கோபிப்பதற்குத் தான் யாரென்று நிஷ்டூரமாகக் கேட்டுவிட்டுப் போய் விட்டாளே என்று இதயம் சஞ்சலித்துக் கொண்டே இருந்தது.

அவனைக் கோபிப்பதற்கு அவளுக்கு இல்லாத உரிமை வேறு யாருக்கு இருக்கிறது? அப்படிக் கோபிப்பதற்கான

தகுதிகூட அவனுக்கு இருக்கிறதே...! அப்புறம் ஏன் பார்ப்பதற்கு வராதே என்று முறித்துக் கொள்ளும் பகை உணர்ச்சி வர வேண்டும்? ஜமுனாவுக்கு ராமகிருஷ்ணன் என்ன, வெறும் ஒன்றுவிட்ட சகோதரியின் மகன் மட்டும்தானா, இல்லை ஜமுனாதான் அவனுக்கு ஒன்றுவிட்ட சித்தியா? இரண்டும் இல்லை.

அந்த மரபு சார்ந்த உறவில் இந்த நெகிழ்ச்சியெல்லாம் இராது. இத்தனை இம்சை வராது. இந்த உறவு வேறு. இந்த சஞ்சலம் வேறு. இந்தக் கோபமும் உளைச்சலும் நிச்சயமாக வேறு வேறுதான்.

அப்படியானால் இந்த உறவு என்ன? இந்த சஞ்சலத்தின் மையம் எது? இந்த இம்சையின் உள் வடிவம் என்ன?

நினைக்க நினைக்க ராமகிருஷ்ணனின் உணர்வுகளில் ஓர் ஒளிக்கோடு தோன்றியது. விநாடிக்கு விநாடி ஒளிக்கோடு ஒளிச் சிதறலாக விரிந்தது. இறுதியில் ஒளிச் சிதறல் ஒளி வண்ணச் சித்திரமாகி எழில்மிக்க காதல் சூரியன் உதயமாகியது!

இரண்டு நாட்கள் ஜமுனாவின் மனமுறிவால் முடங்கிக் கிடந்தவன் கம்பீரமாக எழுந்து நின்றான். அவனுடைய பால்யத்திலேயே அவனுள் விழுந்து கிடந்த விநோத விதை இளமையின் முதல் சுவட்டிலேயே இதமான காதல் தாவரமாகத் துளிர்த்து விட்டது. செழித்து விட்டது. மலர்ந்தும் விட்டது. இனி இந்தத் தாவரத்தை வெட்டி சாய்க்க முடியாது என்பது தெரிந்தது. இனி தெரிய வேண்டியது—இந்தத் தாவரத்தைத் தாங்கிக் கொள்ளும் படலாக ஜமுனா எழுந்து நிற்கப் போகிறாளா என்பதுதான்...

அதையும் பார்த்துவிடலாம் என்ற வேகம் வந்தது ராமகிருஷ்ணனுக்கு. உள்ளத்தில் இருப்பதை அப்படியே ஜமுனாவுக்குத் திறந்து காட்டிவிடும் உற்சாகம் வந்தது. பேனாவையும் பேப்பரையும் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தான்.



என் அன்புக்குரிய ஜமுனாவுக்கு,

என்னுடைய இந்தக் கடிதத்தை நீ சிறிதுகூட எதிர்பார்த்திருக்கமாட்டாய். அதே போல, இக்கடிதம் உனக்குக் கொண்டு வரும் செய்தியும் அத்தகையதே! ஜமுனா, இனி உன்னை நான் பார்ப்பதற்கு வரக்கூடாதென்று அன்றைக்குக் கோபத்துடன் நீ சொன்னதும்தான் என்னால் உன்னைப் பார்க்காமல் இருக்கவே முடியாது என்பது தெரிந்தது.

என்னை மாதிரி உனக்கு வேறு எத்தனையோ உறவுக்காரப் பையன்கள் இருக்கிறார்கள். அதே மாதிரி உன்னை மாதிரி எனக்கும் எவ்வளவோ சொந்தக்காரப் பெண்கள் இருக்கிறார்கள். ஆனால், உன்னோடு பழகியது போல அவர்களில் யாரோடும் நான் பழகியதில்லை. அதேபோல என்னுடன் பழகியது போல நீயும் வேறு யாரோடும் பழகியதில்லை. நம் இருவரின் பழக்கமும் தனி. நம் இருவருடைய உறவும் தனி.

அதே மாதிரி, இனி நம் இருவரின் வாழ்க்கையும் தனியாகவே இருக்க வேண்டும்! இதற்கு மேலும் எனக்குச் சுற்றி வளைத்துப் பேச இஷ்டமில்லை! அதனால் நேரடியாகவே சொல்லி விடுகிறேன். உன்னை நான் காதலிக்கிறேன் ஜமுனா, என் மனமார உன்னை நேசிக்கிறேன்.

சிறு வயதில் உன் காலடியில் புளியங்காய்களைக் கொண்டு வந்து கொட்டியது போல, இப்போதும் உனக்குத் தேவையான சகலத்தையும் உன் கைகளில் கொண்டு வந்து என்னால் கொட்ட முடியும். தயங்காமல் என்னை ஏற்றுக் கொள். உனக்காக நான் எது வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன். நாம் இருவரும் மணம் புரிந்து ஒருவரையொருவர் கணவன் மனைவியாக ஏற்றுக் கொள்வோம். நிஜமாகவே சொல்கிறேன். அந்த வாழ்க்கை சொர்க்கத்திலும் மேலானதாக இருக்கும். உனது அழகான கடிதத்தை எதிர்பார்த்துக் கிடக்கும்.

உனது அன்பன்,
கே. ராமகிருஷ்ணன்

ஒரு முறைக்குப் பலமுறை கடிதத்தைப் படித்த பின், எது வேண்டுமானாலும் நடக்கட்டும் என்ற தைரியத்தோடு ஜமுனாவின் ஹாஸ்டல் முகவரிக்குக் கடிதத்தைப் போஸ்ட் செய்து விட்டான்,

கடிதத்தை போஸ்ட் செய்த மூன்றாவது நாள்— அவன் தான் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறானே... அவளிடமிருந்து எந்த பதிலையும் காணோமே என்று ராமகிருஷ்ணன் கவலைப்பட்டபடி வகுப்புக்குப் போகாமல் ஹாஸ்டல் அறையில் தனியாக விசனத்துடன் படுத்திருந்தான். லேசாகக் காய்ச்சல் வேறு அடித்துக் கொண்டிருந்தது.

அப்போது வெறுமே சாத்தியிருந்த அறைக்கதவை எட்டி உதைத்துத் திறந்து உள்ளே வந்தார் அவனுடைய ஒன்றுவிட்ட மாமா— அதாவது, ஜமுனாவின் பெரிய அண்ணா. அவரைக் கண்டதும் பதறிப் போய் எழுந்தான் ராமகிருஷ்ணன். மாமாவின் கண்கள் ரத்தமாகச் சிவந்திருந்தன. வேஷ்டிக்கு மேல் அகலமாகக் கட்டியிருந்த நைலான் பெல்ட்டைக் கழற்றிக் கையில் வைத்துச் சுழற்றி விசியபடி அவனைப் பார்த்தார். அவரின் பார்வையைத் தாங்க முடியாமல் ராமகிருஷ்ணன் நடுங்கிக் கொண்டிருந்தான்.

''யாருக்குடா எழுதினே காதல் கடுதாசி, யாருக்கு எழுதறே? அயோக்கிய நாயே. சித்தி முறைடா அவ உனக்கு. சித்தி முறை. தாய் மாதிரி! அவளையா கூப்பிடறே கல்யாணம் பண்ணிக்கலாம்னு? எச்சக்கலை நாயே! உன்னை வெட்டிக் கொன்னாக்கூட பாவம் கெடையாது. பொறுக்கி ராஸ்கல்...!''

—மாமா முடிக்கவில்லை. பளீர் பளீரென அவருடைய நைலான் பெல்ட் கோரமாக ராமகிருஷ்ணனைத் தாக்கியது. முகம், மார்பு, கால் என உடம்பின் ஒவ்வொரு அவயத்தையும் குறி வைத்து பெல்ட் அவனை விளாசிய விளாசலில் பல இடங்களில் ரத்தம் பீரிட்டது. ராமகிருஷ்ணன் வலி தாங்க முடியாமல் அலறினான். அந்தச் சின்ன அறைக்குள் அவனைத் துரத்தித் துரத்தி ஜமுனாவின் அண்ணா பெல்ட்டால் வெளுத்து வாங்கினார்.



மாமாவின் குரல் ரம்பம் போல் ஒலித்தது. ''என்னடா எழுதினே, கல்யாணம் பண்ணிக்கலாம்னா? அயோக்கியப் பயலே! நெஜமாவே அவளுக்குக் கல்யாணம்டா! மாப்பிள்ளை யார் தெரியுமா? பெரிய மில் மானேஜிங் டைரக்டரோட ஸன்! அவசரமா அதுக்குத்தான் அவளைக் கையோட கூட்டிட்டுப் போயிடப் புறப்பட்டு வந்தா, பாவி... உன்னோட கடுதாசியை வச்சு அழுதுகிட்டு இருந்தா. பொறுக்கி ராஸ்கல், என்ன தைரியம் இருந்தா அப்படி எழுதுவே... என்ன திமிர் இருந்தா.'' மீண்டும் அவரின் அகலமான நைலான் பெல்ட் ராமகிருஷ்ணனைத் தாக்கிய வேகத்தில் அவன் நிலைவிழந்து சுருண்டு விழுந்து விட்டான்.

உயர்ந்த கற்சுவரின் உள்ளே. கனத்த சிறைக் கம்பிகளின் பின்னால் இருளில் ஒடுக்கப்பட்டிருக்கும் குற்ற உலக மனிதர்களின் வழக்குச் சரித்திரங்களைப் பார்வையிடும் போது இத்தகைய குரூரமான சிதைவுக் கட்டம் அவர்களின் மன வட்டத்தில் ஈவு இரக்கமின்றி பச்சை குத்தப்பட்டிருப்பதை, சர்வ சாதாரணமாகப் பார்க்கலாம். அறியாமை கலந்த வயதில் மனித மனத்தின் மிக முக்கிய சுபிட்சமான சதுக்கம் கருணையே அற்ற அரக்கத்தனத்தால் இப்படி முற்றிலுமாக நசுக்கப்படும் போது அந்த மனித மனத்தின் வேறு விபரீத புறங்கள் ஓர் அணு உலையாகத் தீப்பற்றிக் கொள்கின்றன. அந்த வெப்பம் மிகுந்த அணு உலையிலிருந்து கிளம்பும் ஒவ்வொரு பொறியும் என்ன உஷ்ணம் கொண்டிருக்கும்? எப்படியெல்லாம் எரிக்கும்? ஆவேசப் படுகொலைகளாகவும், ஆபாசப் பாலுணர்வுக் குற்றங்களாகவும் பரவும், அணு

உலைச் சிதறலுக்கு ஒப்பான தீய செயல்களில் ஈடுபடும் பல்வேறு குற்றவாளிகளுக்கெல்லாம் இந்த ராமகிருஷ்ணனையே ஒரு குறியீடாகக் கொள்ளலாம். ஏனென்றால், பிற்காலத்தில் ராமகிருஷ்ணனையும் அத்தகைய காரியங்களில் ஈடுபடும் குற்றவாளியாகத் திசை திருப்பிச் செலுத்த ஆதாரமாக இருந்தது அந்தக் கருணையே இல்லாத நைலான் பெல்ட் சம்பவம்தான்!

□□□

CONNEMARA PUBLIC LIBRARY
4 - FEB 1999
MADRAS-600 008.
P-168
4-2-99